# அண்ணாவுக்கு 60



ப்பாசிரியர்: A.R. ராமநாதன்

With the best compliments of:

M/S

# Gaiety Theatre

**MOUNT ROAD, MADRAS-2.**

Joint Licencies

PL. CT. SP. SUBRAMANIAM CHETTIAR

PL. CT. PL. PALANIAPPA CHETTIAR

CT. SHENTHILNATHAN CHETTIAR

*Phone No*: 84176

# இந்தியன் பாங்க் லிமிடெட்டில் நீங்கள்

RP
ACCOUNT

## ஒய்வுகாலத் திட்டக்கணக்கு ஆரம்பித்துவிட்டீர்களா?

இல்லாவிட்டால் அருகிலிருக்கும் பாங்கின் கிளைக்குச் சென்று இந்த அபூர்வத்திட்டத்தின் பயனை அடையுங்கள்.

சம்பாதிக்கும்பொழுதே சேமித்து ஒய்வுகாலத்தில் நிம்மதியாக இருங்கள்.

புத்திகூர்மையுடன் சேமித்து வந்து உங்கள் குழந்தைகளுக்குக் கல்விச்செல்வத்தை வழங்குங்கள்.

சேமிப்பது உங்கள் உசிதம். ரூ. 10, ரூ. 100, ரூ. 1000 அல்லது ரூ, 10-ன் மடங்காக எந்தத் தொகையும் சேமித்து அது பெருகுவதை பெருமையுடன் கவனியுங்கள்.

மாதாமாதம் ரூ. 100 வீதம் 60 மாதங்களுக்கு டிபாசிட் செய்து வந்தால் பிற்பாடு 60 மாதங்களுக்கு மாதம் 1க்கு ரூ. 137 வீதம் திரும்பப் பெறலாம்.

மாதாமாதம் ரூ 100 வீதம் 84 மாதங்களுக்கு டிபாசிட் செய்துவந்தால் பிற்பாடு 84 மாதங்களுக்கு மாதம் 1க்கு ரூ. 155 வீதம் திரும்பப் பெறலாம்.

மாதாமாதம் ரூ. 100 வீதம் 120 மாதங்களுக்கு டிபாசிட செய்து வந்தால் பிற்பாடு 120 மாதங்களுக்கு. மாதம் 1க்கு ரூ. 186 வீதம் திரும்பப் பெறலாம்.

THE INDIAN BANK LTD. ESTD. 1907

## இந்தியன் பாங்க் லிமிடெட., சென்னை-1.

"வடக்கு பீச் ரோடின் பழம்பெரும் சீமாட்டி"
எமது 211 கிளைகள்
உங்கள் சேவைக்கு காத்திருக்கிறது.

டீ. லக்ஷ்மிநாராயணன்
சேர்மன்.

ELEGANT



இட்லிக்கும், சட்னிக்கும்
பிரசித்தமான

# ஸ்ரீராம பவன் லாட்ஜிங்

## 46, தம்பு செட்டித் தெரு, சென்னை-1.

தந்தி : "COCHUTNI"
போன் : 23665 - 27777.
P, B. X. 3 லைன்கள்.

மிதமான கட்டணங்களில்
ஒருவர் இருவருக்கான ரூம்கள்!



சொகுசான நெசவிற்கு சுகமான
ரேயான் நூல்கள்!

## 'ட்ரேயான்ஸ்' ரேயான் நூல்கள்

பல வண்ணங்களிலும் கிடைக்கிறது.

பாரத நாட்டின் ரேயான் நூல்களில் முன் தோன்றியது. பார்வைக்கு பளபளப்பும், மினுமினுப்பும் நிரம்பி, நெசவை சிட்டுவின் பட்டு உடலைப் போல சிலிர்க்கச் செய்கிறது. இவற்றை பூச்சி எதுவும் பாதிக்காது. ஆகையால் நீண்ட காலம் பாதுகாப்புடன் வைத்திருக்கவும் ஏற்றவை.

ஸ்டாக்கிஸ்டுகள் :

# ரேயான் டிரேடர்ஸ்
## பிரைவேட் லிமிடெட்.,

61. செம்புதாஸ் தெரு :: சென்னை 1.

போன் : 21641 தந்தி : CELYARN

கிளைகள் :

சேலம் மதுரை கோயமுத்தூர்

மக்களால் புகழப்பெற்றது!

# ராதா பட்டணம் பொடி




எமது

தயாரிப்புகள்:

ராதாஸ் ஸ்ரீ ஆண்டாள் ஆபீஸர் பொடி

- கிரிஜா பட்டணம் பொடி
- சிவாஜி பட்டணம் பொடி
- சவரன் பட்டணம் பொடி
- பிரம்மா பட்டணம் பொடி
- குமரி பட்டணம் பொடி
- நேதாஜி பட்டணம் பொடி
- ஸ்ரீ கிருஷ்ண பட்டணம் பொடி
- ரேடியோ பட்டணம் பொடி
- ராதா பரிமளம் பொடி
- ஸ்ரீ ஜகன்னாத் பட்டணம் பொடி

*Mfrs.* ராதா & கோ.,

12, T. H. ரோட், :: சென்னை-21.

With the best compliments of :

CT. SHENTHILNATHAN

Proprietor :

★

**KAMADHENU THEATRE**

Mylapore — Madras-4.

Phone No : 85119 (Res)

... 73174 (Theatre)

விவசாயிகளுக்கு வேளாண்மை ஆண்டு முழுதும்
வேலை வாய்ப்பளிக்கும் முழு நேரத் தொழிலும் அல்ல;

விவசாயத்தின் மூலம் கிடைக்கும்
வருமானமும் போதுமானதல்ல.

## கதரும் கிராமத் தொழில்களும்

**விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலை வாய்ப்பளிக்கின்றன.**

* கதர் - கிராமத் தொழில்களை ஆதரிப்பது
* உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்.

**தமிழ்நாட்டுக் கதர் - கிராமத் தொழில் ஆயத்தின்**
**நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்பெற்ற**

* கதர் * கதர்ப்பட்டு * சோப் * தேன் * செக்கெண்ணெய் * தோல் பொருள்கள் * பனைவெல்லம் * சர்க்கரை * மண்பாண்டம் * வார்ப்படங்கள் * பித்தளை, வெண்கலப் பாத்திரங்கள் * பனைப் பொருள்கள்-இன்னும்-

**பற்பல கைநுட்பத் தொழில் பொருள்கள்**
கதர்-கிராமத் தொழில் விற்பனை நிலையங்களிலும்
**சென்னை "குறளகத்"தில் இயங்கும்**
கதர்-கிராமத் தொழில் அங்காடியிலும்
**விற்பனைக்கு உள்ளன.**

வெளியீடு—

**கதர்-கிராமத் தொழில் துறை**
2, சர் தேசிகாச்சாரி ரோடு, சென்னை-4.

With the best compliments of :

## SALEM PRIME TANNING CO.,

**Tanners and Exporters**

**Prop : K. M. Fazulul Ahamed**

1/24 Kathur Sadayappen Street,
PERIAMET,
MADRAS-3.

# THE MUTHIALPET BENEFIT FUND LTD

(Estd. : 1895) — (Tel. : 23660)

54, *Thambu Chetty Street, Madras - 1.*

*Office Hours* : **8 to 11 a. m. 2 to 5 p. m.**

Except **ON FRIDAYS AND OTHER PUBLIC HOLIDAYS**

Accepts **FIXED DEPOSITS** at the enhanced rates of interest as under :

3 Months 6% 1 Year $7\frac{1}{2}\%$

6 Months $6\frac{1}{2}\%$ 2 Years 8%

(Rs. 10,000/- and above will fetch $\frac{1}{2}\%$ in addition)

**INTEREST PAYABLE MONTHLY ON THE 1st OF EVERY MONTH**

On **SAVING DEPOSITS** $4\frac{1}{2}\%$ (Withdrawal by Cheques)

## ALSO ACCEPTS RECURRING DEPOSITS : NO ENTRANCE FEE

**Amount receivable at the end of each period.**

| Monthly Desposits | 24 months | | 36 months | | 48 months | | 60 months | | 72 months | | 84 months | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Rs. | Rs. | | Rs. | | Rs. | | Rs: | | Rs. | | Rs. | |
| 5 ... | 128 | 50 | 199 | 00 | 274 | 00 | 359 | 50 | 449 | 50 | 550 | 00 |
| 10 ... | 257 | 00 | 398 | 00 | 548 | 00 | 719 | 00 | 899 | 00 | 1,100 | 00 |
| 25 ... | 642 | 50 | 995 | 00 | 1,370 | 00 | 1,797 | 50 | 2,247 | 50 | 2,750 | 00 |
| 50 ... | 1,285 | 00 | 1,990 | 00 | 2,740 | 00 | 3,595 | 00 | 4,495 | 00 | 5,500 | 00 |
| 100 ... | 2,570 | 00 | 3,980 | 00 | 5,480 | 00 | 7,190 | 00 | 8,990 | 00 | 11,000 | 00 |
| 200 ... | 5,140 | 00 | 7,960 | 00 | 10,960 | 00 | 14,380 | 00 | 17,980 | 00 | 22,000 | 00 |
| 300 ... | 7,710 | 00 | 11,940 | 00 | 16,440 | 00 | 21,570 | 00 | 26,970 | 00 | 33,000 | 00 |

**Rs.** 5/- and multiples thereof up-to Rs. 300/- received.

(Loans against the Paid-Up Subscription can be availed off.)

Loans :—On Fixed Deposits $1\frac{1}{2}\%$ over and above the rates on Deposits.

Recurring Deposits at $7\frac{1}{2}\%$ to $10\frac{1}{2}\%$

**P. M. Varatharajulu Naidu,** G.D.A, F.C.A., *President.*

**P. Bhoopathi,** B.Com. *Managing Director.*

*With the best compliments of:*



Pro: T. M. ABDUL GAFFAR

# SALEM TRADING Co.,

## Tanners and Exporters & General Merchants

20. HaJee Devan Mohaiteen Street
Mohamedpura : Salem-1.

---

## South India Corporation Private Limited

ENGINEERS & CONTRACTORS

*Cochin-3. Coimbatore-18. Madras-1.*

Design & Construction of Factories – Rcc Reservoirs Rcc overhead tanks, Chimneys, cement, silos, ETC. ETC.

Structural Fabrication & Erection of all types of Factories - Mills, erection of plant and Machinery.

Sanitary & water Supply installations

and

Dealers in Hardware, Sanitary, Clearing, Shipping and Transporting Agents.

**Branches all over South**

---

## Shrine Vailankanni School

17, Venkata Narayana Road
**T. NAGAR : : MADRAS-17.**

We Pray to "Our lady of Health of "Shrine Vailankanni" that she may bless "Anna" with a healthy and prosperous long life.

Correspondent, Staff and
Children of the School

போன்: 25557

எங்கள் அன்புகனிந்த நல்வாழ்த்துக்கள்

**"தாஜ்மஹால் லாட்ஜ்"**

36, முத்துமாரி செட்டி தெரு

சிங்கப்பூர், பினங்கு, அந்தமான் பிரயாணிகளுக்கு ஏற்ற வகையில் துறைமுகம், ஹைகோர்ட் சமீபம் நவீன வசதிகளுடன் அமைக்கப்பெற்ற எங்கள் லாட்ஜில் தனியாகவும், குடும்பத்துடனும் தங்கிச் செல்ல வசதியுண்டு.

மற்றும் ரயில், கப்பல், விமானம், விசா, பாஸ்போர்ட் முதலிய சேவைகளும் உண்டு.

மானேஜர்
**N. சிவராஜ்** Ex M.L.A.
நாகப்பட்டணம்

உரிமையாளர்
**M.N. ஹசன்**

**விஜயம் செய்யுங்கள்!**

**"சகாயி ரெஸ்ட்டாரென்ட்"**

அறுசுவை அசைவ உணவுகளுக்கு

மிகச் சிறந்த ஹோட்டல்

12. ஸ்டேஷன் வியு ரோட்
கோடம்பாக்கம்
(ரயில்வே ஸ்டேஷன் எதிர்புறம்)

**உங்கள் விருந்துகளுக்கும் வைபவங்களுக்கும் எங்களை அணுகுங்கள்.**

*For*

Latest ... ... Designs
Best ... ... Quality
Lowest ... ... Price

IN

SHIRTING & SUITING
COTTON TERYLENE
from Rs. 7 to Rs 70/-
Per Bit
Step in at

**Vinos Suiting paradise**

**7D. Gandhi Irwin Road**
**MADRAS**

Opposite: EGMORE AUTO SIGNAL

For MOD ... MOD ... MOD
Tailoring Super Fit Tailors

*With best compliments from:*

**Madura South India Corporation Private LTD.**

Dealers in Iron & Steel

80, Sembudoss Street,
MADRAS—1.

GRAMS: "MUSIC" Phone 22725 / 23291

# நுழைவாயில்

அண்ணா அவர்களின் அறுபதாவது பிறந்த நாளினைக் கோலாகலமாகக் கொண்டாட வேண்டும் எனத் தமிழகம் எண்ணிக்கொண்டிருந்தபோது—அவர் அமெரிக்கா சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டிய அளவுக்கு அவரை நோய் பற்றிக் கொண்டிருப்பதாக வந்த செய்தி எல்லோரது இதயங்களிலும் ஈட்டியெனப் பாய்ந்தது.

மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து அமெரிக்கா புறப்பட்ட அண்ணா அவர்களை நெஞ்சு விம்ம, கண்ணீர் தளும்ப, உதடுகள் துடிதுடிக்க — 'உத்தமனே, உடன் பிறப்பே. உயிரே, குலவிளக்கே, குடும்பத் தலைவனே, நலமுடன் திரும்புக' என்று ஆயிரக்கணக்கான இதயங்கள் நல் வாழ்த்துக் கூறி வழி அனுப்பி வைத்தன.

தமிழகத்தின் நாலரைக் கோடி நல்லிதயங்களும் 'அண்ணா' சிரித்த முகத்துடன் திரும்பி வரவேண்டுமென பிரார்த்தனை செய்தன.

இத்தனை பேருடைய அன்பு, வேண்டுதல், பிரார்த்தனை எதுவும் வீண் போகவில்லை. விழா எடுக்கும் அளவுக்கு வெற்றிச் செய்தி தந்தார் டாக்டர் மில்லர்!

மருத்துவர்கள் மனிதர்களைத்தான் காப்பாற்றுவார்கள். டாக்டர் மில்லரோ 'தெய்வத்தை'க் காப்பாற்றிய பெருமைக்கு உரியவராகிறார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்

என்று வள்ளுவப் பெருந்தகை கூறியதுபோல, அறிஞர் அண்ணா அவர்கள்,

நடமாடும் தெய்வம்
நம்மோடு வாழுகின்ற தெய்வம்
நம்மை வாழவைக்கும் தெய்வம்!

கழகத் தோழர்கள் மட்டுமே உற்சாகத்துடன் கொண்டாடி வந்த அண்ணா அவர்களின் பிறந்தநாள் விழா, இந்த ஆண்டு பொதுமக்கள் திருநாளாக மாறியுள்ளது.

பாட்டாளித் தோழருக்கு விழா! படி அரிசி அளந்து ஏழைகளின் பசி தீர்த்த முதல்வருக்கு விழா! தமிழ்த் தாயின் தலைமகனுக்கு விழா!

இத்தகைய பெருமைக்குரிய விழாவினை மேலும் சிறப்பிக்கும் வகையில் **'அண்ணாவுக்கு அறுபது'** என்ற இம்மலரை உருவாக்கி, அண்ணாவின் காலடியில் காணிக்கையாக்கியுள்ளோம்.

குறைந்த காலத்தில் இம்மலருக்கு கட்டுரை, கவிதை, வாழ்த்து ஆகியவற்றைத் தந்துதவிய அமைச்சர் பெருமக்களுக்கும், எழுத்தாள நண்பர்களுக்கும், விளம்பரம் தந்து உதவிய அன்பர்களுக்கும் அறிவு நூலகத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

வாழ்க அண்ணா! வெல்க தமிழ்!
வளர்க தமிழக அரசின் புகழ்!



# ஆயிரம் ஆண்டுகள் வாழ்க!

நமது வாழ்க்கையில் எத்தனையோ பொருட்களைப் பார்க்கிறோம்! காட்சிகளைக் காணுகிறோம்; அவற்றை மறந்து விடுகிறோம். ஆனால் அண்ணா அவர்கள் நமது சாதாரண வாழ்வில் காணும் பொருளை-காட்சியை வைத்து காலத்தால் அழியாத வார்த்தைக் கோவையை-கருத்துக் கோவையைத் தந்திருக்கிறார்.

அடுத்த வீட்டு மல்லிகையை நாம் நாள் தோறும் பார்ப்பவர்கள் தான்; அதன் மணத்தை நுகர்பவர்கள் தான்; ஆனாலும் அண்ணா அவர்கள் அந்தச் சாதாரண உண்மையை வைத்து ஒரு பெரும் தத்துவத்தை எடுத்துக் கூறினார்கள்; அதுதான் மாற்றான் வீட்டுத் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்பது!

மாற்றார்களிலும் நல்லவர்கள் உண்டு; அவர்களை நாம் மதித்திட வேண்டும் என்ற கருத்தை மாற்றான் வீட்டுத் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்ற உயர்ந்த உவமையைக் கூறிய-அழியாத ஒரு வாக்கிய அமைப்பு-தத்துவப் பொன்மொழியைத் தந்தார்கள்.

சுந்தரம்பிள்ளை அவர்கள் எழுதிய மனோன்மணீயம் எனும் நூலை நாமும் படித்திருக்கிறோம். அதில் வரும் ஒரு சொற்றொடர் 'இப்படை தோற்கின்—எப்படை ஜெயிக்கும்?' என்பது! அதை அறிஞர் அண்ணா அவர்கள் மொழியுரிமை—இன உரிமை காக்கும் நமது படைக்கு ஒப்புவமை காட்டி அந்தச் சொற்றொடருக்கு உயிர் தந்தார். தம்பியுடையான் படைக்கஞ்சான் என்பது பழமொழி! அந்தப் பழமொழிக்கு புது மெருகேற்றி—அந்தச் சொற்களுக்கே ஒரு சுவையேற்றியவர் அண்ணா.

பொதுப்பணி அமைச்சர்

கலைஞர் மு. கருணாநிதி

ஏதையும் தாங்கும் இதயம் வேண்டும்—என்று கூறி நெஞ்சுறுதி பெறும் வழி வழகு மிக்க வார்த்தைகளைத் தந்தவர் அண்ணா!

கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு என்ற முப்பெரும் நெறிகளைத் தந்தவர் அண்ணா!

ஏதோ க-க-க-என்பதற்காக சொல்லியிருக்கிறார் என்று ஆரம்பகாலத்தில் சொன்னவர்கள்கூட, அது எத்தகைய ஒரு தாரக மந்திரம் என்பதைப் பின்னர் உணர்ந்தார்கள்; போற்றினார்கள்!

முன்பு அண்ணா அமெரிக்கா சென்ற போது அங்கு அவர் நிருபர்களைச் சந்திக்க மாட்டார்; முகத்தை மூடி முக்காடு போட்டுச் செல்கிறார் என்று கூறினார்கள். ஆனால் அமெரிக்கா சென்ற அண்ணா அவர்கள் தமது அறிவாற்றலால் நிருபர்களை மட்டுமல்லாமல் அந்த நாட்டினரையே மகிழ்விக்கச் செய்தார்.

அறிஞர் அண்ணா அவர்களைப் பார்த்து அந்த நாட்டு நிருபர்கள் யாரையும் திணறடிக்கும் ஒரு கேள்வியைக் கேட்டார்கள். 'இந்த அமெரிக்கத் தேர்தலில் யார் வெற்றி பெற வேண்டும்? என்று நினைக்கிறீர்கள்?" இதுதான் அந்தக் கேள்வி.

அவசர அரசியல்வாதியாக இருந்திருந்தால் யாராவது ஒருவர் பெயரைச் சொல்லியிருப்பார்கள்.

அண்ணா அவர்கள் சாதுரியமாக இந்தியாவுக்கு யார் அதிகமாக உதவி தருவார்களோ அவர்கள் ஜெயிக்க வேண்டும்—என்று கூறினார். அப்படியானால் யார் ஜெயிப்பார்கள் என்று மீண்டும் நிருபர்கள் கேட்டார்கள். அதற்கும் சளைக்காமல் அறிஞர் அண்ணா அவர்கள் சாதுர்யமாக 'யார் அதிகம் ஓட்டு வாங்குவார்களோ அவர்கள் ஜெயிப்பார்கள்' என்றார். அத்தகைய சாதுரியமான அறிவுடையவருக்கு—நமது அண்ணனுக்கு சிலை எடுக்கிறோம்.

ஏன் அண்ணாவுக்கு நாம் சிலை எடுக்கிறோம்? அவர் நம்மைச் சிறை எடுத்தவர், நம் உள்ளங்களைச் சிறை எடுத்தவர். ஆகவேதான் நாம் அவருக்குச் சிலை எடுக்கிறோம்

இன்று தமிழகத்தில் அண்ணா அண்ணா எனும் வாழ்த்தொலி நீக்கமற நிறைந்து ஒலிக்கிறது.

மழலைமொழியிலும், அண்ணா அண்ணா எனும் வாழ்த்தொலி கேட்கிறது பல்லற்ற பாட்டி மொழியிலும் அண்ணா அண்ணா எனும் வாழ்த்தொலி கேட்கிறது. அத்தகைய முறையில் தமிழகத்தின் நாலரைக் கோடி இதயங்களையும் வென்றவர் அறிஞர் அண்ணா அவர்கள்!

தம்பிமார்களை பாசத்தில் பிணைப்பவர், தமிழகத்தின் நல்வாழ்வுக்கே அறிவாற்றலைப் பயன்படுத்துபவர் என்பதை விளக்குபவைதான் அண்ணாவின் ஒன்றரை ஆண்டுக் கால சாதனைகளாகும்.



# அண்ணா வாழ்க!

கவிஞர்
சுரதா

மண்தரையைப் பகுதியென்று வைத்துக் கொண்டால்
மாமலையே மண்தரைக்கு விகுதி யாகும்!
விண்வெளியைப் பகுதியென்று சொன்னால், அந்த
விண்வெளிக்குப் பகலிரவே விகுதி யாகும்;
கண்விழியைப் பகுதியென்று கூறின் அந்தக்
கண்விழிக்கு விகுதியதன் இமையே ஆகும்!
தண்ணமுதப் பேரறிஞர் அண்ணா வுக்குத்
தலைவணங்கும் தம்பிகளே விகுதி யாவர்!

குத்தகைப்பேச் சாளர்களும்; நொண்டிக் கொள்கை
கொண்டோரும்; அண்ணாவை இதற்கு முன்னர்
பத்தியத்திற் காகாத பழமாம் வாழைப்
பழமென்று கருதிவந்தார்; ஆனால் இன்றோ
முத்திரைப்பொன் முதலமைச்சர் திறனைக் கண்டு
மூக்கின்மேல் விரல்வைத்து வியக்கின் றார்கள்
புத்தகத்தால் வீடுகட்ட விரும்பும் அண்ணா
பூக்களிலே தாமரைபோல் விளங்கு கின்றார்!

வானத்தின் வயதறியோம்; எந்த நாளும்
வற்றாத கடல்வயதை அறியோம்; மின்னும்
மீனத்தின் வயதறியோம்; ஆனால் நாடே
மெச்சுகின்ற அறிஞர்வய தறிவோம்; இங்கே
ஏனத்தில் தேன்வடிக்கும் மக்கட் கெல்லாம்
ஏட்டினிலே தேன்வடித்து வழங்கி, நாட்டின்
மானத்தைக் காத்துவரும் அண்ணா வுக்கு
வயதென்ன? அறுபதாம்! ஆறு பத்தாம்!

வல்லவரும் நல்லவரும் நீண்ட காலம்
வாழ்ந்துவரின் பயனுண்டு; பொருளு முண்டு
பல்லவரும் பாண்டியரும் போலே; பாட்டுப்
பசிதீர்த்த பாவேந்தர் புகழைப் போலே
எல்லைதரும் மண்முட்டை உலகம் தன்னில்
இடம்பெயர்ந்து செல்லுகின்ற கீர்த்தி பெற்ற
சொல்லறிஞர் நல்லமுத லமைச்சர் வாழ்நாள்
தொடர்போலும் தொகைபோலும் வளர்தல் வேண்டும்!

ஆறுபத்தும் அதைத்தாண்டிச் செல்லும் பத்தும்
அடுத்துபல பத்தாண்டும்; சிறந்த வாழைத்
தாறுபத்தில் ஒட்டியுற வாடும் காய்கள்
தருகின்ற தொகைபோலும்; வைகை போலே
வேறுபத்துப் பதினைந்து நதியில் தூங்கும்
வெண்மணலின் தொகைபோலும்; ஆயுள் பெற்றுப்
பேறுபத்தும் ஓராறும் நிரம்பப் பெற்றுப்
பெருவாழ்வு வாழ்கவென வாழ்த்து கின்றேன்.

# தமிழக மக்களின் ஆசை !

நெடுங்கால உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்த தமிழர் சமுதாயத்தைத் தட்டி யெழுப்பி அதைப் புத்துலகப்பாதை யில் அழைத்துச் செல்லும் தளபதி யாக விளங்குபவர் அறிஞர் அண்ணு அவர்கள்.

அவர் தமிழ் நாட்டின் பழைய நிலே அறிந்தவர். தமிழக மக்கள் கோழைகளாய்க் குன்றலாகாது, காளே களாய் வாழ்தல் வேண்டும் என்று ஆசைப்படுகின்றவர்.

"நோய்நாடி, நோய்முதல்,
நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்ற வள்ளுவர் முறையை கை யாளுதல் வேணடும் என்பது அவர் கொள்கை.

அவரிடம் அவசர சிந்தனே கிடை யாது. அவ்வருடைய சொல்லிலும், எழுத்திலும் ஒரு தெளிவான பண்பு உண்டு. படிப்பவை, கேட்பவை அனேத்தும் அவர் உள்ளத்தில் பசு மரத் தாணிபோல் பதியும்; பின்னர் அவை ஊற்றுப் பெருக்கென கோர் வையாக ஓடிவரும். கருத்துக்களேத் தெளிவு படுத்தி "தீஞ்சுவைச் சொற் களில் இனிமையாகக் கூறும் கலே யில் அண்ணு தன்னிகரற்றவர். அவ ருடைய சொற்ருெடர்களேக் கேட்டு வாயூறிப் போகாத மக்களே இன்று இல்லே" என்று துணிவுடன் கூறலாம்.

அவர் அடியெடுத்து வைக்கும் 60ம் ஆண்டு சிறப்புப் பெற்றதாகும். எண்ணற்ற மக்களின் இதயக் கொலுவிலே வீற்றிருந்த அவருக்குப் புதுப் பொறுப்பு வழங்கப் பட்டிருக் கிறது. தமிழக மக்கள் தி. மு. கழ கத்தை அரியணே ஏற்றியிருக்கிரு கள். ஆட்சிப் பொறுப்பை ஏற்ற சில மாதங்களுக்குள் தி. மு. க. ஆட்சி தனது நிர்வாகத்திறனேயும், இந்த ஆட்சி ஏழைகள் நலனேக் கருதும் ஆட்சி என்பதையும் புலப்படுத்தி விட்டது. படி அரிசித் திட்டம் அகில இந்தியாவும கண்டு வியக்கும் திட்ட மாகச் செயல்பட்டு வருகின்றது. ஏழை எளியவர்களின் பசிக் கொடுமை நீங்கவும், விலேவாசி குறையவும் இது வழி வகுத்து விட்டது. பயணச் செலவுகள் குறைக்கப்பட்டுள்ளன.

இத்தனேக்கும் காரணமானவர் நமது அண்ணு. அவர் சொல்கிருர்; சொன்னதைச் செய்கிருர். அவர் நீண்டநாள் வாழ்ந்து தமிழகத்துக்குச் செழுமையும், வளமும், கீர்த்தியும், புகழும் பெற்றுத் தரவேண்டும் என் பதே தமிழக மக்களின் ஆசை.

சுகாதாரத்துறை அமைச்சர்

சாதிக்பாட்சா

# வாழ்க! வாழ்க!

படிப்பறிவைப் பகுத்தறிவுக் கடமை யாக்கிப்
பலதுறையில் சீர்திருத்தம் பண்ண வெண்ணும்
துடிப்புடைய தொண்டர்படைத் தலைவ னாகிச்
சொல்லடுக்கும் திறமையினால் துணை மிகுந்து
படிப்படியாய் முன்னேறிப் பலம் மிகுந்து
பாராளும் உரிமையையும் பற்றிக் கொண்ட
அடிப்படையில் அன்புகொண்டு செயலே ஆற்றும்
அறிஞர்அண்ணா பலநலமும் அடைந்து வாழ்க!

நாமக்கல் கவிஞர்

**வெ. இராமலிங்கம்**



# அண்ணாவின் பாத்திரப் படைப்பு

1

நல்லதம்பி ஒரு இலட்சியவாதி! கடுகடுத்த முகமும் கருஞ்சிவப்பான கண்ணும், சிறி விழும் பழக்கமும், சிரிக்கத் தெரியாத பண்பும கொண்ட இலட்சியவாதி அல்ல; சிரிப்பின் மூலம் சிந்தனையைத் தூண்டி, இலட்சியத்தைப் பரப்பும் ஒரு நகைச்சுவையாளன்! எங்கோ கிராமத்தில் இருந்த அவனைத் தேடி ஒரு ஜமீன் பட்டம் வருகிறது. இவனோ திகைப்போடு அதை ஏற்றுக் கொள்கிறான். ஜமீன் பட்டத்துக் குரியவனை மணக்க ஒரு பெண்ணும் அந்த அரண்மனையிலே இருந்தாள்.

நல்லதம்பியோ இவைகளைக் கவனியாது ஜமீனுக்குரிய நிலபுலன்களை வாரியிறைக்கிறான் ஏழை மக்களுக்கு. மக்கள் மனம் குளிர்ச்சியடைகிறது! 'நாட்டுக்கு ஒரு நல்லதம்பி இருந்திட்டாலே போதும், நாடு நகரம் செழிக்கும் உழவன் மனதுபோல!'—என்று மகிழ்ச்சிப்பண் பாடுகின்றனர்.

பொருளாதாரத்துறையில் மட்டுமல்ல; சமுதாயத்துறையிலுள்ள பழக்கங்களை, பணப்பித்தைப் போக்குகிறான், நல்லதம்பி. ஒரே சேலையை தாயும் மகளும் கட்டிக் கொள்ளும் கொடுமையையும், ஜமீனில் நூற்றுக்கணக்கான புடவைகள் நிற்கும் பெட்டிகளில் தூங்குவதையும் கண்ட நல்லதம்பி அந்தப் புடவைகளை எடுத்து, புடவையில்லாதவர்களுக்குத் தருகிறான்!

—இப்படி வேடிக்கை நிகழ்ச்சிகள் மூலமாகவே வேகமாக வளர்ந்து வரும் பொதுவுடைமைத் தத்துவத்தை—புதுமைக் கருத்துக்களை விளக்கியிருக்கிறார் அண்ணா, 'நல்லதம்பி' எனும் படத்தின் மூலம்! கலைவாணர் சொல் வண்ணமும், அண்ணாவின் எழுத்து வண்ணமும் சேர்ந்த அந்தப் பாத்திரம் நினைத்துப் பார்க்கப் பார்க்க நகையூட்டுவது; நல்லின்பம் ஊட்டுவது! நல்ல கருத்துக்களை நகைச்சுவை கொண்டு கதாநாயகன் பாத்திரம் தாங்குவோர் வாயிலாகச் சொல்ல முடியும்—என்பதை முதன் முதலில் சொன்னவர் அண்ணாதான்!

2

சிவாஜி மாபெரும் வீரன்; செக்கர் வானமென, பூமியில் எதிரிகளின் இரத்தத்தைப் பீறிட்டுப் பரவச் செய்து, வாளின் சுழற்சியிலே வெற்றி மாலை சூடியவன். 'மலைஎலி' எனப் புகழப்பட்ட அவன் நடத்திய ஆற்றல் மிகுந்த சிறு படைக்கு முன்னே, மாபெரும் மொகலாய ஏகாதிபத்தியத்தின் படை சிதறியோடியது.

வீரந்துள்ளும் சிவாஜியின் சரித ஏட்டிலே, ஒட்டியிருக்கும் மாசுதான் காகபட்டர். நீறு பூசிய மேனியையும், நிஷ்டை புரியும் நேர்த்தியையும் கண்டதும், வாளின் துணை கொண்டு புதியதோர் நாடு சமைத்த சிவாஜி மெய் மறந்தான்; தலை குனிந்தான்; தெண்டனிட்டான்.

மெல்ல மெல்லத் தான் கண்ட வீரக்கனவுகளின் ஈரச்சுவட்டை அழித்துவிடும் அளவிற்குப் 'பக்தி' வெப்பத்தைத் தன் உள்ளங்களில் ஏற்றிக்கொண்டு, துணைக்கண்டத்து மன்னர்கள் பரம்பரையாகச் செய்து வரும் 'வரலாற்றுக் குற்றத்தை'ச் செய்தான். வீர எண்ணத்தை மண்ணாக்கி விட்டு, முடிவில், ஒருபிடிசாம்பல்தானே'—எனும் தத்துவத்தை நோக்கி ஓடித் தன் அழிவைத் தேடிக் கொண்டான்!

இத்தகைய அருமையான பாத்திரத்தை 'சந்திரமோகன்' நாடகத்தில் சந்திக்கிறோம். மக்களின் காவலனாய் இருக்க வேண்டியவன், 'மகேஸ்வரனை' நம்பி—'அவர் தாசர்'களை நம்பி தங்களையும் வரலாற்றையும்

அசுத்தப்படுத்திய மன்னர்களின் வரலாற்றை சிவாஜி பாத்திரத்தின் மூலம் போதிக்கிறார், நாடகப் பேராசிரியர் அண்ணா!

3

மக்கள் போற்றும் இசைச் செல்வன் மதிவாணனுக்கு ஒரு தங்கை; அவளுக்கொரு காதலன். காதலர்கள் வாழ்வு மண வாழ்வில் முடிய வேண்டும் என ஆசைப்படுகிறான் மதிவாணன். சிறு கோட்டிற்குள்ளேயே அவனுடைய இலட்சியம் நின்று விடுகிறது. அதற்காக அவன் அரண்மனைப் பாடகனாகிறான்.

குடும்பப்பற்று நாட்டுப்பற்றாக மலர்கிறது, நாட்டிலுள்ள புரையோடிப்போன பகுதிகளைப் பார்க்கும்போது! அவனுடைய இலட்சிய எல்லை விரிகிறது! சொர்க்கம் என்றும், பாவமன்னிப்புச் சீட்டு என்றும் கூறி ஏமாற்றும் அரசாங்க விருது பெற்ற சாமியார்களின் போலிச் செயலை ஊர் முழுதும் பரப்புகிறான் பண்களில்!

அரசாங்கம் சீறுகிறது. ஆரம்பத்தில் எந்தக் குடும்பத்தில் அவன் இலட்சியம் குறுகிக் கிடந்ததோ—அந்தக் குடும்பம்—அவன் குடும்பம் சீரழிக்கப்பட்டது; ஆம்; அவன் தங்கை கற்பழிக்கப்பட்டாள்! தங்கையின் காதலன் கோர உருவாக்கப் பட்டான். மதிவாணன் ராஜத்துரோகியானான்; 'நாத்திக'னானான்!

என்றாலும், மதத்தின் பெயரால் மக்களை வாட்டும் மதோன்மத்தர்களின் பொய்த் திரை விலகுமட்டும் போராடினான்! கடைசியில் வெற்றியும் பெற்றான்!

—இத்தகை ஒரு 'இலட்சியபாத்திரத்தை' நாம் 'சொர்க்கவாசல்' சினிமாப்படத்தில் சந்திக்கிறோம். சாதாரண மனிதனின் ஆசாபாசங்களையும், அவனே நாட்டுப்பற்றுக் கொண்டுவிட்டால் அந்த, ஆசைகளைத் துறந்து லட்சியமுகட்டை நோக்கி எப்படிப் பறக்கிறான் என்பதையும் அப்பாத்திரம் அழகுறக் காட்டுகிறது. பார்ப்போருக்கும் இலட்சியப்பற்றை ஊட்டும்படி அழகுற அமைந்த மதிவாணன் பாத்திரம் அண்ணாவின் பேனா படைத்த, காலத்தில் அழியாத பாத்திரங்களில் ஒன்றாகும்!

4

தந்தையைக் காப்பாற்றப் பணத்தோடு வந்த அவன் கண்ட காட்சி என்ன? தன்னை வளர்த்துவிட்ட தந்தை, வளர்ந்து விட்ட மரத்தில் பிணமாகத் தொங்கக் கண்டான். 'ஐயோ!'—எனக் கதறினான்; அழுது புரண்டான்! 'இந்த அவல முடிவுக்கு வேதாசல முதலியார் தான் காரணம்!'—என்று உணர்ந்தான். கொதித்தெழுந்தான்; கறுக்கரிவாளைத் தீட்டினான்.

அங்கு வந்த அவன் நண்பன், 'கத்தியைத் தீட்டுவது மடமை! உன் புத்தியைத் தீட்டு'-என்று உபதேசிக்கிறான். அவனுக்கு அறிவு உதயமாவதுபோல் தோன்றுகிறது! ஆனால், தன்னை நம்பாது, மாகாளியை நம்புகிறான். அவளை நம்பினால், தன் துன்பம் நீங்கும்; அநியாய இன்பத்தில் வாழும் வேதாசலங்கள் வீழ்வார்கள்'-என நம்பி ஆறுகால பூஜை நடத்துகிறான்!

ஆனால், 'வேதாசலம் ராவ்பகதூர் பட்டம் பெறுகிறான். மேலும் கோலாகலமாக வாழ்கிறான்!–என்பதை அறிந்த அவன் ஓடுகிறான், ஆலயத்திற்கு! என் கைகளை நம்பாது, இந்தக் கல்லுரு எனக்குக் கை கொடுக்கும் என நம்பினேனே!' குமுறி ஆவேச மிகுதியில் ஆலயப் பொருட்களைச் சூறையாடுகிறான்!

தந்தையின் பேரிலுள்ள பாசம், குழந்தை உள்ளம், ஆத்திர உணர்ச்சி, வழிப்போக்கர் பேச்சைக் கேட்டு 'காளி கருணை செய்வாள்'-என நினைக்கும் சபலபுத்தி-தெய்வம் அவனுக்குத் துணை நிற்கவில்லை என்று தெரிந்ததும் தெய்வத்தையே சூறையாட நினைக்கும் ஆவேச உணர்ச்சி!—இத்தனை 'குணபேதங்களை' உள்ளடக்கிய ஒரு அருமையான பாத்திரத்தை உருவாக்கி, நம்மை அப்பாத்திரத்தோடு ஆட்டிப் படைத்துக் கண்ணீர் வடிக்கச் செய்கிறார் அறிஞர் அண்ணா! இன்னும் தமிழர் தம் இலக்கிய மனத்திரையில் அழியாத ஓவியம் 'வேலைக்காரி' படத்தில் வரும் ஆனந்தன் எனும் அப்பாத்திரம்!

---

சிங்காரச் சென்னையிலிருந்து—கடற்கரைக் காற்று வீசும் சென்னையிலிருந்து — பதிவுபெறு ஊழியர்களை கதகதப்பான இந்த இடத்திற்கு (காஞ்சிக்கு) மாற்றியது பற்றி சிலர் கவலைப்படலாம்.

கடற்கரைக் காற்று இங்கு இல்லை. ஒருபுறம் வேகவதியும மறுபுறம் பாலாறும் இருக்கின்றன. அவற்றை நீரோட்டம் உள்ளதாக ஆக்கினால் சென்னையை விட குளிர்ந்த காற்றை இங்கே அனுபவிக்கலாம்!

சென்னை கடற்கரை காற்றை மன்னர்கள் அனுபவித்ததில்லை: ஆனால் வேகவதி, பாலாற்றின் காற்றை மன்னர்கள் அனுபவித்திருக்கிறார்கள். அரசு ஊழியர்களை அப்படிப்பட்ட இடத்திற்கு அழைத்து வந்திருக்கிறேன்.

— அண்ணா

SECRETARY TO THE PRESIDENT OF INDIA,
RASHTRAPATHI BHAVAN,
NEW DELHI-4.

No. F. 3-M / 68. September 2, 1968

அன்புடையீர்,

ஸ்ரீ C. N. அண்ணாதுரை அவர்களின் 60-வது பிறந்த தினத்தை யொட்டி தாங்கள் "அண்ணாவுக்கு அறுபது" என்ற பெயரில் மலர் ஒன்று வெளியிடுவது அறிந்து ஜனாதிபதி அவர்கள் மிக்க மகிழ்ச்சி அடைகிறார்கள். தங்கள் முயற்சி வெற்றி அடைய ஜனாதிபதி அவர்கள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

உங்கள் அன்புள்ள,

நாகேந்திரசிங்
(செயலாளர்)

---

உதவி ஜனாதிபதி,
இந்தியா,
புது டெல்லி.

முகாம் : பெங்களூர்

செப்டம்பர், 4, 1968.

அன்புடையீர்,

தங்களுடைய ஆகஸ்ட் 29, 68 கடிதம் கிடைத்தது.

தங்களுடைய "அண்ணாவுக்கு அறுபது" மலர் வெற்றியடைய என்னுடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

வி. வி. கிரி

இரா. நெடுஞ்செழியன்
(கல்வி—தொழில் அமைச்சர்)

செயின்ட் ஜார்ஜ் கோட்டை
சென்னை—9.

செப்டம்பர் 2, 1968

தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா அவர்களின் அறுபதாவது பிறந்தநாள் செப்டம்பர் 15-ம் நாள் தமிழக மெங்கும் சிறப்பாகக் கொண்டாடப்பட இருக்கிறது.

அண்ணா அவர்களின் பிறந்தநாள் மக்கள் மகிழ்வுடன் கொண்டாடும் நாளாக, பொது விழாவாக மாறி வருகிறது.

செப்டம்பர் 15-ல் நடைபெறும் விழா, அண்ணா அவர்களின் ஆற்றலுக்கு, சாதனைகளுக்கு, சீரிய பணிக்கு, தியாகத்திற்கு மக்கள் பாராட்டுத் தெரிவித்து மகிழும் விழாவாகும். அந்நாளில் "அறிவு நூலகத்தார்" 'அண்ணாவுக்கு அறுபது' என்ற பெயரில் சிறப்பு மலர் வெளியிடுவது கேட்டு மகிழ்ச்சியடைகிறேன். அம்மலர் சிறப்புற என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளு கிறேன்.

இரா. நெடுஞ்செழியன்

அரு. இராமநாதன்
அறிவு நூலகம்,
233, தம்புச்செட்டித் தெரு,
சென்னை-1.

**கே. ஏ. மதியழகன்**
உணவு-வருவாய்த்துறை அமைச்சர்

தமிழக அரசு
தலைமைச் செயலகம்
சென்னை—9,

12—9—1968

என்றும் இளமையாய் நமது இதயங்களில் குடி கொண்டிருக்கும் எழுத்துலகச் சிற்பிக்கு, அறிவின் பிறப்பிடத்திற்கு, அனுபவ முத்துக்கு அறுபது வயது ஆகிறது. இதுவரை நாம் கொண்டாடி வந்த பிறந்த நாட்களைவிட, இந்தப் பிறந்த நாள் சிறப்புடையதாகத் தோன்றுவதற்கு இதுதான் காரணம். அறுபதாண்டு எய்தும் அண்ணன் நூறாண்டு கண்டு, அதற்கு மேலும் தரணி புகழத் தமிழகத்தில் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்பதே தமிழ் இனத்தின் லட்சியக் கனவு, "அண்ணாவுக்கு அறுபது" மலர், இதனை விளக்க வல்லதாய் அமையும் என நம்புகிறேன். மலர், எழிலும் எண்ணச் செறிவும் மிக்கதாய் வெளிவர வாழ்த்துகிறேன்.

KA மதியழகன்

திரு. அரு. ராமநாதன்,
அறிவு நூலகம்,
சென்னை—1.

**ஏ. கோவிந்தசாமி**
விவசாய அமைச்சர்

செயின்ட் ஜார்ஜ் கோட்டை
சென்னை—9.

# வாழ்த்துச் செய்தி

பேரறிஞர் அண்ணா அவர்களது அறுபதாவது பிறந்தநாள் விழாவின்போது சிறப்பு மலர் ஒன்று வெளியிட இருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சி.

'அண்ணா' என்று அகமகிழ்வோடு எல்லோராலும் அழைக்கப்படும் பேரறிஞர் அண்ணா அவர்கள் அரசியலிலும், சமுதாய சீர்திருத்தப் பணிகளிலும் ஆற்றிய தொண்டு நாட்டில் உள்ள நல்லோரால் போற்றப்படுவது யாவரும் அறிந்ததே. 1967-ம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் தமிழக மக்கள் அளித்த தீர்ப்புக் கேற்ப அரசுப் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட அறிஞர் அண்ணா அவர்கள், புதிய திட்டங்கள் பல தீட்டி, அதன் மூலம் நாட்டின் நலிவைப் போக்கிட அவர்கள் ஆற்றி வரும் தூய தொண்டை யாவரும் உணர்ந்துள்ளனர். தமிழகத்தை தமிழ்நாடு என்று உரிமையோடு அழைக்க வகை செய்தது அண்ணாவின் ஆட்சி. உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த பின்னும் அடைய முடியாத இந்த நிலையை ஏற்படுத்தியவர் அறிஞர் அண்ணா.

கோடிக்கணக்கான மக்களின் இதயங்களிலே உன்னதமான இடத்தைப் பெற்றுள்ள அறிஞர் அண்ணா அவர்கள் நீடூழி வாழவும், மணிவிழா மலர் சிறப்பாக அமையவும் என் நல்வாழ்த்துக்கள்.

ஏ. கோவிந்தசாமி

பதிப்பாசிரியர்,
"அண்ணாவுக்கு அறுபது" மலர்
233, தம்புச்செட்டித்தெரு,
சென்னை—1.

செ. மாதவன்
சட்டம், கூட்டுறவு அமைச்சர்

தமிழக அரசு
தலைமைச் செயலகம்
சென்னை—9.

13—9—1968

தமிழகத்தின் அறிவுக் கடலாகவும், ஆற்றல்சால் ஏந்தலாகவும் விளங்கும் பேரறிஞர் அண்ணா அவர்களின் அறுபதாவது பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில், "அறிவு நூலக"த்தின் சார்பில் சிறப்பு மலர் வெளியிடுவது அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். தமிழ்க் குடும்பங்கள் ஒவ்வொன்றும் தலைமகனாக எண்ணி அவர்பால் அன்பையும் பாசத்தையும் பொழிந்து வருவது நாடறிந்த உண்மை. அண்ணா நமக்கு எல்லாம் தந்து நம்மை ஆளாக்கிவிட்டார். அதனை எண்ணிப் பூரிப்புக் கொள்வதோடு, நன்றி சுரக்க அவரை இந்த ஒப்பற்ற திருநாளில வாயார வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

"அண்ணாவுக்கு அறுபது" கருத்துக் கருவூலமாக வெளிவர எனது நல்வாழ்த்துக்கள்.

மாதவன்

திரு. அரு. ராமனாதன்,
"அறிவு நூலகம்",
சென்னை—1.

மா. முத்துசாமி
உள்ளாட்சித்துறை அமைச்சர்

கோட்டை
சென்னை—9.

2--9—1968

அன்புடையீர்,

வணக்கம். ஏழைகளின் காவலராக விளங்கும் இத்தமிழகத்து முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களின் 60-வது பிறந்ததின விழாவினை ஒட்டி, அறிவு நூலகத்தார் "அண்ணாவுக்கு அறுபது" என்ற அரியதோர் தலைப்பில் நூல் ஒன்றினை வெளியிட்டு அறிஞர் அண்ணாவின் சிறப்பியல்புகளை மக்கள் அனைவரும் உணர தங்கள் பங்கினைச் செலுத்த விழைவது கண்டு அகமகிழ்கிறேன். தமிழர் அனைவர் இல்லங்களிலும் இந்நூல் அழியா இலக்கியமாய் ஒளிவிட விரும்புகிறேன்.

இங்ஙனம,

மா. முத்துசாமி

திரு. அரு. ராமநாதன்,
"அறிவு நூலகம்"
233, தம்புச்செட்டித் தெரு,
சென்னை—1.

DR. RAJAH SIR MUTHIAH CHETTIAR
OF CHETTINAD.

CHETTINAD HOUSE,
ADYAR,
RAJAH ANNAMALAIPURAM,
MADRAS-28.

4 - 10 - 68

தமிழகத்தில் அண்ணா என்று அன்புடன் அழைக்கப்படும் நம் மதிப்பிற்குரிய முதலமைச்சர் மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை அவர்களின் 60 - ஆம் பிறந்த நாளையொட்டி, அறிவு நூலகத்தார் "அண்ணாவுக்கு அறுபது" என்ற பெயரில் சிறப்பு மலர் ஒன்று வெளியிடுவதை அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அவர்கள் முயற்சி வெற்றிபெற வாழ்த்துகிறேன்.

அன்பு, பண்பு, நேர்மை இம்மூன்றும் இணைந்த சேவையின் சின்னம் அண்ணாவாகும். பொறுமையும், திறமையும் நிறைந்த அண்ணா அவர்கள் பல்லாண்டு பூரண நலத்துடன் வாழ்ந்து, தமிழுக்கும், தமிழகத்துக்கும் சேவை செய்ய பிரார்த்திக்கிறேன்.

மு. அ. முத்தையா செட்டியார்

**வீரேந்திரபாடீல்**

மைசூர் முதலமைச்சர்

Cm I 2853168

**விதான சௌதா,**
**பெங்களூர்.**

*3, செப்டம்பர், 1968*

*ஸ்ரீ அண்ணாதுரையின் 60-வது பிறந்த தினத்தை யொட்டி "அண்ணாவுக்கு அறுபது" என்ற மலர் வெளியாவதை அறிந்து மிக மகிழ்ச்சி அடைகிறேன். மலர் எல்லா வகையிலும் வெற்றியடைய என்னுடைய வாழ்த்துக்கள்.*

---

**எம். பக்தவத்சலம்**

**"மல்லிகா"**
**வாரன் ரோடு**
**சென்னை—4.**

அன்புள்ள திரு. ராமநாதன் அவர்களுக்கு,

தங்கள் 9உ கடிதம் கிடைத்தது. நன்றி. நான் முன்னமே வேறொரு பதிப்பாளர் வெளியிடும் சிறப்பு மலருக்கு முதலமைச்சர் அவர்களைப்பற்றி கட்டுரை எழுதியனுப்பியிருக்கிறேன். மற்றொரு கட்டுரை எழுத எனக்கு அவகாசமில்லையென்று வருந்துகிறேன்.

அறிஞர் அண்ணா அவர்கள் பூர்ண குணமடைந்து பல்லாண்டுகள் குறைவற்ற வாழ்க்கை வாழ நல்வாழ்த்து கூறுகிறேன்.

இப்படிக்கு,



இந்தியக் குடியரசுத் தலைவரும் தமிழக முதல்வரும்.



உங்கள் நிர்வாகத்திறமையை டெல்லிவரையில் புகழ்ந்து பேசுகிறார்கள் என்கிறாரோ அண்ணாவிடம் மொரார்ஜி.



ஐக்கியநாட்டுக் கல்வி, சமூகப் பண்பாட்டுக் கழகத் துணைத் தலைவர் ஆதிசேஷையாவுடன் அறிஞர் அண்ணா.



உலகளவு கற்றபின்னும் ஊன்றிப் படிக்கின்ருர் !



உங்கள் ஆட்சிக்கு எப்போதும் என் ஆதரவு உண்டு என்று அண்ணா
மகிழும் வண்ணம் கூறுகிறாரோ ராஜாஜி.



அகில இந்திய முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத் அவர்களுடன் அறிஞர் அண்ணா.



அபூர்வ சந்திப்பில் அரசியலை மறந்து உளம் திறந்து பேசி மகிழ்கின்றனர்
அறிஞர் அண்ணாவும் – காமராஜரும்



விருந்துச் சுவையுடன் விவாதச் சுவையிலும் ஈடுபட்டுள்ளனர் தமிழக முதல்வர்
அண்ணாவும் – தமிழக காங்கிரஸ் தலைவர் சி. சுப்பிரமணியமும்.



ஐ. நா. வில் இந்தியத் தூதர் திரு. ஜி. பார்த்தசாரதி அளித்த வரவேற்பில்
தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா.





சொல்லின் செல்வர் அண்ணாவுடன் சிலம்புச் செல்வர் ம. பொ. சி.



மனம் விட்டுச் சிரித்து மகிழும் மக்கள் தலைவரும் — மக்கள் திலகமும்.



ஏழைகளின் பசி தீர்த்த படி அரிசித் திட்டத்தை
அறிஞர் அண்ணு அவர்கள் துவக்கி வைத்தபோது
எடுத்த படம்.

# உந்தன் வழி நடப்போம்
# உனக்குத் துணையிருப்போம்



## பிறப்பு

தன்னைப் பெற்றோர்களையும், கல்வி கற்றுத் தந்தோரையும் போற்றி வணங்குதல் ஒவ்வொருவருடைய கடமையாகும். அதேபோன்று, தன் அறிவுக்கு ஒளி ஏற்றி உலகத்திலே புகழுடன் வாழச் செய்த தலைவனுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் அந்தத் தலைவனுக்குப் பிறந்த நாள் கொண்டாடுகிறோம்.

ஆப்பிரகாம் லிங்கன், வாஷிங்டன், கென்னடி ஆகியோரின் பிறந்த நாளை அமெரிக்கா கொண்டாடுகிறது. லெனினின் பிறந்த நாளை ரஷ்யா கொண்டாடுகிறது. அண்ணல் காந்தியின் பிறந்த நாள் அக்டோபர் 2-ம் தேதி கொண்டாடப்படுகிறது.

தமிழர் அனைவரின் இதயங்களிலே ஒளி விளக்காகத் திகழும் அறிஞர் அண்ணாவின் பிறந்த நாள் செப்டம்பர் 15-ம் தேதி கொண்டாடப்படுகிறது.

வரலாற்றுச் சிறப்பும், வளமும் நிறைந்த காஞ்சியில் 1909-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15-ம் நாள், பேரறிஞர் அண்ணா "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்" பங்காரு அம்மாளுக்கும், 'இவன் தந்தை என் நோற்றான் கொல்' எனும் வள்ளுவரின் குறளுக்கு இலக்கணமான திரு. நடராசன் என்பாருக்கும் செல்வமாகப் பிறந்தார் பேரறிஞர் அண்ணா.

ஏ. ஆர். ராமநாதன்

தம்பி,

விளக்கம் கேட்டார் – –

வெற்றி கிடைத்தது !

○

பொற்காலம் காண !

O பிடிசாம்பல்
வாய்க்கரிசி
இவை பற்றி என் பாடல்!
குளிர் கொட்ட
மழை வாட்ட
குமுறிக் கிடப்போர்
விழி இழந்தோர்
முடமானோர்
இவர் பற்றி என் கவிதை!
இஃதே என் காவியம் காண்!

தம்பி! 1873-ம் ஆண்டு பிறந்த ஆங்கிலக் கவிஞர் இந்த அளவுக்கு ஏழைக்காகப் பரிந்து பேசிட முனைந்திருக்கிறார்.

இருபதாம் நூற்றாண்டில் இருக்கின்றோம். இந்தக் காலத்திலாவது நாம் இடர்ப்பட்டு, இழிவு படுத்தப்பட்டு இல்லாமையால் தாக்கப்பட்டுக் கிடக்கும் எளியோர்க்கு நல்வாழ்வு கிடைப்பதற்கான முறையில் ஓர் அரசு முறை அமைத்திடும் முயற்சியில் ஈடுபட வேண்டாமா!

செந்நெல் மணியினைக் காணும் போது தம்பி! சேற்றிலே இறங்கி உழுது அதனை விளைவித்த வறியவனை நினைவிற் கொள்ள வேண்டும். பாலையும், பாகையும் பழத்தையும் சுவைத்திடும்போது இவற்றைப் பெற முடியா நிலையிலுள்ள எளியோர்களை வாழ வைத்திட வேண்டும் என்ற எண்ணம் தோன்றிட வேண்டும். உழைப்பின் உயர்வு பற்றி பேசி விடுதல் போதாது.

உழைப்பவன் உருக்குலைய அவன் தரும் செல்வத்தில் சிலர் புரண்டு கிடந்திடும் சீர்கெட்ட நிலையை மாற்றிட வழிகாண வேண்டும். இயற்கை வழங்கிடும் பொருளின் அளவும், தரமும், வகையும் மிகப் பெரிது. அரசு முறை நேர்மையான தாக்கப்பட்டால், எல்லோரும் இன்புற்றிருக்கும் பொற்காலம் கண்டிடலாம்.

அண்ணன்,

அண்ணாத்துரை

படிப்பு

காஞ்சிபுரத்தில் உள்ள பச்சையப்பர் உயர்நிலைத் தொடக்கப்பள்ளியில்தான் இவர் கல்வி பயில ஆரம்பித்தார். காஞ்சிபுரத்திலேயே எஸ். எஸ். எல். சி. வரை படித்தார்.

உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு, கல்லூரியில் பயில வசதியற்றவராக இருந்த அறிஞர் அண்ணா, சிறிது காலம் காஞ்சிபுரம் நகரசபையில் எழுத்தராகப் பணியாற்றினார். அப்போது பின் தங்கிய வகுப்பினர் படிப்பிற்குச் சம்பளச் சலுகை அளிக்கும் திட்டம் வந்தது. அச்சலுகையினால் அண்ணா இண்டர் மீடியட் படித்து 'முதல் வகுப்பி'ல் தேறினார். பின்னர் கல்லூரி முதல்வரின் உதவிகொண்டு சென்னை பச்சையப்பன் கல்லூரியில் எம். ஏ. வரை படித்துப் பட்டம் பெற்றார்.

பள்ளிப் புத்தகங்களை மட்டுமே படித்தவரல்ல அண்ணா. நூல் நிலையங்களுக்கு அடிக்கடி சென்று அறிவுக்கு விருந்து தரும் அரிய நூல்கள் பலவற்றைப் படித்தும் வருவார். சென்னையில் உள்ள கன்னிமாரா லைப்ரரியையே கரைத்துக் குடித்தவர் என்று எல்லோராலும் பாராட்டப்படுபவர் பேரறிஞர் அண்ணா.

எம். ஏ. பட்டம் பெற்ற பின் சில காலம் இவர் ஆசிரியராகப் பணியாற்றினார். ஆசிரியர் சமூகத்தினர் மீது அண்ணாவுக்கு அளவு கடந்த அன்பு உண்டு. காரணம் அவரே கூறியிருக்கிறார்:

''தன்னிடத்திலே படித்த மாணவர்கள் உயருவதிலேதான் ஆசிரியர் தொழிலின் சிறப்பு மேலிடுகிறது. ஆசிரியர் பணி கைம்மாறு கருதாத பணியாகும். தனக்கென வாழாது பிறர்க்கென வாழுவது ஆசிரியர் குலம்''

என்று அடிக்கடி கூறுவார் அண்ணா.

அறிஞர் அண்ணா கல்லூரியில் படிக்கும் போதே பெரிய எழுத்தாளராகத் திகழ்ந்தார். கட்டுரைப் போட்டி என்றால் இவர் தான் முதன்மையாக நிற்பாராம். இவரது எழுத்துத் திறனைக் கண்டு எல்லாப் பேராசிரியர்களும் அப்போதே வியந்ததுண்டு. கல்லூரிப் படிப்பின் போதே கருத்தாழமிக்க பல ஆங்கிலக் கட்டுரைகளை அண்ணா எழுதியிருக்கிறார்.

எழுத்துமட்டுமல்ல; தித்திக்கும் தேன் தமிழ்ப் பேச்சும் பள்ளிப் பருவத்திலேயே அவருக்குப் பழக்கமாகிவிட்ட ஒன்று. அவர் இன்று மாணவர்களிடையே பேசிய கருத்துச் சொற்பொழிவுகளும், விவாதங்களும்

கணக்கிலடங்காதன. எல்லா விவாதங்களி லும் அவர் கலந்துகொண்டு வெற்றி பெறு வார்.

1934-ம் ஆண்டு எம். ஏ. பட்டம் பெற் ருர் அறிஞர் அண்ணு.

## திருமணம்

கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த போதே அண்ணுவுக்குத் திருமணம் செய்து வைக்கவேண்டும என்ற ஆவல் அவரது தொத்தாவுக்கு ஏற்படவே, அண்ணுவின் பெற்ருேரும் அதற்குச் சம்மதித்தனர். அண்ணுவின் குடும்பத்துக்குத் தூரத்து உற வினரின பெண்ணுன ''இராணி'' அம்மை யாரையே அண்ணுவுக்கு வாழ்க்கைத் துணை வியாகத் தேர்ந்தெடுத்தனர்.

1930ம்ஆண்டு ''அண்ணுஇராணிஅம்மை யாரின்'' திருமணம் காஞ்சிபுரத்தில் மிகச் சிறப்பாக நடந்தேறியது.

அண்ணுவின் அரசியல் வாழ்க்கைக்குப் பெருந் துணையாக இருந்தார் இராணி அம் மையார். விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று அண்ணு சிறை சென்றிருந்தபோது, குடும்பப் பொறுப்பு களை ஏற்று நடத்திவந்த இராணி அம்மை யார் சிறையில் இருந்த அண்ணுவைச் சந்திக் கச் சென்றிருந்தார். அண்ணுவோ தன்னைப் பார்க்க வந்திருந்த தோழர்களுடனும், உற வினர்களுடனும் பேசி முடிப்பதற்குள் அனு மதிக்கப்பட்டிருந்த நேரம் முடிந்துவிட்டது. மீதம் இருந்த இரண்டு நிமிடங்களில் தான் அவரால் இராணி அம்மையாருடன் தமது குடும்ப நலம் பற்றிப் பேச முடிந்ததாம்.

## அரசியல் வாழ்க்கை

படிப்பு முடிந்த பின் சில காலம் ஆசிரிய ராகப் பணியாற்றிய அறிஞர் அண்ணுவை அரசியல் வாழ்வுக்கு அழைத்த பெருமை தந்தை பெரியாரையே சாரும்.

பெரியார் அவர்கள், காங்கிரசில் பய னற்ற கொள்கைகள் மலிந்திருக்கிறதென் றும் பார்ப்பனர் அல்லாதோருக்கு அக்கட்சி யால் பயனேதும் கிடையாது என்றும் கூறி விட்டு, காங்கிரசுக் கட்சியிலிருந்து வெளி யேறி 1926-ம் ஆண்டு சுயமரியாதை இயக் கத்தை ஆரம்பித்தார். சுயமரியாதை இயக் கம் ஆரம்பிக்கப்பட்டபோது அறிஞர் அண்ணு காஞ்சிபுரம் பச்சையப்பர் உயர் நிலைப்பள்ளியில் படித்துக்கொண்டிருந்தார். அப்போதே சுயமரியாதை இயக்கத்தின் கருத்துக்கள் அண்ணுவை மிகவும் கவர்ந்தன.

அண்ணு அவர்கள் பச்சையப்பன் கல்லூரி யில் பயிலும்போது சுயமரியாதை இயக்கத்

## மாற்ருன் தோட்டத்து மல்லிகை !

★

○ ''மாற்ருன் தோட்டத்து மல்லிகை என்பதால் மணக்காது என எண்ணு பவனல்ல நான்,,'' என்றும், ''தான் பெற்றெடுத்த குழந்தையை முத்த மிடவோ, சீராட்டவோ, பாராட் டவோ எனக்குத்தான் உரிமை உண்டு; மற்றவர்களுக்கு உரிமை இல்லை என்று ஒரு தாய் சொல்லுவாளாஞல் அந்தக் குழந்தை நோஞ்சாஞகத்தான் போகுமே தவிர சிறப்பாக இராது. அதை உணர்த்தும் வகையில்தான் வள்ளுவர் தன் குறளில் எடுத்துக் கூறியுள்ளார்.

''ஈன்ற பொழுதிற்
பெரிதுவக்கும் தன் மகனை
சான்ருேன் எனக்
கேட்ட தாய்'' —குறள்.

அதுபோல், காந்தியார் காங்கிரஸ் எனும் (தாய்க்கு) சொந்தமாக இருக்க லாம்; மற்றவர்கள் எனும்படியான எதிர்க் கட்சியிலுள்ள நாங்கள் காந்தியாரைப் பற்றி என்ன சொல்லு கிரேம் எனக் கேட்டு மகிழக் கூடிய (தாய்) மன நிலையை இங்குள்ள காங் கிரசார் பெற வேண்டும் என நான் பெரிதும் விரும்புகிறேன்.''

—அண்ணு

## அண்ணுவின் தாரக மந்திரம்

★

○ ''மிகப் பெரிய 'எதிர்காலம்' நம்மை அழைக்கிறது; அருமை மிகு அமைப் புக்கு நாம் உரிமையாளர்கள்! அரும் பணியாற்றுவோர் எனும் புகழாரம் கொண்டுள்ளோம்; வந்த எதிர்ப்புக ளெல்லாம் மண்ணுகிப் போய்விட்டன; இன்று இருப்பது எதிர்ப்பு என்றுகூடக் கூறத்தக்க நிலையோ, தரமோ கொண் டது அல்ல; இந்நிலையில் அல்லவா, நாம் அமைதியும், அடக்கமும், பொறுப் புணர்ச்சியும் கொண்டோராக நடந்து கொள்ளவேண்டும்!''

'திராவிட நாடு'

21-5-61

தின் பிரச்சாரம் வலுப்பெற ஆரம்பித்தது. கல்லூரி இளைஞர்கள் பலர் சேர்ந்து ''சுய மரியாதை இளைஞர் மன்றம்'' ஒன்றை சென்னையில் நிறுவினர். ஆனால் அண்ணா இதில் நேரடியாக கலந்துகொள்ளவில்லை. கருத்தரங்குகளில் மட்டுமே பங்கேற்றார். பி. ஏ. (ஆனர்சு) தேர்வை எழுதி முடித்த அண்ணா, திருப்பூரில் நடைபெற்ற 'செங்குந்தர் இளைஞர் மாநாட்டில்' தந்தை பெரியாரைச் சந்திக்கும் வாய்ப்பினைப் பெற்றார்.

பின்னர் 1944 ம் ஆண்டு திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளராக இருந்தார் அறிஞர் அண்ணா. திராவிடர் கழகத்தின் கருத்துப் பேழையான 'விடுதலை' ஏட்டின் ஆசிரியர் பொறுப்பையும் அவர் ஏற்றார். வெள்ளையர் ஆதிக்கம் முடிந்து, இந்தியத் துணைக்கண்டம் சுதந்திரம் பெற்ற 1947—ம் ஆண்டு ஆகஸ்ட் 15-ம் தேதியை துக்க தினமாகக் கொண்டாட வேண்டும் என எண்ணிய பெரியார் அவர்கள் இது குறித்து விடுதலையில் தலையங்கம் எழுதும் படி அண்ணாவிடம் கூறினார். அண்ணா அவர்கள் பெரியார் அவர்களின் கருத்துக்கு மறுப்புத் தெரிவித்து, ''வெள்ளையர் ஆதிக்கம் மறைந்த இந்நாள் இந்திய மக்களுக்கு மகிழ்ச்சிக்குரிய நாளே'' என்று கூறி தலையங்கம் எழுத மறுத்துவிட்டார்.

பின்னர் இரண்டு ஆண்டுகள் திராவிடக் கழகப் பிரச்சாரத்தில் பெரியார் அவர்களுடன் தொண்டாற்றி வந்த அண்ணா, ''பெரியார்—மணியம்மை'' திருமணத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துவிட்டு, 1949-ம் ஆண்டு செப்டம்பர் 17—ம் நாள் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆரம்பித்தார்.

திராவிடக் கழகத்தைவிட்டு அண்ணா வெளியேறியதைக் காங்கிரசார் தங்களது பிரச்சாரங்களுக்குப் பயன் படுத்தினா. திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியைக் கெடுப்பதிலே தீவிரமாக ஈடுபட்டனர். இதற்கிடையே பெரியார் அவர்களும், தன்னை விட்டுப் பிரிந்து போனவர்களைத் தாக்க ஆரம்பித்து விட்டார். இந்த எதிர்ப்புப் பிரச்சாரங்களை எல்லாம் சமாளித்து திராவிடமுன்னேற்றக் கழகத்தை வேரூன்ற வைத்தார் அறிஞர் அண்ணா.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட 17-9-1949—அன்று மாலை, சென்னை, இராயபுரம இராபின்சன் பூங்காத் திடலில் துவக்கவிழாப் பொதுக்கூட்டம் பெத்தாம் பாளையம் திரு. பழனிச்சாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

---

## அண்ணா சொன்ன அருமையானகதை

*

கிரேக்க நாட்டிலே கைதேர்ந்த சிற்பி ஒருவன் அரேபியக் குதிரை போன்ற அழகான குதிரையொன்றின் மேல் ஒரு வீரன் அமர்ந்திருப்பதுபோல் சிலையை வடித்தெடுத்தான். அந்தச் சிலையில ஏதேனும் குற்றம் குறையிருப்பின் கூறும்படி பொதுமக்களைக் கேட்டுக் கொண்டான் பார்த்தோரெல்லாம் பாராட்டினரே தவிர குறை கூறவில்லை. கண்களிலே மிரட்சியிருக்கிறது கால் குழம்புகளிலே தூசிபடிந்த தோற்றமிருக்கிறது உடலிலே வியர்வை முத்துக் கோர்த்ததுபோன்று காட்சியளிக்கிறது இதைக் குறைகூற யாரால் இயலுமென்றனர் அந்தச் சமயம் ஒரு செருப்புத் தொழிலாளி அப்பக்கம் வந்தவன், ஒரு குறை உள்ளது என்றான். சிற்பி ஆத்திரப்படாமல் ஆவலோடு கூறு கூறு, என்ன அந்தக் குறையென்றான். குதிரையின் மேல அமர்ந்திருக்கும் வீரன் காலில் அணிந்துள்ள காலணியில் ஒரே ஒரு வார்ப்பட்டை தான் உள்ளது அது இரண்டாக இருக்கவேண்டுமென்றான. உடனே சிற்பி மகிழ்ச்சியோடு இந்தக் குறைதான் என்மனதை உறுத்திக் கொண்டிருந்தது. நீ கண்டு பிடித்து விட்டாய் என்று சொன்னான். சிற்பி புகழ்ந்ததும் செருப்புத் தொழிலாளிக்கு நிலைகொள்ளவில்லை. இன்னொரு குறையும் இருக்கிறது என்றான். சிற்பி ஆவலாக என்ன? என்ன? என்றான் அதற்கு அவன் குதிரையின் கால்கள் இபபடியிருக்க வேண்டும். வால் அப்படியிருக்க வேண்டு மென்றான். உடனே சிற்பி, தம்பி நீ காலோடு நில், மற்ற விஷயங்களில் தலையிடாதே. அது உனக்குப் புரியாத விஷயம் செருப்பில இரண்டு வார் இல்லை யென்பதை நீ கண்டு பிடித்தது சரி அதற்கு மேல் போகாதே என்றான் அதைப்போல காமராசர் அவாகள மற்ற விஷயங்களைபபற்றி அவர் என்ன கருத்து வேண்டுமானாலும் கூறிக் கொள்ளட்டும். ஆனால் தமிழுக்கு இந்தியால ஆபத்து வருமா வராதா யென்பதை தமிழறிஞர்கள் ஆசிரியர்கள் வித்தகர்கள் போன்றவர்கள் முடிவு சொல்ல வேண்டிய விஷயம் காமராசர் கல்லூரியில் படிக்கவில்லை என்பதற்காக அவருக்குத் தெரியாதென்று நான் சொல்லவில்லை. எனக்கென்று நானே தேர்ந்தெடுத்துக் கொண்ட என் குருநாதரே கல்லூரியில் படிததவரலல'' என்றார்

அறிவு நூலகம்

ஆண்டு தோறும் செப்டம்பர் மாதத்தில் காலை முதல் இரவுவரை தொடர்ந்து பொழியும் மழை அன்று பலமாகப் பெய்தது. பலத்த மழையையும் பொருட்படுத்தாது பொதுமக்கள் குழுமியிருந்தனர் துவக்க விழாவினை வெற்றி பெறச் செய்வதற்காக. அந்தக் கூட்டத்தில்தான் அறிஞர் அண்ணா திராவிடமுன்னேற்றக் கழகம் தோன்றியதற்கான காரணங்களையும், அதன் குறிக்கோள்களையும் தெளிவுற அனைவருக்கும் எடுத்துரைத்தார்.

''திராவிட முன்னேற்றக்கழகம் ஒரு ஒட்டு மாஞ்செடி. மண் வளம் ஏராளம், பூமியும் ஒரே பூமிதான். நீர்ப்பாய்ச்சிப் பாத்தி கட்டி பணபடுத்தப் பலர் இருக்கின்றனர். ஒட்டு மாஞ்செடி பூத்துக் குலுங்கும் நாள் வந்தே தீரும்''—என்று அறிஞர் அண்ணா அந்தக் கூட்டத்தில் பேசியபோது திரண்டிருந்த மக்கள் வெள்ளம் எழுப்பிய கையொலியே இன்று தமிழக காங்கிரசுக் கோட்டையை இடித்து நொறுக்கியிருக்கிறது.

## இந்தி எதிர்ப்பு

இந்தித் திணிப்பு—என்பது சமீபத்தில் கையாளப்பட்டதல்ல. 1939—ம் ஆண்டிலிருந்தே, அதாவது ஆங்கில ஆதிக்கம் இந்தியத்துணைக்கண்டத்தில் இருந்தபோதே இந்த இந்தித் திணிப்பு வேலை தொடங்கிவிட்டது. ஆரம்பம் முதலே இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்தவர் அறிஞர் அண்ணா. முதன் முதலாக அவர் சிறைச்சாலையைச் சந்தித்தது இந்தி எதிர்ப்பில் ஈடுபட்ட போதுதான். 1938—ம் ஆண்டிலேயே இவரது சிறை வாழ்வு தொடங்கிவிட்டது.

1937—ம் ஆண்டில் ஆங்கிலத்தை மாற்றிவிட்டு இந்தி மொழியையே ஆட்சி மொழியாக்க வேண்டும் என்று பெரிதும் பாடுபட்டவர்களில் முதன்மையாக நின்றவர் திரு. இராசகோபாலாச்சாரியார். இதை எதிர்த்துத்தான் அண்ணா சிறை சென்றார். தமிழுக்குத் தீங்கு என்றதும், தன்னையே தமிழ் மொழிக்கு அர்ப்பணிக்க ஆர்த்தெழுந்த முதல்வர் அறிஞர் அண்ணாதான்.

1937—ல் தான் முதலமைச்சராக வந்ததும், பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கத் திட்டம் கொண்டு வந்து, அதற்குச் சட்ட வடிவமும் தர முயற்சித்தார் ராஜாஜி. இவர் இந்தியைக் கட்டாயப் பாடமாக்குவேன் என்று அறிக்கை விட்டதும், ''நீங்கள் இந்தியைத் திணித்தால் அதை எதிர்த்து நின்று போராட நான் என்றைக்கும் தயார்''—என்று ஈழத்

---

### சிபாரிசு!

*

சென்னை உயர்நீதி மன்றத்தில் ஒரு வேலை காலியாக இருப்பதாக அண்ணாவுக்குத் தகவல் வந்தது. அதற்காகக் காஞ்சியிலே ஒரு சிபாரிசுக் கடிதம் வாங்கிக் கொண்டு, அதிகாரியிடம் தன்னை அறிமுகப்படுத்தி வைக்க ஒருவரையும் அழைத்துக்கொண்டு போனார்.

இருவரும் அதிகாரியைப் போய்ப் பார்த்தனர். உடன் சென்றவர் அண்ணாவைப் பற்றி அறிமுகப்படுத்தி வைத்தார்.

அண்ணாவின் பேச்சாற்றலையும், அப்போதிருந்த நீதிக்கட்சித் தலைவர்களிடம் அவருக்கிருந்த நெருங்கியதொடர்பினையும் அவ்வதிகாரி முன்பே அறிந்திருந்தார். ஆகவே அண்ணாவை மிக்க மரியாதையுடன் வரவேற்று அளவளாவினார்.

தாம் வந்த நோக்கத்தை வெளியிட தக்க சமயத்தை நோக்கிக் கொண்டிருந்தார். ஆனால் அந்த அதிகாரி இடைவெளியில்லாமல் பேசிக் கொண்டேயிருந்தார்.

கடைசியாக, அண்ணாத்துரை அவர்களே! நான் மாவட்ட முன்சீப் ஆவதற்கு எல்லாவித தகுதிகளும் இருக்கின்றன. அப்படியிருந்தும் என்னைத் தேர்ந்தெடுக்காமல் இருக்கிறார்கள். என்னை விட்டுவேறு யார் யாரையோ தேர்ந்தெடுக்கிறார்கள். நீங்கள் ஆற்காடு ராமசாமி அவர்களுக்கு மிகவும் வேண்டியவர் என்று அறிந்து கொண்டேன். தாங்கள் தயவு செய்து சிபாரிசு செய்யும்படிக் கேட்டுக் கொள்ளுகிறேன்'' என்றார்.

இதைக் கேட்டவுடன் வியப்பில்ஆழ்ந்தார் அண்ணா. இருந்தாலும் சமாளித்துக்கொண்டு 'நான் முடிந்தவரை உங்களுக்கு உதவி செய்கிறேன். தங்களைச் சும்மா பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன். வணக்கம்' என்று சொல்லிவிட்டு வெளியே புறப்பட்டு விட்டார்.

*

துச் சிவானந்த அடிகள் ராஜாஜி எதிர்ப்க்கு புரை தெரிவித்தார். அண்ணாவின்பால் மிகுந்த பாசம் கொண்டவர் இவர். அண்ணாவுக்கும் இவர்பால் மதிப்பு அதிகம் உண்டு.

இதற்கிடையில் பெரியார் அவர்கள் இந்தித் திணிப்பை எதிர்த்து 1937—ம் ஆண்டு பிப்ரவரி மாதம் காஞ்சிபுரத்திலே இந்தி எதிர்ப்பு மாநாடு ஒன்றைக் கூட்டினார். ''இந்தியைப் பொதுமொழியாக்குவதால் நாட்டிற்கு எந்தவிதமான நன்மையும் கிடைக்காது. தமிழ் மக்களுடைய முன்னேற்றத்திற்கு இந்தித் திணிப்பு ஒரு தடைக்கல்லாகவே இருக்கும்'' என்று கட்டுரை எழுதினார் பெரியார்.

காஞ்சிபுரத்திலே நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில் கலந்து கொண்ட அண்ணா, இந்தித் திணிப்பை முழு மூச்சுடன் எதிர்க்க ஆரம்பித்தார். இந்த மாநாடு அண்ணாவுக்கு புதுத் தெம்பையே ஊட்டியது. தமிழ்நாடெங்கும் மூலைமுடுக்குகளில் எல்லாம் அறிஞர் அண்ணாவின் இந்தி எதிர்ப்புப் பிரச்சாரம் எதிரொலித்தது. இந்தித் திணிப்பால் வரும் இடர்பாடுகளை தேன் தமிழால், தன் சிந்தனை ஆற்றலால், அனைவருக்கும் எடுத்துரைக்கும் பணியிலே தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டார் அண்ணா. பெரியார் அவர்கள் இந்தி எதிர்ப்பு அணிக்கு அறிஞர் அண்ணாவையே தளபதியாக்கினார்.

இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டமைக்காக அண்ணாவுக்கு நான்கு மாதச் சிறைத் தண்டனை தரப்பட்டது. பெரியார் அவர்களுடன் சென்னை சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார் அண்ணா இந்தியை எதிர்த்த அனைவரும் சிறையிலடைக்கப்பட்டனர். இந்திஎதிர்ப்பு தமிழ்நாடெங்கும் பரவியது. அப்படி இருந்தும் ஆட்சியினர் இந்தித் திணிப்பைக் கைவிடடபாடில்லை. அப்போதுதான் தாளமுத்து—நடராசன் தங்கள் இன்னுயிரை தமிழ்காக்கும் நற்பணிக்கு ஈந்தனர். தமிழ்ச் செல்வங்களின் இன்னுயிர் பறிக்கப்பட்ட பின்னர்தான் அரசினர் தங்கள் கொள்கையில் தளர்ச்சியைக் கண்டனர். 1940—ம் ஆண்டு இந்திக் கட்டாயப் பாடமல்ல என்று கூறினர்.

இந்தி கட்டாயப் பாடமல்ல என்று அரசினர் அறிவித்திருந்த போதிலும், எங்கே மறுபடியும் இது தோன்றிவிடக்கூடுமோ? அப்படி இந்தப் பிரச்னை கிளம்பினால் அதற்கு நிரந்தரமான பரிகாரம் என்ன செய்யலாம் என முடிவு செய்ய 1940—ம் ஆண்டு ஆகஸ்ட் 24—ம் நாள் திருவாரூர்த் திருநகரில் நீதிக்கட்சி மாநாடு ஒன்று கூடியது. 'திராவிட நாடு திராவிடருக்கே' எனும் ஒலி முதன்முதலாக ஒலித்தது இந்த மாநாட்டில்தான். 'திராவிடநாடு' தனித்த ஒரு நாடாக இருந்தால்தான் இந்திப் பேயை விரட்டியடிக்க முடியும். தமிழன் மட்டுமல்ல, கேரள, கன்னட, ஆந்திர மக்களும் அப்போதுதான் நலமடைய முடியும் என்ற கருத்தை அந்த மாநாட்டில் அறிஞர் அண்ணா எடுத்துரைத்தார்.

'நீதிக்கட்சி'யின் பத்திரிகையாக அப்போது இருந்த 'விடுதலை' ஏட்டின் துணையாசிரியராகப் பதவி ஏற்ற அண்ணா 'திராவிடநாடு' பற்றிய கட்டுரைகள் பலவற்றையும், பல தலையங்கங்களும் தீட்டினார். இது மக்களிடையே ஒரு எழுச்சியையும், வேகத்தையும் தூண்டியது.

பின்னர் 1942—ம் ஆண்டில் காஞ்சிபுரத்தில் 'திராவிடநாடு' பத்திரிகையைத் துவக்கினார். அறிஞர் அண்ணா திராவிட நாட்டின் சிறப்புக்களையும், அதன் பழம் வரலாற்றினையும் 'திராவிடநாடு' ஏடு மூலம் மக்களுக்கு எடுத்துரைத்தார்.

1950—ம் ஆண்டின் தமிழகக் கல்வி அமைச்சராய் இருந்த திரு. மாதவமேனன் பள்ளிகளில் இநதியைக் கட்டாய பாடமாக்கும் முயற்சியில் ஈடுபட்டார். திராவிட முன்னேறறக் கழகம் ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டுகூட முடிவுறாத நேரம் அது. இந்த இந்தித் திணிப்பை எதிர்த்து தி. மு. கழகம் அறப்போரில் ஈடுபட்டது. அரசினர் எப்போதும் போலவே தங்கள் கைவரிசையைக் காட்டினர். தி. மு. கழகத் தலைவர்களையும், தொண்டர்களையும் தடியால் அடித்தனர்; அனைவரையும் சிறையில் அடைத்தனர். இந்தித்திணிப்பை எதிர்த்து வரும் மறவர் படை கண்டு, அரசினர் தங்கள் முயற்சியைக் கைவிட்டனர். இரண்டே மாதங்களில் போராட்டத்திற்குப் பலன் கிடைத்து விட்டது. ''இந்தி கட்டாயப் பாடமல்ல; விருப்பப்பாடமே'' என்று 18-7-1950—ம் ஆண்டு அதே கல்வி அமைச்சர் மறு ஆணை பிறப்பித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்த மாபெரும் வெற்றிச் செய்தியினைத் துண்டுக காதிதங்கள் மூலம் வெயிளிட்டார் அறிஞர் அண்ணா.

## பத்திரிகை ஆசிரியர் அண்ணா

திராவிடக் கழகத்தில் இருந்தபோது 'விடுதலை' மூலம் கழகக் கொள்கைகளை தெள்ளுதமிழ் நடையில் மக்களுக்கு அள்ளிக் கொடுத்த அண்ணா, திராவிடமுன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளை விளக்கும் கருத்துப் பேழையான 'திராவிடநாடு' இதழை ஆரம்பித்தார். அது வார இதழாகவே மலர்ந்து வந்தது.

திராவிடமுன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளை மக்களுக்குத் தெளிவாக எடுத்துரைக்கவும், காங்கிரசுக் கட்சியினரின் அக்கிரமங்களைச் சுட்டெரிக்கவும் தினசரிப் பத்திரிகை தி. மு. கழகத்திற்கென்று தேவை எனப் பலர் ஒருமுகமாகத் தீர்மானித்தனர். அதன் விளைவாக ஒலித்ததுதான் 'மாலைமணி' எனும் நாளேடு.

பத்திரிகை ஆரம்பிப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல அப்போது. பொருள் பலத்தில் தி. மு. கழகம் வலிவிழந்ததாகவே அப்போது இருந்தது. பத்திரிகை ஆரம்பிக்கப் பணவசதி படைத்தோர் அப்போது இல்லை. இருப்பினும் எப்படியும் நாள் இதழ் ஒன்றை ஆரம்பித்துவிட வேண்டும் என்ற ஆவல் அனைவரிடமும் மேலோங்கி இருந்ததால், திரு. டி. எம். பார்த்தசாரதி பத்திரிகை ஆரம்பிப்பதற்கான பொறுப்புகள் அனைத்தையும் ஏற்க முன் வந்தார். ஆனால் ஒரு வேண்டுகோளையும் அப்போது விடுத்தார். ''தினசரி இதழை நடத்தும் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். ஆனால் அண்ணா அவர்கள் அதற்கு ஆசிரியராக இருக்க வேண்டும்'' என்ற அன்புக் கட்டளை ஒன்றை விடுத்தார். அண்ணா அவர்களும் அதற்குச் சம்மதிக்கவே 1949—ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 10—ம் தேதி கழகப் பிரச்சாரக் கேடயமாக 'மாலைமணி' நாளேடு வெளிவந்தது.

## 'அறிவகம்' பிறந்தது

திராவிடமுன்னேற்றக் கழகத்திற்கென்று ஒரு அலுவலகம் தேவைப்படவே இராயபுரத்தில் முப்பதாயிரம் ரூபாய்க்கு ஒரு கட்டிடம் வாங்கப்பட்டது. அந்தக் கட்டிடம்தான் இப்போது இருக்கும் 'அறிவகம்.' இதை அறிஞர் அண்ணா தலைமையில் திரு. வி. எம். ஜான் 2-12-59 அன்று திறந்து வைத்தார்.

## தேர்தல் களத்தில் அண்ணா

இந்தியா சுதந்திரம் அடைந்தபின் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலில் தி.மு.கழகம்போட்டியிடவில்லை. இதன்பின் நீண்ட காலமாகத் தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபடுவதா வேண்டாமா என்ற கேள்வி இருந்து வந்தது. அதற்கு விடை, 1956—மஆண்டில் திருச்சியில் நடைபெற்ற இரண்டாவது மாநில மாநாட்டில் கிடைத்தது. தி. மு. கழகம் தேர்தலில் கலந்து கொள்ள வேண்டுமா—வேண்டாமா என்று மாநாட்டில் ஓட்டுப்பதிவு மூலம் கேட்கப்பட்டது. வேண்டாம் என்பதற்குக் கிடைத்த ஓட்டுக்களைவிட, வேண்டும் என்பதற்கே அதிக வாக்குகள் கிடைத்தன. அந்த வாக்கை வேதவாக்காகக் கருதி, திராவிட முன்னேற்றக் கழகத்தை தேர்தலில் நேரடியாக ஈடுபடுத்தினர்

1957 பிப்ரவரி மாதம் அண்ணா காஞ்சிபுரத்தில் பிரபல காங்கிரஸ்காரரான டாக்டர் சீனிவாசன் என்பவரை எதிர்த்துச் சட்டமன்றத் தொகுதிக்குப் போட்டியிட்டார். பத்தாயிரம் வாக்குகளுக்கு மேல் அதிகம் பெற்று வெற்றியடைந்தார். அவரது வெற்றியை தமிழகத்து ஏடுகள் அனைத்தும் வரவேற்றன—வாழ்த்துப் பாடின. ''வருக அண்ணாத்துரை'' என்று 'ஆனந்த விகடன்' தலையங்கம் தீட்டியது. சட்டமன்றத்தில் அவர் வீற்றிருந்த நாளெல்லாம் குறிப்பிடத்தக்க நாளாக விளங்கியது.

1962-ம்ஆண்டுத் தேர்தல் வந்தது. சட்டமன்றத்திலே காங்கிரஸ் அமைச்சர்களுக்கெல்லாம் சிம்ம சொப்பனமாகக் காட்சியளித்த அண்ணாவை எப்படியாவது இந்தத் தேர்தலில் தோற்கடிக்க வேண்டும் என்று காங்கிரசின் பெரிய தலைகள் எல்லாம் தீர்மானம் செய்தன. அதனால் மிக நெருங்கிய நண்பரான திரு. நடேச முதலியாரையே அண்ணாவுக்கு எதிராகப் போட்டியிடச் செய்தனர்.

தமிழகமே எதிர்பார்த்திராத முறையில் அண்ணா அவாகள் அந்தத் தேர்தலில் வெற்றி பெறும் வாய்ப்பை இழந்தார். தீமையிலும் நனமை என்பார்களே அதைப் போல, ௦2 தேர்தல் ஒரு வகையில் தமிழகத்துக்கும், தி. மு. கழகத்துக்கும் மிகப் பெரும் புகழைத் தேடித்தந்தது. காரணம், அண்ணா அவர்கள் இந்தியப் பாராளுமன்றத்தின மாநிலங்களவை உறுப்பினராகச் சென்றதுதான். அண்ணாவின் பாராளுமன்றப் பிரவேசம் மத்திய அமைச்சர்களுக்கும், வடநாட்டுக்காரர்களுக்கும் ஒரு புதிய அனுபவத்தைத் தந்தது. தி. மு. கழகத்தைப் பற்றியும், அதன தலைவர் அறிஞா அண்ணாவைப் பற்றியும் தவறுக எண்ணி நடுங்கிக் கொண்டிருந்தார்கள் வடநாட்டுக்காரர்கள். ஆனால், ''தி. மு. கழகம் நலல தோர் இயக்கம்—அதன் தலைவா அண்ணா அன்பின் வடிவம்—அமைதியின் உருவம்'' என்ற உண்மையை அண்ணாவின் பாராளுமன்றப் பேச்சு அவர்களது அச்சத்தை நீக்கியது.

சீன ஆக்ரமிப்பின்போது, பாராளுமன்றத்தில் நடைபெற்ற யுத்த ரகசியக் கூட்டத்தின்போது அண்ணா அவர்கள் பேசிய பேச்சைக் கேட்டு, லால்பகதூர் சாஸ்திரி பரவசப்பட்டு அண்ணாவுடன் கைகுலுக்கி நன்றி தெரிவித்த நிகழ்ச்சி சரித்திரப் புகழ் பெற்றது.

1967—ம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் நாள், சென்னை விருகம்பாக்கத்தில்

நடைபெற்ற தி. மு. கழக நான்காவது பொதுமாநில மாநாட்டின்போது தேர்தலில் போட்டியிடும் தி. மு. க. வேட்பாளர் பட்டியலை பலத்த கையொலிக்கிடையே அண்ணா அறிவித்தார்.

தென் சென்னை பாராளுமன்றத் தொகுதியில் அறிஞர் அண்ணா, காங்கிரஸ் வேட்பாளர் குருமூர்த்தியை எதிர்த்துப் போட்டியிட்டார்—எண்பதாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் அண்ணா வெற்றி பெற்றார்.

தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தலில் தி. மு. கழகம் அமோகமான வெற்றியைப் பெற்று ஆட்சியை அமைக்கும் வாய்ப்பை அடைந்தது. சட்டமன்ற தி. மு. கழக உறுப்பினர்கள் அறிஞர் அண்ணாவை முதலமைச்சராகத் தேர்ந்தெடுத்ததால், அண்ணா தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினமா செய்தார். தமிழக அரசின் முதல்வரானார்.

தமிழக முதலமைச்சராகப் பதவி ஏற்ற உடனேயே ஏழைகளுக்கு நல்வாழ்வளிக்கும் திட்டமான 'படி அரிசி' திட்டத்தை நிறைவேற்றினார்.

தமிழை அரியாசனத்தில் ஏற்றினார். தமிழக அரசு அலுவலகங்கள் அனைத்திலும் தமிழை நிர்வாக மொழியாக்கினார். காங்கிரசுக்காரர்களே இசைவு தரும் வகையில் தமிழக சட்டமன்றத்தில் 'தமிழ்நாடு' தீர்மானத்தை நிறைவேற்றினார்.

அண்ணாவின் தலைமையின் கீழ் உள்ள அரசுதான் பஸ்களை தேசியமயமாக்கியது. ஏழைகளுக்கு வரியைக் குறைத்தது. வரலாறு காணாத வகையில் வரியில்லாத பட்ஜெட்டைக் கொண்டு வந்தது. காங்கிரசுக்காரர்களே வியக்கும் வண்ணம், எல்லோரும் அதிசயிக்கும் வண்ணம் ஏறிய விலைவாசியை இறக்கியது. தொளிலாளர்களுக்கு நீதி அளித்தது. கலைஞர்களுக்கும் கலை உலகிற்கும் பெருமை சேர்த்தது.

தொழிலாளர் உரிமை நாளான மே தினத்தை அரசாங்க விடுமுறையாக்கினார் அண்ணா

மதுவிலக்குக் கொள்கை காங்கிரஸ் ஆளுகைக்கு உட்பட்ட மாநிலங்களிலேயே தோற்றுப் போனபிறகு, வருவாயைச் சாக்கிட்டு காந்தியாரின் கொள்கையை புதை குழிக்கு அனுப்பிய காங்கிரசுக்காரர்களே தலை குனியும்வண்ணம் 'எக்காரணத்தைக் கொண்டும் மதுவிலக்கை எடுக்க மாட்டேன்'—என்று காந்தியார் வழி நின்று மதுவிலக்கைத் தீவிரமாக அமுல் நடத்துபவர் அறிஞர் அண்ணா.

இத்தனைக்கும் மேலாக அனைத்துக் கட்சியினரும், கட்சிக்கு அப்பாற்பட்டவர்களும் போற்றிப் புகழும் வண்ணம் பொறுமையோடும் திறமையோடும் ஆட்சி நடத்தி வருகிறார் அறிஞர் அண்ணா.

தமிழகத்தில் கொடி கட்டிப் பறந்த அண்ணாவின் புகழ் இமயத்திற்கு அப்பாலும் எதிரொலிக்கத் தொடங்கியது. அமெரிக்காவில் உள்ள 'யேல் பல்கலைக் கழகம்' இந்தியாவில் யாருக்குமே தராத சிறப்பினைத் தர பேரறிஞர் அண்ணா அவர்களை இரு கரம் நீட்டி வரவேற்றது. அண்ணாவின் அடக்கம், எளிமை, பழகிடும் பண்பு, அறிவு, ஆற்றல்—இவைகள் அமெரிக்கர்களை மிகவும் கவர்ந்தது.

அங்கு எழுப்பட்டகேள்விகளுக்கு அண்ணா அளித்த கூர்மையான விளக்கங்கள் யேல் பல்கலைக் கழக மாணவர்களையும், பேராசிரியர்களையும், பத்திரிகை நிருபர்களையும் அரசியல் தந்திரிகளையும், ஆச்சரியத்தில் மூழ்கடித்தது.

அண்ணாவின் புகழ்க்கொடி இன்று உலகெங்கும் பறந்து கொண்டிருக்கிறது. படித்தோர், பாமரர், பாட்டாளி வர்க்கத்தினர் அனைவரும் அண்ணாவின் செயலைக் கூர்மையாகக் கவனித்து வருகின்றனர்.

''இவரைப்பற்றிச் சாதாரணமாக நினைத்தோமே; அடேயப்பா அசகாயசூரர்''— என்று பொறாமைக் குடியினரும் புகழ்ந்து வருகின்றனர்.

அடக்கம், அன்பு, அறிவு, ஆற்றல்,
பொறுமை, திறமை
—இவைகள்தான் அண்ணா.

குள்ளமான உருவம், வாரிவிடப்படாத தலை, காவியேறிய பற்கள், கவர்ச்சியில்லாத உடை—இந்த எளிமையினுள்தான் உலகைக் கவர்ந்த சக்கரவர்த்தி—தமிழகத்தின் மாமன்னன், லட்சோபலட்சம் தம்பியரின் உடன் பிறவா அண்ணன், நாலரைக் கோடி மக்களின் நாயகன் அண்ணா என்ற பெயரில் அடங்கி இருக்கிறார்.

பொதிகை மலைத் தென்றல் போல் புகழ் மணக்கும் அண்ணன் 60—ம் ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றார். முரசு முழங்கி நாடு அவரை வாழ்த்துகின்றது.

அறுபதாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் தன் மூத்த மகனை பேரொளி பொங்கும் கண்களோடு தமிழ்த்தாய் உச்சி மோந்து முத்தமிடுகிறாள். தாயின் காலடியில் கடமை எனும் மலர்களைக் குவித்துவிட்டு புன்முறுவல் பூக்க நடக்கிறார் நாட்டின் நாயகன்.

அவர் பின்னே நாமெல்லோரும் நடப்போம். அவர் தோளிலே ஆயிரம் சுமைகள்; அதிலே நாம் பங்கு கொள்வோம். அவரின் தூய பணிகளுக்குத் துணை இருப்போம்.

வாழ்க அண்ணா! வாழ்க பல்லாண்டு!

அறிவு நூலகம்

# 600 அறுநூறு ஆண்டுகள் வாழ்க!

## நடிப்பிசைப்புலவர் கே. ஆர். இராமசாமி



மனித வாழ்க்கை செம்மைப்பட வேண்டுமென மேதைகள் கால வரம்பின்றி முயன்று வந்திருக்கிறார்கள். இன்னமும் முயற்சி செய்துகொண்டுதான் வருகிறார்கள். டார்வின் கூற்றுப்படி ஆதியில் குரங்கு உருவம் படைத்திருந்த மனிதன் நாளடைவில் இன்றைய உருவம் பெறுகிறான்.

இதுபோல் மனித வாழ்க்கை. சமுதாய அமைப்புகளில் மாறுதலும். முன்னேற்றமும் இத்தகைய மேதைகளின் முயற்சியினால்தான் என்பதில் சந்தேகமில்லை. இப்படிக் காலத்தால் அவர்கள் செய்த முயற்சியை மனித சமுதாயம் என்றுமே மறக்க முடியாது.

இன்றும் இத்தகைய முயற்சிகள் அவசியம் என்பதை உணர மக்களுக்கு அறிவு, விழிப்புணர்ச்சி அவசியமாகும். இல்லாவிட்டால் மனிதன் புது மாற்றம் கொள்ளவோ, வளர்ச்சி அடையவோ இயலாது.

நம் நாட்டை பொருத்தமட்டில்பிறருக்கு அடிமையாக இருந்தது; அடிமை நிலையை உணர்த்தியது மட்டுமல்ல; அதனின்று விடுபட அறிவுரை வழியாகவும், செயல்முறை வழியாகவும் முயற்சித்து வெற்றி கண்ட காந்தியார் வழியில் இன்று நாடு விடுதலை பெற்று தன் முன்னேற்றத்தில் தானே கவனம் கொள்ளும் வகையில் நிற்கிறது. இதுபோல் சமுதாயத்தில் சாக்கடைத் தன்மையான ஊழல்களை உணர்வித்தும்; அதை அகற்றும் வழியில் அறிவுரைத்ததுமான முயற்சியின் மூலமும் இன்று நம்மிடை ஓர் அறிஞர் திகழ்கிறார் என்பதும் அவர் காலத்தில் வாழும் பேறு பெற்ற நாம் பெருமை யுடையவர்கள் என்பது என் துணிபு.

அவர் சமுதாயத்தின் சரியில்லாக் கொள்கைகளை சாடுவதோடு நில்லாமல்

மக்களையும் தக்க வழி வாழ—மாற்றுக் கொள்கை படைத்தோரிடம் நடந்து காட்டும் விதத்திலேயும் செயல்பட்டு வருகிறார். இதற்கு அறிவு மட்டும் போதாது, பண்பும் தேவையாகிறது.

30-வது வருடங்களுக்கு முன்பாக நடந்த நாடக நிகழ்ச்சி என் நினைவிற்கு வருகிறது. கோவையையடுத்த சவுரி பாளையத்தில் நாங்கள் 20 பேராக சேர்ந்து நாடகம் நடத்துவது வழக்கம். அங்கு வள்ளி திருமணம் நடத்தினோம். கழுகாசலம் சீன் நடந்ததும் அந்த சீனில் பாடிய ராஜபார்ட் காரருக்கு எதிர்பாராமல் தொண்டை கட்டிவிட்டது. பாடிப் பாடி பார்க்கிறார். குரல் ஆவி ரூபமாக வருகிறதேயல்லாமல் ஒலி வடிவமாய் வரவில்லை. நாங்கள் எல்லோருமே திகைக்கின்றோம். என்ன செய்வது? அடுத்து வேடன் வேஷம் போட்டுக்கொண்டு, தினைப்புனத்தில் போய்ப் பாடவேண்டுமே என்று அப்பொழுது எங்கள் குழுவில் எல்லா விஷயங்களும் தனக்குத்தான் தெரியும் என்று நினைத்துக் கொண்டிருப்பவர்-சில சமயங்களில் சண்டையை மூட்டிவிடுவது — பிறகு அவரே வந்து சமாதானம் செய்துவைப்பது—தனக்குத் தெரியாத விஷயங்களில் தலையிட்டு முட்டி மோதிக்கொண்டு வெளியே வருவது ஆகியவற்றில் அவர்தான் பெரியவராக விளங்கி வந்தார். என்ன செய்வது என்று திகைத்து நின்ற சமயம் அவர் முன் வந்து என்ன, என்ன ? என்று கேட்டார். நாங்கள் நிலைமையை விளக்கினோம். உடனே அவர் 'ப்பூ! இவ்வளவுதானே! வேடன் வேஷத்தை எனக்குப் போடுங்கள்' என்றார். உடன் நாங்கள் பவுடரை முகத்தில் பூசி வேடன் உடையை அணிவித்தோம்.

நீங்கள் பாடியதையே நாங்கள் இதுவரை கேட்டதில்லையே உங்களுக்குப் பாடத் தெரியுமா என்று கேட்டபோது, பார்க்கலாம் முதலில் உடையை மாட்டிவிடுங்கள் என்றார். எல்லாவற்றையும் செய்து தினைப் புனம் சீனுக்கு அனுப்பினோம். சென்று வள்ளியைப் பார்ப்பதற்கு முன் காவல் காரன் நிற்பது வழக்கம். அவன் தடுத்து நீ யார்? என்று கேட்க— பார்க்கலாம், பார்க்கலாம் நான் யார் என்பதை என்று சொல்லி அவனைத் தள்ளிவிட்டு, வள்ளியைப் பார்த்ததும் காயாத கானகத்தே என்று மேல் ஸ்தாயில் 'காயாத கானகத்தே–காயாத கானகத்தே' என்று 5 நிமிடம் இப்படியே பாடிக்கொண்டிருக்க ஹார்மோனியம் வாசிப்பவர் வித விதமாக கீழே இறக்குவதற்கு வாசித்துக் காட்டுகிறார். அதையெல்லாம் சட்டை செய்யாமல் கானகத்தே, கானகத்தே என்று கத்திக்கொண்டிருந்தார். நாடக ரசிகர்கள் ''உள்ளே போ, உள்ளே போ'' என்று கத்த ஆரம்பித்தார்கள். நாங்கள் படுதாவை விடச் சொன்னோம். படுதா விழுந்த பிறகும் ''கானகத்தே — கானகத்தே—கானகத்தே'' என்று பாடுவதை அவர் நிறுத்தவில்லை. 'அட பாவி படுதா விட்டாச்சு இன்னும் கானகத்தே என்று கத்துகிறாயே'' என்று கையினால் வாயைப் பொத்தினோம். அதன் பிறகுதான் கத்தல் நின்றது. 'என்னய்யா இப்படி செய்து விட்டாயே? என்று கேட்க ''நான் என்ன செய்யட்டும்? அதற்குமேல் எனக்குப் போக முடியவில்லை. மக்களைப் பார்த்ததும் பிரமை பிடித்ததுபோல் ஆகிவிட்டது எனக்கு'' என்றார். இன்னொரு முறை பார்க்கலாம் என்றார். வேண்டாம் என்று சொல்லி கழட்டய்யா உடையை—என்றோம். உடையை பழைய ராஜபார்ட் காரருக்குப் போட்டு அனுப்பினோம்.

முறையோடு சங்கீதம் பயின்றவர்கள் பாடும் பாட்டுக்கும்—முறையோடு சங்கீதம் பயிலாதவர்கள் பாடும் பாட்டுக்கும் வித்தியாசம் இருக்கும். அதுபோல் முறையோடு அரசியல் படித்தவருக்கும், வெறித் தன்மையோடு அரசியலில் இல்லாததையும் பொல்லாததையும் செய்து மேலே வந்து நின்றுகொண்டு யாருக்கு என்ன தெரியும்—எல்லாம் எனக்குத்தான் தெரியும் என்று பேசுபவருக்கும் நிரம்ப வித்தியாசமுண்டு.

இது ஒருபுறமிருக்க, இதுவரை வந்த தலைவர்களும், மேதைகளும் மக்களைப் பார்த்து ''பொது மக்களே! கனவான்களே! சகோதர சகோதரிகளே! என அழைத்துப் பேசுவார்கள். ஆனால் நம் தலைவரோ சுட்ட மண்ணும் சுடாத மண்ணும் ஒட்டாமல் இருப்பது போலல்லாமல் நம்மில் ஒருவராய் ஒவ்வொரு குடும்பங்களிலும் ஒருவராய் குடும்பப்பாச உணர்ச்சி மிகுந்து விளங்குகிறார்.

இதுவரை யாரும் அழைக்க நினைத்திராத தம்பி எனும் உறவு முறை சொல்லி நமக்கு வழி காட்டுகிறார் என்றால் பெயரளவில் அண்ணா என்பதும் மட்டுமல்ல உண்மையிலேயே நமக்கெல்லாம் உடன் பிறவாத அண்ணனாக விளங்குகிறார் என்பதில் சந்தேகமென்ன ?

முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா 60-ஆம்ஆண்டில் அடியெடுத்து வைக்கிறார். அந்த நன்னாளை விழாக் கோலத்துடன் கொண்டாடுவோம்.

அவர் இன்னும் அறுநூறு ஆண்டுகள்

வாழ்க ! வாழ்க ! !

என வாழ்த்துவோம்.

# இரட்டிப்பு நன்றி

கவிஞர் வேழவேந்தன் எம்.எல்.ஏ.,

காலதேவனே! காலதேவனே!

உன் படைப்பில்—

ஞாலத்தில் கோடானு கோடி பூக்கள் அரும்புகின்றன; மலர்கின்றன; மடிகின்றன.

ஒரே தடாகத்தில்தான் கொட்டி மலரையும் தாமரை மலரையும் பூக்க வைத்தாய்!

ஆனால் கவிஞர்களின் வழியும் எழுதுகோலும் தாமரையைச் சுற்றிச் சுழல்வானேன்?

உன் பக்கத்தில்—

ஒரே சோலையில்தான் சிட்டையும் மயிலையும் பறந்து திரிய வைத்தாய்!

ஆனால் தொத்தும் சிட்டுக்குப் பிறவாத கவிதைகள் தோகை மயிலுக்கு மட்டும் காட்டாறு போல் ஓடிவருவானேன்?

உன் பணியில்—

ஒரே வானில்தான் உடுக்களையும் ஒய்யார நிலவையும் படைத்து ஒளிரவிட்டாய்!

ஆனால் விழுந்தாலும் எழுந்தாலும் உடுக்களைப்பற்றிக் கவலைப்படாமல், தேய்ந்தாலும் காய்ந்தாலும் நிலவைப்பற்றியே இலக்கியங்கள் கவலைப்படுவானேன்!

மாந்தர் குலத்திலே எத்தனை எத்தனையோ உருவங்களைப் படைத்து உலவ விட்டாய்!

ஆனால் வரலாற்று ஏட்டில் மழுங்காத புகழ்ச்சுவட்டைச் செதுக்கிவிடும் பெருமை சிலருக்கே சொந்தமாகிறது.

அந்தச் சிலரில் முகப்போவியமாகத் திகழும் காஞ்சித்தலைவனைத் தந்த—

காலதேவனே! காலத்தேவனே! உனக்கு நன்றி. நன்றி ஏன் தெரியுமா?

உன் படைப்புச் சங்கிலித் தொடரில் எத்தனையோ மேதைகள் தோன்றி அற்புதப் பணி புரிந்தார்கள்.

டெமாஸ்தனீஸ்—கிரேக்க மண்ணின் ஈடு எடுப்பற்ற சொல்வலர்! சொல்லென்ற வில்லேற்றி கருத்தென்ற அம்பெய்து-எதிரே இருந்தவர்களின் இதய சிங்காதனங்களை வெற்றி கண்டவர்!

லெனின்—ருஷ்ய மண்ணின் ஒப்புயர்வற்ற புரட்சித் தலைவர்! மேட்டுக் குடிக்கும் தாழ்ந்த குடிக்கும் இருந்த—ஏணி வைத்தும் எட்டாத வேற்றுமையைத் தரைமட்டமாக்கிக் காட்டிய சமதர்மச் சிற்பி!

முஸ்தபா கமால்பாஷா—துருக்கி மண்ணைச் சுடர்விட்டு எரியவைத்த தூய சீர்திருத்தத் தலைவர்; இருண்ட பழமைப் பேயின் பயங்கரக் கைகளில் சுருண்டுகிடந்த துருக்கியர் சமுதாயத்தைத் தட்டி எழுப்பிய அடலேறு!

ஆபிரகாம் லிங்கன்—அமெரிக்க மண்ணிலே தோன்றி தோலுக்குத் தோல் வேற்றுமையா? என்று கேட்டு, அடிமைச் சமுதாயத்திற்கு வழக்கறிஞராக மாறிய உரிமைத் தலைவர்; ஜனநாயகக் கோட்டைக்கு அடிக்கல் நாட்டிய தனநாயகர்!

ரூசோ—ஃபிரெஞ்சு நாட்டிலே பிறந்து, கட்டுரைத் திறத்தால் பேனு முனையாலேயே ஆதிக்கக் கோட்டையைத் தகர்த்துத் தரை மட்டமாக்கிய மாபெரும் எழுத்தாளர்; சிவப்பு இரத்த ஆறு ஓட கருப்பு மையால் தொட்டு எழுதிய தீரச் செம்மல்.

பெர்னுட்ஷா-இங்கிலாந்திலே தோன்றி, தங்கத் தாய்மொழிக்கு கலை இலக்கிய முத்தாரம் படைத்த நல்லறிஞர்; நாடகங்கள் பல எழுதி மொழிக்கும் கலைக்கும் மறுமலர்ச்சி தேடித் தந்தவர்.

காந்தியார்—இந்திய மண்ணிலே பிறந்து, எங்கோ இருப்பவன் இந்நாட்டுக் குடுமியைக் கையில் பிடித்திருப்பதா? என்று வெகுண்டு கேட்ட விடுதலைத் தந்தை; எதிரியைச் சாடுவதற்கும் அகிம்சைத் தத்துவத்தைக் கடைப்பிடித்த எளிய தலைவர்.

இவர்கள் அத்தனை பேரும் ஒவ்வொரு காலத்திலே இந்த உலகத்திலே பிறந்து ஒவ்வொரு துறையிலே வையகம் செழிக்கப் பாடுபட்டவர்கள்!

காலதேவனே!

இந்த மேதைகளின் ஆற்றலையெல்லாம் ஒன்று திரட்டி ஒரு தலைவனை உண்டாக்க வேண்டும் என்று கற்பனை செய்து, தென்னுட்டிலே அண்ணு என்ற மாமேதையை உருவாக்கினுயே, அதற்காகத்தான் நன்றி!

டெமாஸ்தனீஸ் ஒரு சொல்வலர்; ஆனுல் நல்ல நாடகாசிரியர் என்று கேள்விப்பட்டதுண்டா?

லெனின் ஒரு புரட்சித் தலைவர் தான்! ஆனுல் மிகப் பெரிய ஜனநாயகவாதி என்று சொல்லிவிட முடியுமா?

ஷா ஒரு மிகப்பெரிய நாடக ஆசிரியர் தான்; ஆனுல் எத்தனை முறை சிறைத் தண்டனை என்ருலும் ஏற்றுக்கொள்ளும் புரட்சி வீரர் என்று கூற முடியுமா?

காந்தியார் ஒரு விடுதலைத் தந்தைதான்! ஆனுல் புதுமைமிக்க நாடகங்களை உருவாக்கியதோடு அதில் பங்கேற்று அருமையாக நடித்து அந்தக் கலைக்கே புகழ் தேடித் தந்தார் என்று கூற முடியுமா?

காலதேவனே!

ஆகவேதான் மாமேதை அண்ணு அவர்களை தனித் தனியே யாருடனும் ஒப்பிட்டு விட மனம் ஒப்பவில்லை. அப்படியே கூறினுலும் ஒப்பீட்டு உவமையிலே முழுமை காணப்படவில்லை.

பலாக்கனியின் இனிப்பும், மாங்கனியில் சுவையும், ஆப்பிள் கனியின் வண்ணமும் திராட்சைக் கனியில் மயக்கமும் செவ்வாழைக் கனியின் மென்மையும் ஒருங்கே கலந்த ஒரு கனியை இன்னமும் நீ படைத்ததில்லை.

அமெரிக்க நாட்டின் செல்வச் சிறப்பும், இங்கிலாந்தின் ஜனநாயகச் சிறப்பும், ருஷ்யாவின் அறிவியாற் சிறப்பும், ஜப்பானின் தொழில் சிறப்பும், இந்தியாவின் கலைச்சிறப்பும், தமிழ்நாட்டின் பண்பாட்டுச் சிறப்பும் ஒருங்கே இணைந்த ஒரு நாட்டை இன்னமும் உருவாக்கவில்லை.

ஆனுல்—

வரலாற்று நாயகர்களாகத் திகழவேண்டியவர்களின் திறன், சான்ருண்மை, தகுதி, ஆற்றல், மேதமை, உழைப்பு, கண்ணியம், நாட்டுப்பற்று, தலைமைப் பண்பு, மொழியார்வம் ஆகிய அத்தனைப் பண்புகளும் ஒருங்கே அமையப்பெற்ற ஒரு தலைவரை அண்ணுவின் உருவில், இருபதாம் நூற்ருண்டில் தமிழக மக்களுக்குத் தந்த காலத் தேவனே! நன்றி! நன்றி!

உனக்கு மேன்மேலும் நன்றி கூறக் காரணம் என்ன தெரியுமா?

அப்படிப்பட்ட மாத்தலைவரின் காலத்திலே எங்களையும் உருவாக்கி, அவரைக் காணவும், கேட்கவும், அவருடைய மாபெரும் அணியில் தொண்டராக இருக்கவும் வாய்ப்பளித்தாயே, அதற்காகத் தான்!

காலதேவனே! ஒரு வேண்டுகோள்!

காலத்தேரில் ஏறி அறுபதாம் ஆண்டுக் கல்லை கட்டுகின்ற அத்தென்னுட்டு வேந்தனின் பேனுமுனை ஆண்டாண்டுக் காலத்திற்கும் ஓயாமல் ஓடிக்கொண்டே இருக்கட்டும்!

நாமுனை தேயாமல் பேசிக்கொண்டே இருக்கட்டும்!

விழிகள் எங்களைச் சுழன்று சுழன்று கனிவோடு பார்த்துக்கொண்டே இருக்கட்டும்!

சுறுசுறுப்பான அந்தக் கால்கள் பயணம் செய்துகொண்டே இருக்கட்டும்!

காலத்தேவனே! காலத்தேவனே!

67-ல் எங்கள் அண்ணனை ஆட்சி பீடத்திலே அமர்த்தி வெற்றி மாலை சூட்டினுய். மக்கள் உன்னை மனமாற வாழ்த்துகிருர்கள். ஆகவே—

காலத்தேவனே! உனக்கு இரட்டிப்பு நன்றி!

அறிவு நூலகம்

# இன்று ஒரு சாரதி

வே. கபிலன்

பாரதப் போரின் தொடக்கத்துக்கும் அதன் முடிவுக்கும் மூலகாரணமாக விளங்கியவர் கண்ணன். அந்தக் கண்ணன் இல்லையென்றால் வியாசருக்குப் 'பாரதம்' எழுதும் வேலையே ஏற்பட்டிருக்காது. ஏன்? அவருக்கு மட்டுமா? தமிழகத்தைச் சேர்ந்த வில்லிபுத்தூராழ்வாருக்கும் தான் அந்த வேலை இருந்திருக்காது. ஆக, அனைவருக்கும் வேலை தந்தவர் கண்ணன். ஆம்; பாரதத்தின் முழு முதற் கதாநாயகன்......

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னே பாண்டவருக்கும் கௌரவருக்குமிடையே நடமாடி நேர்மைக்கு உயிரளித்தவர். உலகில் உண்மை நிலைப்பதற்காகவும் பொறாமைத் தீயை அணைப்பதற்காகவும், ஒன்றுபட்ட மனத்தை உண்டாக்குவதற்காவும் வேண்டி அவதாரமெடுத்து, அதற்கென்றே பணிபுரிந்து பாண்டவர்க்கு வெற்றி தேடித் தந்தவர்.

இப்படித்தான் பாரதக் கதை அமைந்துள்ளது. இது நடந்ததாகச் சொல்லப்படுவது ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னே! ஆனால் இந்த இருபதாம் நூற்றாண்டில் அப்படிப்பட்ட பயங்கரமான பாரத நிகழ்ச்சி நடைபெறவில்லை யென்றாலும் ஒரு பவுத்திரமான புதிய அத்தியாயம் முழுமையான வரலாற்றில் பதிய ஆரம்பித்து விட்டது.

ஆம், அந்த அத்தியாயத்தின் பெயர் தான் திராவிட முன்னேற்றக் கழகம். இதற்கு வித்தாக, அதாவது, உயிராக விளங்கியவர் அறிஞர் அண்ணா அவர்களாவார். அவர் இல்லையென்றால் இப்படி ஒரு புனிதமான இயக்கமே உருவாகி இருக்க முடியாது. அது மட்டுமல்ல, இவ்வளவு பெரிய மகத்தான மாறுதலையும் நம்மால் கண்டிருக்க முடியாது.

இன்றைக்குத் தெருவெங்கும் தமிழோசை கேட்கிறதென்றால், வீடெங்கும் விளக்கு போன்ற நூல்கள் பிரகாசிக்கிறதென்றால், நாடெங்கும் தமிழுணர்வு பரவி இருக்கிறதென்றால் அதற்கெல்லாம் முன்னோடியாக இருந்தவர், இருப்பவர் அறிஞர் அண்ணா அவர்கள்.

தூங்கிக் கொண்டிருந்த தமிழனை—துயர கீதம் பாடிக்கொண்டிருந்த தமிழறிஞர்களை தெளிவான ஒரு பாதைக்கு அழைத்து வந்த வித்தகர். ஆம்; அவர் இல்லையென்றால், 'தமிழக அரசு' என்னும் சொற்களுக்கே இன்னமும் உயிர் ஏற்பட்டிருக்காது.

அப்படிப்பட்ட உன்னத புருஷன் உதித்த நாள் இன்று. தமக்கென்று வாழாமல் பிறருக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர் பிறந்த மாதம் இது. ஏழ்மையில் பிறந்து, ஏழ்மையில் படித்து, ஏழ்மையில் வளர்ந்தவர் தோன்றிய பொன்னான வேளை இது.

விளக்கில்லாத வீடுபோல் இருந்த தமிழ்ச் சமுதாயத்தில் 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்னும் கலங்கரை விளக்கை தோற்றுவித்தார். அப்படி தோற்றுவித்த போது தோன்றிய ஏசலும், பூசலும் எண்ணிக்கைக்கு அப்பாற்பட்டவை. ஆனால் அதனுடைய இன்றைய நிலைமை எல்லாவற்றுக்குமே மாறுபட்டதாகிவிட்டது. எல்லாருமே ஏற்றிப் போற்றத்தக்க ஒரு வரலாறு அதற்கென்று உதயமாகிவிட்டது. இந்த உதயத்துக்குச் சாரதியாக விளங்கியவர் அண்ணா அவர்கள். இலட்சக்கணக்கான தோழர்களை அன்பாலும் அறிவாலும், அடக்கப்

பண்பாலும் ஒருமுகப்படுத்தி திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் தேரினைச் செலுத்தி வெற்றிக்குச் சிகரம் சமைத்தவர். ஏசுவையும் புத்தரையும், மகாத்மா காந்தி யையும் இதயமாம் சிறையில் வைத்து, எதிர்நோக்கி வந்த கணைகளை யெல்லாம் கடம்பமரப் பூக்களாக ஏற்று, எதிரிகளால் துன்பப்படும் தம்பியருக்கு, 'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்!' என்று உப தேசித்து வந்த. வருகின்ற அருங்குணத் தால் மூத்தவரை, தமிழகத்தின் முதல்வரை வாழ்த்த மறுக்கும் நெஞ்சம்தான் எங்கிருக் கிறது? 'இன்னா செய்வார்க்கும் இனியவை செய்!' என்ற புத்தர் நிழலை, 'தாக்குவது சிறுமை; தாங்கிக்கொள்வது பெருமை' என்ற ஏசுவின் ஒளியை, மது விலக்கில் அழுத்தமான உறுதிப்பாடுடைய காந்தியின் மாற்றுருவை தொழ மறுக்கும் கைகள் தான் ஏது?

இயக்கம் தொடங்கிய காலத்தில் அவர் மேற்கொண்டிருந்த கருத்து சாதாரண மானதன்று; எண்ணிப்போற்றத்தக்க ஒன் ருகும். சமுதாய சீர்திருத்தக்கொள்கையைத் தான் அப்போது அவர் ஏற்றிருந்தார். பன்னெடுங் காலமாக தமிழகத்தில் இருந்து வரும் ஏற்றத்தாழ்வையும், ஜாதியின் பேரால் ஏற்படும் விபத்தையும், 'ஆண்கள்' என்னும் ஆணவத்தால் பெண்ணுலகுக்கு ஏற்பட்டிருந்த அவல நிலையையும், தெய் வத்தின் பேரால் நேரிட்ட தீமைகளையும் அகிம்சை என்னும் பேரால் தோன்றி நில விய இம்சையையும் போக்கும் கொள்கை யைத்தான் பேச்சாகவும், எழுத்தாகவும், நடிப்பாகவும், செயலாகவும் வைத்திருந் தார். அதனல் ஏற்பட்ட விழிப்புணர்ச்சி யால் தமிழுணர்ச்சியை உண்டாக்கினர். தமிழ்ப் பகைவர்களால் மறைக்கப்பட் டிருந்த தமிழ்க்காவியங்களை—ஓவியங்களை— இலக்கியச் செல்வங்களை மக்கள் மன்றத் தின் முன்னே கொண்டு வந்து வைத்து, தமிழ் மனத்தை-பழந்தமிழர் இதயத்தை- முறை செய்து காத்த மூவேந்தர் பட்டியலை- முத்தமிழ்ச் சங்கத்தை—முத்தெனச் சொல லத்தக்க மூத்த தமிழ்ப் புலவர்களை முறை யாகப் பறைசாற்றி, 'அண்ணா' என்று அனைவராலும் அழைக்கும்படியாக தமிழ்க் குடும்பத்துக்குத் தலைமகனுனர். அதன் பிறகுதான், அதாவது, தமிழர்கள் தம் மைத்தாமே உணர்ந்து பார்க்கத் தொடங்கிவிட்ட பிறகுதான், அனைவரு டைய ஒப்புதலோடு அரசியலில் அடி யெடுத்து வைத்தார். 'அரசியல்' என்னும் போர்வையிலிருந்த களையை அகற்ற முனைந் தார். அதனல் மூண்டெழுந்த தீயை அன் பெனும் நீரால் அணைத்து 'அரசியல்' என் னும் இலக்கியத்துக்கு இலக்கணம் வகுத் தார். மக்களாட்சி என்னும் சொல்லையும், அதற்குள்ள பூரண சக்தியையும் சமுதாயச் சந்தையின் முன் வைத்து ஒவ்வொருவரு டைய உள்ளத்தையும் சிந்திக்க வைத்தார். மேனாட்டறிஞர்களின் முத்துக்களையும் தென்னாட்டு மேதைகளின் தேன் துளிகளை யும் மாந்தரின் மனம் என்னும் நிலத்தில் தூவினர். அதன் பலனை... அவரல்ல, அவ ரால் தோற்றுவிக்கப்பட்டு வளர்ந்த இயக் கம் மட்டுமல்ல, தமிழகமே இன்று அனு பவித்துக்கொண்டிருக்கிறது.

இரவை மறந்தார்... உறக்கத்தைத் துறந் தார்... 'ஆண்ட இனத்தார் மீண்டும் முற் ருகை; மாண்டிடும புழுவே, மகுடம் கழற்று!' என்று அவர் சொல்லவில்லை; அவரது கனி போன்ற சொற்களைச் சுவைத்த தமிழரே அந்தத் திருப்பணி யைச் செய்து, அண்ணாவை முதலமைச்ச ராக்கிவிட்டனர். ஆனல்...?

அவர் தம்மை இன்னமும் ஒரு தலைவரா கவோ, இந்நாட்டின் முதலமைச்சராகவோ கருதிக்கொள்ளவில்லை; ஒரு சாரதியாகவே எண்ணிச் செயல் புரிந்து வருகிறார், தொடர வேண்டிய பயணம், தொடர்ந்து, செய்து முடிக்க வேண்டிய பணிகள் இன்ன மும் எவ்வளவோ இருக்கின்றன என்னும் சொற்களைச் சொல்லாமல் சொல்லி உறு பசியும் ஓவாப்பிணியும் செறுபகையும் இல்லாத ஒருநாடாக மாற்ற தேரைச் செலுத்திக் கொண்டிருக்கிறார். இத்துணை சிறந்த ஒரு தொண்டுள்ளத்தை வாழ்த்தாத நாவும் போற்றாத நெஞ்சமும் இருக்க முடியுமோ? எனவே,

எழுத்திலும் பேச்சிலும், நடிப்பிலும் நடப்பிலும் தமிழுலகை வெளிச்சத்துக்கு அழைத்து வந்த அறிஞர் அண்ணா அவர்களை அகம் குளிர, முகம் மலர வாழ்த்தி வணங்கி அவரது முழு முதற் கொள்கையாக விளங்கி வரும் ஒற்றுமையும் உயர்ந்த பண்பும் செழிக்கவும் தழைக்கவும் பணிபுரிவோம்.

கண்ணனின் பணி முடிந்துவிட்டது. ஆனல் நம் அண்ணனின் பணி இன்னமும் முடியவில்லை என்பதற்கு அறிகுறியாக, அதோ, தேர் ஓடிக்கொண்டிருக்கிறது. பார்! தென்னவர் திலகம் அறிஞர் அண்ணா அந்தத் தேரைச் செலுத்திக்கொண்டு போகும் துரிதத்தைப் பார்...

அதோ, அண்ணாவின் புன்னகை... அன் பெனும் பிடிக்குள் அகப்படக்கூடிய அந்த மலையைப் பாருங்கள். தொடக்க முதல் தொகை தொகையாக தொல்லை தந்து வந்தோரையும் வாழ்த்தி வணங்கும் மன் னர் மன்னனைப் பாருங்கள்... பொறுமைக் கடலில் குளித்தெழுந்து வரும் முழு நிலை வைப் பாருங்கள்! அந்தப் பொன்னொளி யில் பணி புரிய வாருங்கள், வாருங்கள்!

# அண்ணாவைப் பற்றி அண்ணி

JAYA

நுங்கம்பாக்கம் அவின்யூ ரோடில் உள்ள முதலமைச்சர்திரு அண்ணாதுரை அவர்களின் வீடு. 'அண்ணா கண்ணுக்குத் தெரிவாரா' என்று தெருவிலிருந்து சில இளைஞர்கள் வீட்டை எட்டிப் பார்த்தபடி நிற்கிறார்கள். முதலமைச்சரின் பேரன் 'மலர்'. குட்டி சைக்கிளில் ஏறி, ரவுண்டடித்துக் கொண்டிருக்கிறான். சைக்கிளுடன் நடை வண்டியையும் கட்டிக்கொண்டு ஓட்டிக் கொண்டிருக்கிறான் அவன்!



வீட்டில் நுழைந்தவுடன் உள்ள ஹாலைத் தாண்டி, மாடிப் படிகளைக் கடந்து மேலே செல்கிறோம். மாடியிலும் ஒரு ஹால் இருக்கிறது. அங்கே—

முதலமைச்சரின் துணைவியாரான திருமதி ராணி அண்ணாதுரை அவர்கள், மும்முரமான வேலையில் ஈடுபட்டிருப்பதைப்பார்க்கிறோம். நாற்காலிகளை ஒழுங்கு படுத்துகிறார். டெலிபோன் மேலுள்ள தூசியைத் தட்டுகிறார். எங்கோ ஒரு மூலையில் படிந்த தூசும் அவர் கண்களில்படுகிறது. அதைக கையால் துடைக்கிறார்...எதுவும் அழகாக இருப்பது தான் இவருக்குப் பிடிக்கும் என்பது, வீட்டைப் பிரமாதமாக அழகு படுத்தியிருப்பதிலிருந்து நமக்குத் தெரிகிறது.

திருமதி ராணி அவர்களுக்கும் திரு. அணணாதுரை அவர்களுக்கும் 1930-ல் காஞ்சீபுரத்தில் திருமணம் நடந்தது. அப்போது திரு அண்ணாதுரை, கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தார். திருமணமான நானகு ஆண்டுகளுக்குப் பிறகே அவர் எம். ஏ. பட்டம் பெற்றார். திருமதி ராணி சென்னையில் பிறந்தவர். இவருடைய குடும்பம் திரு அண்ணாத்துரையின் குடும்பத்திற்குத் தூரத்து உறவுதான்.

## அண்ணு தந்த
## சுவையான விளக்கம்

ஃ ஃ

O தன்னைக் காண வந்த என். வி. நடராசன் அவர்களைப் பார்த்து ''எங் கிருந்து வருகிறீர்கள்'' என்ருராம் அண்ணு.

''சூலூரிலிருந்து வருகிறேன்'' என்ருர் என். வி. என்.

அதென்னய்யா அப்படிச் சொல் கிறீர்? நீர் மட்டுந்தாஞ சூலூரி லிருந்து வருகின்றீர்—'நாமெல்லோ ருமே சூலூரிலிருந்துதானே வந்திருக் கிருேம்' என்று கருவில் வளர்ந்து பிறந்த கதையை மறைமுகமாகக் குறிப்பிட்டார் அண்ணு!

'அது சரி சூலூரிலிருந்து கிளம்பு கிருேம். பிறகு நாம் செல்லுமிடம் எது?'

நடராசன் அவர்கள் பதில் ஏதும் கூருமல் புன்னகை புரிந்தாராம்.

'சொல்லுமய்யா சூலூரிலிருந்து புறப்பட்டு வருகிருேம்—பிறகு?'

இப்போதும் பதில் இல்லை.

சூலூரிலிருந்து புறப்பட்டு (கருவி லிருந்து) பாலூர், அன்னையின் அன்புப் பால் ஊட்டப் பெறுகிருேம். பிறகு முறைப்படி வளர்ந்த பிறகு வேலையூர் (தொழில் செய்தல்) செய்கிருேம். அங்கிருந்து சேலையூர் (திருமணம்) செல்கிருேம். பிறகு வசதியூர் தேடு வதிலேஈடுபட்டுக் கடைசியில் சுடலையூர் சென்று அமைதியுறுகிருேம். என்று இன்புற்று நகைத்திட அண்ணு சொன்ஞர்.

''ஆனல், திருமணத்திற்கு முன்பு என் கணவரை நான் சந்தித்ததில்லை. பெரிய வர்களாகப் பார்த்து நிச்சயித்து நடத்தியது எங்கள் திருமணம்'' என்று முதல் கேள்விக் குப் பதில் அளித்தவாறு பேட்டியைத் துவக் கிஞர் திருமதி ராணி அண்ணுதுரை. ''சீர் திருத்தக் கருத்துக்களுடைய ஒரு தலைவரு டன் வாழ்க்கையைத் துவக்குவதில் ஆரம் பத்தில் கஷ்டங்கள் ஏற்படவில்லையா?'' இதற்கு அவர் அளித்த பதில் :-

''அவர் பெரும் சீர்திருத்தக் கருத்துக்களை உடையவர் என்பதை நான் உணர்ந்து கொண்டேன். கணவருடைய கருத்துக்கு மாருக நடக்கக் கூடாது என்ற மனப் பக்கு வம் பெற்ற பிறகு, அவரை மணப்பதற்கு எனக்கு எந்த விதத் தயக்கமும் ஏற்பட வில்லை. எங்கள் குடும்ப வாழ்க்கையின் ஆரம்ப நாட்களிலிருந்தே அவர் பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருந்ததால், நான் அவருடைய தேவைக்கேற்ப நடப்பதற்குப் பழகிக் கொண்டேன். எனவே, எனக்கு ஆரம்பகால குடும்ப வாழ்க்கை அப்படி யொன்றும் கடினமாகத்தெரியவில்லை. தவிர அவர் எப்போதும் சொந்தக் கருத்துக்கு முழுச் சுதந்திரம் அளிப்பவர்.''

கேள்வி:—நீங்கள் கோவிலுக்குச் செல் லும் வழக்கம் உண்டா? வீட்டில் வழிபாடு கள் ஏதேனும் செய்வீர்களா?

திருமதி ராணி அண்ணுதுரை:— கோவி லுக்குச் செல்வதும், வழிபாடு செய்வதும் தான் தெய்வ நம்பிக்கை இருப்பதற்கான அடையாளம் என்ற கொள்கையை ஏற்றுக் கொள்பவள் இல்லை நான்!

கேள்வி:— குடும்ப வரவு-செலவுத் திட் டங்களை யார் கவனிப்பது வழக்கம்? பண விஷயத்தில் சிக்கனம் உங்களுக்குப் பிடிக் குமா?

திருமதி ராணி அண்ணுத்துரை:—

நான்தான் கவனிப்பேன். என் கணவ ருக்கு வீட்டு விஷயங்களைக் கவனிப்பதற்கு நேரமேது? ஆனல், ஒன்று. அவர் அரசி யலில் தீவிரமாக ஈடுபட்டிருந்த காலத்தி லும் சரி, இப்போதும் சரி. குடும் நிலையைச் சமாளிக்கும் திறமையை நான் பெற்றிருப் பது—அவரிடத்தில் நான் கற்ற பாடங்களில் ஒன்ருகும். சிக்கனமாக வாழ வேண்டிய சூழ்நிலையில்தான் நாங்கள் இருக்கிருேம். அதனல் எங்கள் குடும்பத்தைப் பொறுத்த வரை சிக்கனம் என்பது பிடித்தமானது மட்டுமல்ல; சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயமும் இருக்கிறது.

மகிழ்ச்சி மிகுந்த இந்த வாழ்க்கையில் அவர்களைக் கண்கலங்க வைத்த நிகழ்ச்சியும் ஒருநாள் நடந்தது.

''அதுதான், என்னுடைய சிறிய மாமியார், அதாவது 'அவ'ரது தொத்தா அவர்கள் இறந்தது. இந்த நிகழ்ச்சி எங்கள் குடும்பத்திற்கே பேரிழப்பாகும். அந்த நாளில் அவர் (அண்ணுதுரை) இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிக்காகச் சிறை சென்று பரோலில் வந்திருந்தார். நான்கு, ஐந்து நாட்கள் 'அவர்' சாப்பிடாமலே இருந்தார். நானும் என் குடும்பத்தாரும் வறபுறுத்திய பிறகுதான் சாப்பிட்டார்'' என்று, அந்த உருக்கமான நிகழ்ச்சியை நினைவிற்குக் கொண்டு வந்தவராகச் சொன்னர் திருமதி ராணி அண்ணுதுரை. திரு அண்ணுதுரையும இவரும் மகிழ்ச்சியிலேயே மூழ்கியிருந்த நாட்கள்—பிள்ளைகளின் திருமண நாட்களாகும்!

கேள்வி:— 'அண்ணு'விற்குக் கோபம் வருமா?

திருமதி ராணி அண்ணுதுரை :—

அவர் என்னிடம் கோபப்படும் அளவிற்கு நான் நடந்து கொள்வதில்லை.

கேள்வி :—வீட்டுச் சமையலை நீங்களே செய்கிறீர்களா? உங்கள் இருவருக்கும் பிடித்தமான உணவு எது?

திருமதி ராணி அண்ணுதுரை :—

வீட்டில் சமையலை நான்தான் செய்கிறேன். பிடித்தமானது என்று எதையும் அதிகமாகச் சாப்பிட மாட்டோம.

கேள்வி :—சென்ற தேர்தலில் 'அண்ணு' தோற்ற போது, அந்தத் தோல்வியைப் பற்றி என்ன நினைத்தீர்கள்? உங்கள் ஆறுதலை அவர் அப்போது பெற்ருரா?

திருமதி ராணி அண்ணுதுரை :—

அவர் தேர்தலில் தோல்வியுற்றதைத் தமது பொது வாழ்க்கைக்கு ஒரு தடைக் கல்லாகவோ அல்லது வருத்தப்பட வேண்டிய நிகழ்ச்சியாகவோ கருதவில்லை. நான்தான் சிறிதளவு வருத்தப்பட்டேன். எனக்கு அவர் ஆறுதல் கூறினர்.

கேள்வி :—அரசியல் விஷயங்களைப் பற்றி அவர் உங்களுடன் பேசுவது உண்டா?

திருமதி ராணி அண்ணுதுரை :—

அரசியல் விஷயங்களைப் பற்றி அவர் என்னுடனே அல்லது என் குடும்பத்தாருடனே

## அண்ணு அவர்களின் மன்னிக்கும் மனப்பான்மை!

அண்ணு அவர்கள் 67 பொதுத் தேர்தலுக்கு முன்பு தேர்தல் நிதி பெறுவதற்காக கோவை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்தார். அப்போது உடுமலைப் பேட்டை அருகில் அவரைத் தாக்குவதற்கு சிலர் முயற்சித்தனர். அந்தச் சதிச் செயலில் பிரபல மில் முதலாளி ஒருவரும் சம்பந்தப்பட்டு இருந்தார்.

67 பொதுத் தேர்தல் அண்ணுவுக்கு வெற்றி தேடித் தந்தது. அண்ணு தமிழகத்தின் முதலமைச்சரானர். ஒரு முறை சட்டமன்றத்தில்—உடுமலைப் பேட்டையில் அண்ணு தாக்கப்பட்ட பழைய நிகழ்ச்சிபற்றி சிவசாமி, ''தேர்தல் பிரச்சாரத்தின்போது காங்கிரஸ் மில் முதலாளி ஒருவர் திட்டமிட்டு இன்றைய முதலமைச்சர் அவர்களின் காரில் கல்லெறிந்தது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது'' என்று கேட்டார்.

''என்மீது சிலர் கல்லெறிந்தார்கள்—சிலர் மாலையும் போட்டார்கள். நான் இரண்டையும் ஒன்ருகவேமதிக்கிறேன் என்மீது கல் வீசியவர்களை நான் மன்னித்து விட்டேன். ஆகவே நடவடிக்கை எடுக்கப்படவில்லை'' என்ருர் அண்ணு.

இப்போது அண்ணு அவர்களிடம் அதிகாரம் இருக்கிறது என்ருலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்காமல் அவர்களை மன்னித்து விட்டார் தென்னுட்டு காந்தி அண்ணு.

✱

தி. மு கழகம் தமிழகத்தில் மட்டுமல்ல இந்தியா முழுமையிலும் பரவி தாழ்த்தப்பட்ட மக்களின் தலையாய இயக்கமாக இயங்க வேண்டும். இந்தியாவின் காங்கிரஸ் அல்லாத மாநிலங்களின் முதலமைச்சர்களுக்கு எல்லாம் முதன்மையான வழி காட்டியாய், இருந்துவருபவர் திரு அண்ணுத்துரை.

இந்தியாவின் காங்கிரசல்லாத முதல் தலைமை அமைச்சராக அவர் வர வேண்டும். தமிழகத்தில் அவரது கட்சி தி. மு. க. அரசியல் கட்சியாக மட்டும் அமையவில்லை——தமிழர்களின் ஒரு வாழ்க்கைமுறையாகவே மாறிவிட்டது.

—பீகார் மாநில உள்துறை அமைச்சர்
போலோ பிரசாத் சின்கா

பேசுவது கிடையாது. ஆனால், சென்னையில் குடிசைகள் தீப்பற்றி எரிந்த போது, வீட்டில் அவர் மிகவும் பரபரப்புடன் இருந்ததைப் பார்த்தேன். அவருடைய பொறுப்புக்களை உணர்ந்து எனக்குக் கவலைதான் பிறந்தது.

கேள்வி:—அவர் முதலமைச்சரான அன்று என்ன நினைத்தீர்கள்?

திருமதி ராணி அண்ணாதுரை :—

அவருக்குப் பொறுப்புக்கள் அதிகமாவது பற்றியும், கடமையாற்ற இவருக்கு நேரம் எங்கே இருக்கிறது என்றும் எண்ணினேன்.

கேள்வி :—சிபாரிசுக்காகத் தங்களை நாடி நிறையப் பேர் இப்போது வருவார்களே? அதை எப்படிச் சமாளிக்கிறீர்கள்?

திருமதி ராணி அண்ணாதுரை :—

சமாளித்துத்தானே ஆக வேண்டும்! அவர் முதலமைச்சரான பிறகு என் உதவி நாடி பலர் வருகின்றனர். அவர்களுடைய தேவை நியாயமானதாக இருந்தால், அவர்களுக்கு என்னால் முடிந்த அளவு உதவி செய்து வருகிறேன்.

கேள்வி :—உங்கள் அன்றாட நிகழ்ச்சிகள் என்ன? அண்ணா எப்போது சாப்பிடுவார்? படுக்கச் செல்லும் நேரம் எது?

திருமதி ராணி அண்ணாதுரை :—

என்னுடைய அன்றாட நிகழ்ச்சிகளில் குறிப்பிடத் தக்க அளவுக்கு ஏதுவும் இல்லை. அவர் எப்போது சாப்பிடுவார், எப்போது தூங்குவார் என்று கூறமுடியாது. காலையில் டிபன் சாப்பிடுவது அரிது. பகலில் இரண்டு அல்லது மூன்று மணிக்குச் சாப்பிடுவார். இரவில் அவர் மூன்று மணிக்குத்தான் படுக்கச் செல்கிறார். இரவில் இரண்டு மணிக்கு முன் அவர் படுத்ததில்லை.

கேள்வி :—'அண்ணா'வும் நீங்களும் கர்நாடக சங்கீதத்தை ரசிப்பது உண்டா? கச்சேரிகளுக்குப் போவது உண்டா?

திருமதி ராணி அண்ணாதுரை :—

உண்டு! கர்நாடக சங்கீதம் அவருக்கு மிகவும் பிடிக்கும்.

''அவருடன் நான் எப்பொழுதாவது வெளியே போவதுண்டு. சினிமாக்களுக்கும் போவேன். அவருக்கு ஆங்கில சினிமாக்கள்தான் அதிகம் பிடிக்கும்'' என்று சொல்கிறார் அவர். இன்றையப் பெண்களின்

> **நல்ல விளக்கம்**
>
> O 1967 தேர்தலுக்கு முன் ஒரு தேர்தல் கூட்டத்தில் பேசிய அறிஞர் அண்ணா அவர்கள் காங்கிரஸ் கட்சியை ஏன் ஆட்சிபீடத்திலிருந்து இறக்க வேண்டும் என்பதை சிறு எடுத்துக்காட்டின் மூலம் விளக்கினார்: ''இப்பொழுது நீங்கள் எல்லோரும் என்னுடைய பேச்சை கவனமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். ஒரே பக்கமாக இருந்த நீங்கள் மறு பக்கம் கால்களை திருப்பிப் போட்டு உட்காருகிறீர்கள். அதைப் போன்றுதான் ஒரே கட்சி ஆட்சியில் இருப்பதை மாற்றி 67ல் மாற்றுங்கள்'' என்றார்.

நாகரிகத்தைப் பற்றி இவர் என்ன நினைக்கிறார்? ''இன்றையப் பெண்கள் நாகரிகத்தை விரும்புவது இயற்கைதான். ஆனால், அது நம் நாட்டுப் பண்புக்கு இழுக்குத் தேடாத வகையில் இருந்தால் சரிதான்'' என்கிறார்.

இவருக்குப் பிடித்தமான நாவல் ஆசிரியர் யார்?

''நான் 'அவர்' எழுதிய புத்தகங்களைத் தான் விரும்பிப் படிப்பேன். கல்கியும் எனக்கு மிகப் பிடித்தமான நாவல் ஆசிரியர்'' என்று சொன்னார்.

பேரனுடன் விளையாடுவதுதான் இவருடைய பொழுதுபோக்கு. 'அண்ணா'விற்கும் அதுதான் பொழுது போக்கு என்கிறார் இவர். அந்த வீட்டில் வெளியே உள்ள சிறிய இடத்தை வீணாக்க மனமில்லாமல், காய்கறி பயிரிடப் பாடுபட்டிருக்கிறார் இவர்.

''அவருக்கு வேலை மிகவும் அதிகமாகத் தான் இருக்கிறது. எவ்வளவுதான் சொன்னாலும் அவர் உடல் நிலையைப் பற்றிக் கவலைப்படவே மாட்டார்'' என்பது இவர் வருத்தம்.

''விரைவில் 'அண்ணா'விற்கு அறுபது ஆண்டுகள் நிரம்பப் போகிறதே, அதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்'' என்று கேட்டபோது, ''அவரது வயதுக்கு மேற்பட்ட உழைப்புக்கு உரமூட்டும் மக்களது ஆதரவு பெருக வேண்டும் என்று நினைக்கிறேன். ஆதரவு நிச்சயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையையும் கொள்கிறேன்'' என்று சிந்தனையை எங்கோ செலுத்தியவாறு சொன்னார்.

—நன்றி: ஆனந்தவிகடன்

அறிவு நூலகம்

# வாழிய அண்ணா வாழியவே

## எல். கிருஷ்ணசாமி பாரதி., எம்.ஏ.,பி.எல்

'அண்ணா' என்றிடும்
போதினிலே—அன்பின்
சுவை வந்து தோயுது
காதினிலே!—தமிழர்
பண்ணிய புண்ணியம்
தமிழன்னை—நமக்குப்
பயந்து தந்தனள்
இப் பொன்னை!!

தமிழகத்தின் தலைமை அமைச்சர், திரு அண்ணாத்துரை அவர்களுக்கு இந்த ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தெட்டாவது ஆண்டு செப்டம்பர் திங்கள் பதினைந்தாம் நாள் அறுபது ஆண்டு நிறைவு பெறுகிறது. இந்தப் பொன்னான நன்னாளை தமிழக மக்கள் ஒரு திருவிழாவாகக் கொண்டாட முன்வந்துள்ளார்கள். இது மகிழ்ச்சிக்கும் பெருமைக்கும் பாராட்டுதலுக்கும் உரியதாகும். தனக்கென வாழாது, பிறருக்கு உரியவராக வாழ்ந்து வரும், திரு அண்ணாத்துரை அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து வருவாராக என்று வாயார மனமார வாழ்த்தி வழுத்துகின்றேன்.

இவர்பால் கொண்டுள்ள பேரன்பால், தமிழக மக்கள், ஒருமைப் பாட்டு உறவு முறை கொண்டாடி 'அண்ணா' எனறே அழகுற விழைவோடு அழைத்து மகிழ்ச்சி பெறுகிறார்கள். இக் கட்டுரையில், அன்பு ததும்பும் அவ்வழகிய பெயராலேயே குறிப்பிட விடை கொள்ளுகிறேன்; எழுதுகின்ற அடியேனுக்கு மட்டுமல்ல, படிக்கும் உங்களுக்கும், அதில் ஒரு இன்ப உணர்ச்சி ஏற்படும்.

அண்ணா அவர்களின் சிறப்பியல்களில் சிலவற்றை மட்டும் ஈண்டு மிகச் சுருங்கிய அளவில் குறிப்பிட விடை கொள்ளுகிறேன்—இதனை எழுத முற்படுவதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன். சான்றோர் ஒருவரைப்பற்றிப் பாராட்டுவது பெருமைக்குரிய காரியமல்லவா?

தமிழக அரசின் தலைமை அமைச்சர் பதவியைத் தாங்குதற்கு அண்ணா அவர்கள், தகுதியும் பொருத்தமும் ஒருங்கே அமையப் பெற்றவர். இப்பதவி, மெல்லியமலர்களால் பரப்பப்பெற்ற பட்டுப் பாய் அல்ல; திரும்பும் இடமெல்லாம், சுரீரெனக் குத்தும் கூரிய முட்கள் நிறைந்த இருப்பிடமாகும்.

'மன்பதைப் புரக்கும்
நற்குடிப் பிறத்தல்
துன்பம் அல்லது
தொழுதக வில்லையே!'

''Uneasy lies the head that wears the Crowr''—

''முடிமன்னர் படும் பாடு தலை இடியேயாகும்'' என்பது ஆங்கில நாடக ஆசிரியர் சேக்ஸ்பீயர் மொழி. அரசாட்சி, 'இருளுடை உலகம் தாங்கும் இன்னல்' என்பது கம்பன் வாக்கு!

தலைமை அமைச்சர் பதவி தாங்குவது, தியாகத்தின் சிகரம் என்பது எனது துணிந்த சிந்தைக் கருத்து. இவ்வரிய தியாகத்தை அண்ணா அவர்கள் நல்ல முறையில் ஆற்றி வருவது போற்றற்பாலது அரசியல் தலைவர்க்கு அவசியம் இருக்கவேண்டிய அரிய பண்பாடுகள் பலவற்றிற்கும் அண்ணா அவர்கள் நிலையமாய்த் திகழ்ந்து வருகிறார். பொறுமை, சாந்தம், அன்பு, இன்சொல், நடுவு நிலைமை, பிறரை இகழாமை, பெரியோரைப் போற்றுதல, இன்னா செய்யாமை வாய்மை, இன்னும் இவற்றிற்கு இணைப்பாய் உள்ள பண்புகள் பல இவரிடம் குடிகொண்டுள்ளன

சொற் செட்டோடு-சுருங்கச் செப்ப வேண்டுமானால் 'அண்ணா' அவர்கள், குறள் காட்டும் அறவழி நின்று செயல் ஆற்ற முயன்று வரும் அமைச்சராவார் என்பேன். நம் நாட்டில் எம் காலத்தில் குறள் வழி

நின்று செயலாற்றிய பெருமை 'மகாத்மா' காந்தி அடிகளையே சார்ந்ததாகும்—அவ் வழியில் 'காந்தீயம்' என்று மக்கள் அழைப் பர். அண்ணா அவர்களும்,—அப்படி ஒன் றும் தன்னைபபற்றிச் சொல்லிக் கொள்ளா மல், காந்தீய வழியைப் பின்பற்றும் முயற் சியில் அரசியல் துறையில் ஈடுபட்டு வருவது எம்மனோர் மகிழ்ச்சிக்கு மட்டுமல்ல, பாராட் டுக்கும் உரிய காரியமாகும்.

இந்தக் கண்ணோக்கோடு ஒன்றிரண்டு குறிப்பிடுகிறேன். 'அண்ணா' — காந்திஜி காட்டிய மிக எளிய வாழ்க்கை வாழ்கிறார். சிறிய வீடு—எளிய உடை, ஆடம்பரம் அறவே நீங்கிய வாழ்க்கை! தமிழக அமைச் சர்கள் மாதச் சம்பளம் 500-ரூபாய்களே. மற்ற மாநிலங்களில் இதற்கு இரண்டு மடங் குக்கும்—அதாவது, 1000க்கும் அதிகம். மத்திய காங்கிரஸ் அமைச்சர் சம்பளம் சுமார் ரூ 3000. 1937 காந்திஜி சொற்படி, அமைச்சர் சம்பளம் ரூ. 500-நாங்கள் சட்ட மன்ற உறுப்பினர் வாங்கிய தினப்படி ரூ 2-50. ரூபாய் இரண்டரையே! பயணத் திற்கு 3ம் வகுப்புச் சீட்டுகள் இரண்டு! நம் புகிறீர்களா? இது அடிகளார் திட்டப்படி நடந்தது!

காந்திஜிக்கு மிக உகந்த திட்டம் மது விலக்கு. மற்றக் காங்கிரஸ் மாநிலங்கள் அரசியல் சட்டத்திற்கு முரணாக, மதுவிலக் கைத் தளர்த்தி வருகிறார்கள்! ஆனால் 'அண்ணா'வின் ஆட்சியோ, அதைத் தீவிர மாக நடத்த உறுதி பூண்டுள்ளது. திருவள் ளுவர், 'கள்ளுண்ணாமை' என்று ஒரு அதி காரம் வகுத்து, பதது அருமையான குறட் பாக்களன்றோ எழுதி உள்ளார்! இத்திருக் குறள் அறவுரை, அண்ணா அவர்களின் குரு தியிலும் ஊனிலும் கலந்திருப்பது வியத் தற்கு உரியதாகுமோ? தமிழ் மறையை எதிர்க்கவோ, தளர்த்தவோ, அவருடைய தமிழ் மனம் இடங்கொடுக்குமா, என்ன? அண்ணாவைப் போற்றுகின்றேன்!

இனி, அண்ணாவின் மொழிக் கொள் கையே, தி. மு. க.வின் தேர்தல் வெற்றிக்கு முக்கிய காரணங்களில் ஒன்றாகும் இந்தித் திணிப்பை 'அண்ணா' முழு மூச்சாக எதிர்த் தார். தமிழக அரசில் தமிழ்; மத்திய அரசு நிருவாகத்தில் ஆங்கிலம், என்ற இரு மொழிக் கொள்கையே ஏற்புடைத்து என் றார். இதனை தமிழக மக்கள் ஆதரிக்கின் றனர். இந்தி பூதம் இனி தமிழகத்தில் தலைகாட்ட முடியாது என்ற நிலைமையை ஏற்படுத்திய பெருமை திரு அண்ணா அவர் களையே சார்ந்ததாகும்! வாழ்க! அண்ணா!

வெற்றிநம் நாட்டினை
முற்றும் பிளந்திட
வெறிகொண்டு
இந்தி வருகுவதோ?
கொற்றக் கொடியினை
ஏற்றியே வீழ்த்திட
குறைகொண்ட
இந்திகுடி ஏறுவதோ?
ஆற்றலோ டாற்றிடும்
ஆங்கில மொழியினை-மைய
ஆட்சிமொழி என்ற
நிலையினை முற்றும்
மாற்ற நினைப்பதின்
மடமைவே றுண்டோ?
மாற்றிடில் நாட்டின்
ஒற்றுமை மறையும்

''சீர்தூக்கும் கோல்போல்
அமைந்தொரு பால்
கோடாமை சான்றோர்க்கு அணி!''

என்பது ஒரு அருமை திருக்குறள். இதனை வற்புறுத்தும் வகையில், அண்மையில், சென்னையில் இராஜாஜி மண்டபத்தில் அண்ணா அவர்கள் நிகழ்த்திய சொற்பொழி வின் பகுதிகள் ஈண்டு பதிவு பெறுவதற் குரியன!

''நான் தவறு செய்வதாகக் காணும் போது, துணிச்சலுடன் என்னிடம் வந்து, இது தவறு என்று கூறும் அதிகாரியை நான் உற்ற நண்பனாக மதிப்பேன்.''

''எனது கட்சி உறுப்பினர்கள், அன்றாட நிருவாகத்தில் தலையீடு செய்தால், அதை எனக்குத் தைரியமாக எடுத்துச் சொல்லுங் கள். என் கட்சி உறுப்பினர்களை நான் எடுத்து எறிவதில் தயங்க மாட்டேன்.''

''சட்டமன்ற உறுப்பினர்களில் எதிர்க் கட்சி உறுப்பினர் ஆளும்கட்சி உறுப்பினர் என்ற வேற்றுமையை அதிகாரிகள் சிறிதும் பாராட்டக் கூடாது'' சட்டமன்ற உறுப் பினர்கள், பொதுப் பிரச்சினை அல்லாது தனிப் பிரசினைகளைப்பற்றி யாரேனும் ஒரு வர் சார்பில் சலுகை கோரி அதிகாரிகளை நிர்ப்பந்திக்கலாகாது. அப்படிப்பட்ட நிர்ப் பந்தங்களை அதிகாரிகள் புறக்கணிக்கலாம். யாராவது நிர்ப்பந்தித்தால் என்னிடம் சொல்லுங்கள்.''

பொன்னே போற் போற்ற வேண்டிய இவ்வற உரைகளுக்கு விளக்கம் தேவையா? நடுவு நிலைமைக்கு இதனினும் சான்று பிறிது வேண்டுமோ?

தமிழர்கள் நோற்ற நோன்பால் நமக்குத் தலைமை அமைச்சராக வாய்க்கப் பெற்ற திரு அண்ணாத்துரை அவர்கள், தொடர்ந்து மக்களுக்குச் சேவை புரிந்து வர, ஆண்டு பல வாழ்ந்துவர பல்லாண்டு கூறுகிறேன்!!
வாழிய அண்ணா! வாழிய வாழியவே!

அறிவு நூலகம்

# தனக்குவமை இல்லாத தலைவர்

"வி. வி"

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு, பொதுப் பணியில் ஈடுபட விரும்புகிறவர்களுக்கும் அதன் மூலம் புகழ்பெற எண்ணிய இளைஞர்களுக்கும் இந்திய நாட்டின் விடுதலைப் போராட்டம் ஒன்றுதான் சுலபமாக, விரைவில் புகழ் தேடித்தரும் சாதனமாக இருந்தது. தூக்குமேடை ஏறிய பகத்சிங்கும் கொடிகாத்த குமரனும் காவியத் தலைவர்களாகிவிட்ட நேரம் அது. அதன் பிறகு விடுதலைப் போராட்டத்தில் உயிர்த்தியாகம் என்பது கட்டாயத் தேவையல்ல என்ற நிலையை ஏற்படுத்திவிட்டார் காந்தியடிகள்

ஒருவன் கதராடை உடுத்தி குல்லாய் அணிந்து "வந்தே மாதரம்! போலோ, பாரத் மாதா கீ ஜேய்!" என்று குரல் எழுப்பினாலே தேச பக்தன் என்ற பட்டத்திற்கு அவன் தகுதி பெற்று விடுவான். இரண்டு பொதுக்கூட்டங்களில் போய் அன்னிய ஆட்சியைப்பற்றிப் பேசிவிட்டால் தேசத் தலைவன் ஆகிவிடலாம் அதன் பிறகு சில நாட்கள் சிறையில் கழித்துவிட்டால் தியாகிப்பட்டம் நிரந்தரமாகி விடும்.

கதராடை அணிந்து காந்தி பக்தன் என்ற பெயருடன் உலவுவதே ஒரு பெருமையாகக் கருதப்பட்டது. இந்த ஒரு தகுதிக்காகவே மக்கள் இவர்களைப் பாராட்டினார்கள் நாற்பது கோடி இந்திய மக்களுக்காக வெள்ளைக் காரனிடம கத்தியின்றி ரததமின்றி போராடும் கர்ம வீரர்களாக அவர்கள் கருதப் பட்டனர்.

கல்லூரிப் படிப்பிற்குப் பிறகு பொதுப் பணியிலே ஈடுபட்ட அறிஞர் அண்ணா அவர்களுக்கு புகழும் பெருமையும் மாத்திரமே குறிக்கோளாக இருந்திருந்தால் அன்று அவரைக் கவர்ந்து இருக்கவேண்டியது காந்தியடிகளின் விடுதலை இயக்கம் தான். ஆனால் மற்றவர்கள் உணர்ச்சிக்கு மாத்திரம் கட்டுப்பட்டவர்களாக ஆறு போகும் போக்கிலே இழுத்துச் செல்லப் பட்ட நேரத்திலே அவர்களைப்போன்ற இளைஞர்களில் ஒருவரான அறிஞர் அண்ணா அவர்கள் மட்டும் ஆற்றின் பெரு வெள்ளத்திலே எதிர் நீச்சல் போட ஆரம்பித்தார்.

1937 ல் நடந்த பொதுத்தேர்தலில் நீதிக் கட்சியின் கோட்டைகள் எல்லாம் சரிந்து விழுந்தன. பனகல், பொப்பிலி மன்னர்களும், சர் ஏ. ஆர். முதலியார்களும் காங்கிரஸ்காரர்களால தோற்கடிக்கப்பட்டன. பிறகு நீதிக்கட்சி தனது வரலாற்றையே முடித்துக் கொண்டுவிட்டது எனலாம். விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தேசபக்தர்கள் நீதிக்கட்சியினரை "வெள்ளைக் காரனின் கங்காணிகள்" என்று முத்திரையிட்டே அவர்களைத் தலை எடுக்க விடாமல் செய்துவிட முடிந்தது.

அந்த நிலையில் படித்த, பட்டம் பெற்ற எந்த இளைஞனும் நீதிக்கட்சியின் அடிப் படைக் கொள்கைகளைத் தொடர்ந்து காப் பாற்றத் துணிந்திருக்கமாட்டான். ஆனால் அறிஞர் அண்ணா அவர்கள், தலைவர்கள் எல்லாம் விலாசம் தெரியாமல் போய்விட்ட நேரத்திலே, மறைந்த மாவீரர் சத்திய மூர்த்தியின் வார்த்தைகளில் சொல்லப் போனால். நீதிக்கட்சி குழி தோண்டிப் புதைக்கப்பட்டுவிட்ட நிலையிலே, சாய்ந்து விட்ட வாழை மரத்தினடியிலே குருத்து விடும் இளம் வாழைக் கன்றுபோல புதியதொரு இயக்கம் பிறப்பதற்கு ஏற்ற பணியை மேற்கொண்டார்.

காந்தியடிகள் முழுச் சுதந்திரம் வேண்டும் என்று குரல் எழுப்பிய நேரத்திலே அதற்காக சட்ட மறுப்பு, ஒத்துழையாமை இயக்கங்களைத் தூண்டிவிட்ட நேரத்திலே அவரது போராட்ட முறைகளை ஏற்றுக்கொள்ளாத தலைவர் கோபால கிருஷ்ண கோகலே தான். நாட்டின் விடுதலைக்காக நடக்கும் போராட்டத்தில் கூட சட்டத்தை மீறு

வதையும் ஒத்துழையாமையையும் கிளர்ச்சியையும் அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்திய மக்கள், அதுவும் போதிய அளவு கல்வி பெறாத மக்கள் ஒருமுறை சட்டத்தை அவமதிக்கத் துணிந்துவிட்டார்களானால் மீண்டும் சட்டம், ஒழுங்கு போன்றவைகளின் புனிதத் தன்மையிலே அவர்களுக்கு நம்பிக்கை உண்டாக்குவது சிரமம். இந்தியா விடுதலை பெற்ற பிறகு அவர்கள் சத்தியாக்கிரகம் செய்யும் குணத்தை விட்டு விடுவார்கள் என்பது என்ன நிச்சயம்? இப்படிக் கேட்டதனால் கோபால கிருஷ்ண கோகலே தேசிய இயக்கத்தினரால் பிற்போக்காளர் எனப் பட்டம் சூட்டப்பெற்றார். அதன் பிறகு இந்திய விடுதலை போராட்ட வரலாற்றிலிருந்தே அவர் பெயர் நீக்கப்பட்டது.

பண்டித மதன்மோகன மாளவியா, புரட்சி எரிமலை சவர்க்கார் போன்றவர்கள் கூட காந்தியடிகளின் அடிச்சுவட்டில் நடக்க விரும்பாத காரணத்தால் அவர்கள் நாட்டுக்காகச் செய்த சேவையை யாரும் ஒப்புக்கொள்ள மறுத்தனர்.

''காந்தீயம்'' ''தேசியம்'' என்ற இந்த இரண்டு லேபில்களும் இல்லை என்றால் அந்த நாளில் பெயர்பெற்றத் தலைவர்களே காலாவதியாகிக் கொண்டிருந்த நேரம் அது!

இந்த இரண்டு லேபில்களும் இல்லாமலே தனது பணியைத் தொடங்கினார் அறிஞர் அண்ணா. அதிலே வெற்றி காண முடியும் என்று அந்த நாளில் அவர் எண்ணி இருப்பாரா என்று இப்போது நம்மால் கூற முடியாது.

அவர் அன்று தொடங்கியது பல முனைப் போராட்டம்.

சமுதாயத்தில், ஜாதியின் பேரால் நிரந்தரமாக்கப்பட்டு விட்ட ஏற்றத் தாழ்வுகளை ஒழித்தல்.

பொருளாதாரத்திலே நாட்டின் ஒரு பகுதியினர் இன்னொரு பகுதியினரை ஏமாற்றி, தாம் மட்டும் வளரும் கொடுமையை அகற்றல்;

பகுத்தறிவு இயக்கம் மூலமாக மக்களிடையே ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக மத போதகர்களாலும் புராண இதிகாசங்களாலும் புகுத்தப்பட்டு வேரூன்றிக் கிடந்த மூட எண்ணங்களையும் பழக்க வழங்கங்களையும் ஒழித்தல்.

மொழித்துறையிலே நூற்றாண்டுகளாக அன்னியமொழிகளின் ஆதிக்கம் காரணமாக, குப்பையிலே தள்ளப்பட்டுக் கிடந்த தாய்மொழியாம் தமிழை அரியாசன மேறச் செய்தல்.

இத்தனை பெரிய காரியங்களையும் இயற்ற வல்ல போராட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட நேரத்திலே அதற்காக அவர் தெரிந்தெடுத்த தலைமை—பெரியார் அவர்களின் தலைமை எல்லாவற்றுக்கும் சிகரம் போன்றது. ஆம், அந்த நாளில் முற்போக்கு எண்ணம் கொண்ட இளைஞர்கள் எல்லாம் பெரியாரின் தலைமையில் இனிமேல் நம்மால் உழைக்க முடியாது என்று திணறிப்

---

## அண்ணாவின் பெருந்தன்மை

1967 பொதுத் தேர்தல் அண்ணா அவர்கள் தென் சென்னைத் தொகுதியில் பாராளுமன்றத்திற்குப் போட்டியிட்டார். வாக்குப் பதிவு நடைபெற்று முடிந்தது. அப்போது முடிவுகள் சரிவர வெளிவராத சமயம். காவல் துறையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தனது காவல் துறைப் பணிகளைச் செய்வதுடன் நிற்காமல் தமக்குத் தேவையற்ற வேலை ஒன்றினையும் செய்தார். தான் அரசினரின் அலுவலாளர் என்பதையும் மறந்துவிட்ட அந்த அதிகாரி நாவலர் நெடுஞ்செழியன் அவர்களிடம் போன் மூலம் ஒரு கேள்வி கேட்டாராம்.

''உங்கள் அண்ணாதுரை தேர்தல் தோல்வியினால் தற்கொலை செய்து கொண்டாராமே'' என்றாராம்.

அண்ணா தமிழகத்தின் முதல்வரான பிறகு அதிகாரியின் கேள்வி அண்ணாவின் காதிற்கு வந்தது. வேறொரு முதலமைச்சராக இருந்தால் தான் பதவிக்கு வந்தவுடன் திமிருடன் கேள்வி கேட்ட அந்த அதிகாரியின் சீட்டைக் கிழித்துவிட்டுத் தான் மறு வேலை பார்ப்பார். ஆனால் தென்னாட்டுக் காந்தியான அண்ணா என்ன சொன்னார் தெரியுமா?

''அந்த அதிகாரி இன்னும் என் கண்ணெதிரேதான் இருக்கிறார். அவர்மீது ஒரு சிறு ஈ அமர்வதைக்கூட நான் சகித்துக் கொள்ளமாட்டேன்'' என்று பெருந்தன்மையுடன் கூறினார் அண்ணா.

*　　*　　*

தி மு. கழகத் தலைவர்கள் இனிமையாகப் பேசினார்கள்—மற்றவர்களைப் போல் இல்லை.

—தமிழகக் கவர்னர் உஜ்ஜல் சிங்

போய் வெளியேறிவிட்ட நேரம் அது. ஜீவானந்தம் அவர்களும் முத்துசாமி வல்லத்தரசரும் இந்தப் பெரியாரின்சர்வாதி காரத்தில் எந்த ஒரு பகுத்தறிவு இயக்க மும வளராது என்று தீர்மானமாகசொல்லி விட்டு வெளியேறிய பிறகு, அதே பெரி யாரின் தலைமையிலே பத்து ஆண்டு காலத் திற்குள்ளாகவே ஒரு பெரிய பகுத்தறிவு இயக்கத்தை அமைத்துத் தந்தார் அறிஞர் அண்ணா.

தேசிய வட்டத்திற்கு உட்படாத, காந்தி யடிகளின் பெயரைக் கொண்டு வளராத மிகப் பெரிய இயக்கமாக வளர்ந்துவிட்டது திராவிடர் இயக்கம். புதிய தலை முறை யின் அறிவுப் பாசறையாக காந்தியடிகள் உண்டாக்கியதைவிட பன்மடங்கு அதிக மான உணர்ச்சி வெள்ளத்தின் ஊற்றாகப் பெருகிவிட்டது. அறிஞர் அண்ணாவின் பகுத்தறிவு இயக்கம். மற்றவர்கள் வாய்ப் பற்றது, வசதியற்றது என்று கைவிட்ட இயக்கத்திலிருந்துதான் அறிஞர் அண்ணா இவற்றை எல்லாம் உண்டாக்கினார் என் பதை நம்புவதற்கும் சிரமமாக இருக் கிறது.

சுலபம் என்பதற்காக எந்த மார்க்கத்தை யும் ஏற்றுக்கொண்டதில்லை அவர். சிரம மானதாக இருந்தாலும் தாம் செய்யும் காரியத்தில் உண்மையிலேயே நல்ல விளைவு கள் உண்டாகும் என்று கருதினால்தான் அதை அவர் ஏற்றுக்கொள்வார். ஆரம் பத்தில் தொழிற்சங்க இயக்கங்களில் ஈடுபட் டார் அறிஞர் அண்ணா. அவருக்கிருந்த சொல் ஆற்றலை காரணமாக வெகு சுலபத் தில் அவர் இந்திய நாடு முழுவதையும் ஆட் டிப் படைக்கும் தொழிற் சங்கத் தலைவராகி இருக்க முடியும். அதை அவர் செய்ய வில்லை. மிகச் சிரமத்துடன் மற்றவர்களால் எளிதில் புரிந்து கொள்ளவோ, உடனே பாராட்டவோ முடியாத துறைகளில் அவர் தம்மை ஈடுபடுத்திக்கொண்டார். இடை விடாது உழைத்தார்.

தனது இனத்திற்காக உழைத்த ஆற்றல் மிகுந்த தலைவர் ஜின்னாவுக்கு அவரது இனத் தாரின் ஆதரவு நூற்றுக்கு நூறு என்ற விகிதத்தில இருந்தது. அவரை எதிர்த்துப் பேசுகிறவன் அந்த சமுதாயத்தைச் சேர்ந்த வனாகவே கருதப்பட்டானில்லை. ஆகவே ஜின்னாவின் வெற்றி சுலபமாயிற்று.

மாஸ்டர் தாராசிங் தனது இனத்தின் முடிசூடா மன்னராக ஒப்புக்கொள்ளப்பட் டிருந்த காலம் ஒன்று இருந்தது. ஆனால் அவர் வாழ் நாளிலேயே அவரது இனத்தி லிருந்தே, இயக்கத்திலிருந்தே அவருக்கு

திரு. சி. என். ஏ. அவர்கள் மாநிலங்களவையில் உறுப்பினராக இருந்தபோது அவரை நான் தெரிந்து கொண்டேன். அவரிடத்தில் காணும் ஒரு தலைவருக்குரிய பண்புகளும் இனியதும் அவரது பான்மையும் என்னை மிகவும் கவர்ந்தன. தமிழகத் திலே காங்கிரஸ் தோற்கடிக்கப்பட் டது அறிந்து நாங்கள் இயற்கையால் மகிழ்கிறோம். இந்தத் தோல்வியை ஏற்படுத்துவதில் திரு. அண்ணாத் துரை வகித்த பங்கு குறிப்பிடத் தக்கது.

—புபேஸ் குப்தா, எம். பி.

எதிரிகளை உருவாக்க முடிந்தது அவர் தம் பகைவர்களால். அதனால் அவர் தன் இனத் திற்கு விரும்பினவற்றை சாதிக்கமுடியாமல் போய்விட்டது.

மேற்சொன்ன இரண்டு தலைவர்களைப் போல எடுத்த எடுப்பிலேயே புகழ் ஏணி யின் உச்சிப்படியைத் தொட்டுவிடாத அறிஞர் அண்ணா அவர்கள் ஒவ்வொரு படி யாக நிதானததுடன் ஏறிச் சென்று இன்று தமது இனத்தை வாழ வைக்கும் பணியிலே தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்.

அதிலேகூட மற்ற அரசியல் தலைவர்க ளுடன் ஒப்பிட முடியாத தனித் தன்மை அண்ணா அவர்களுக்கு. இதுவரை அரசி யலிலே ஏற்றம் பெற்றவர்கள் எல்லாம் நண் பர்களையும் பகைவர்களையும் குழியில் தள்ளி விட்டுத்தான் முன்னேறி இருக்கிறார்கள், ஆட்சியைப் பிடித்திருக்கிறார்கள். அறிஞர் அண்ணா அவர்களோ வழக்கமாகக் குழியில் தள்ளப்பட்டவர்களை எல்லாம் தமது நட் புறவால் வாழச் செய்து அதன் மூலமாகவே தமது வெற்றித் திருப்பணிக்கு வழி வகுத் துக்கொண்டவர்.

அண்ணாவின் அரசியல் வளர்ச்சிக்கு உவமையாக வேறு எந்த இந்தியத் தலை வரின் வாழ்க்கை வரலாற்றையும் கூற முடி யாது. வெளி நாடுகளில் வேண்டுமானால் கரிபால்டி, கமால் பாஷா போன்ற தலைவர் கள் இருந்திருக்கலாம். நமது நாட்டைப் பொறுத்தவரையில் மக்களால் உடனே ஏற்றுக்கொள்ளப்படாத கருத்துக்களை ஆத ரித்து படிப்படியாக மக்களை தமது பாதை யில் இழுப்பதில் வெற்றி கண்ட ஒரே தலைவர் அறிஞர் அண்ணாதான்.

★

**With the best compliments of:**

## Sathya Narayana Bros.,

Engineers & Contractors,

*"MANDHARA"*

25, Edward Elliots Road, Mylapore, Madras-4.

Tel: 83768, 83769 & 83760

Telegrams: SATH BROS

Make your visit to Madras memorable by Staying at

# *Hotel* ARUN



You get all the best and MAHARANI SERVICE

202. Poonamalle High Road, Aminji karai. Madras-29

Cable: ARUNSON

Tel: 63316 to 63319
64482 & 64483.

# இனிய நினைவுகள் !

பேராசிரியர் க. அன்பழகன், எம். ஏ., எம். பி.

இருபத்து எட்டு ஆண்டுகட்கு முன்னர் மாயூரம் நகரப் பூங்காவில் நடைபெற்ற தொரு இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில், இளை ஞர் ஏறுவாகத் திகழ்ந்த அண்ணா அவர்கள், காஞ்சி சி. என். அண்ணாதுரை, எம். ஏ. பேசுவார் என்று அறிவித்தவுடன் மேடை ஏறிப் பேசத் தொடங்கினார்கள் மற்றவர் கள் பேசும்போது, மக்கள் கவனக் குறை வுடன் வேறு உரையாடலில் ஈடுபட்டிருந் தார்கள். ஆனால் அண்ணா அவர்கள் மேடை ஏறி, ''தலைவரவர்களே, தோழர் களே, தாய்மார்களே,'' என்று விளித்து பக்க வாட்டத்தில் திரும்பித் திரும்பிச் சுழ லும் மின்விசிறிபோல் இடமிருந்து வலமாக, வலமிருந்து இடமாகத் திரும்பியவாறு, அடுக்கு அடுக்காக, தொடர் தொடராக, காரண காரிய விளக்கத்தோடு பேசத் தலைப் பட்டவுடன், கூட்டமே வாய் பிளந்து வேறு எதிலும் கருத்தைச் செலுத்தாமல் அவர் உரையைக் கேட்க முற்பட்டது அவர் பேசிய அந்த முறை. மாற்றுக் கட்சியினரை யும் வியப்பில் ஆழ்த்தியது. ஒலிபெருக்கி இல் லாத அக்காலத்தில்—நாலாபக்கமும் குழுமி யிருந்த மக்கள் தெளிவாகக் கேட்டு மகிழ்ந் தனர். கூட்டம் கலைந்து செல்லும்போது, அனைவரும் அவர் பேச்சைப் பற்றி வியந்து உரையாடியவாறே சென்றனர். அந்தக் கூட்டத்திற்கு எனது தந்தையார் என்னை யும் அழைத்துச் சென்றிருந்தார். இளமை யில் நான் கண்ட அந்தக் காட்சியை இன் னும் மறக்க முடியவில்லை.

19 2-ல் தில்லை நகரில் ஒரு பொதுக் கூட் டம். அக்காலத்தில் முசுலீம்களை இழிவு படுத்திப் பேச விரும்பிய காங்கிரசார் அவர் களைக் காட்டிக் கொடுப்பவர்கள் என்று சாடுதற்கு—மீர்சாபர் பரம்பரை என்று பேசி வந்தனர். அதிலுள்ள தவறைப் புலப் படுத்த விரும்பிய அரசியல் அறிஞர் அண்ணா அவர்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தில் அன்று வரலாற்றில் பேராசிரியராக விளங்கிய தம்முடைய முன்னாள் ஆசிரியர் சுக்கா என்னும் சீனிவாசாச்சாரியார் அவர் களது கூற்றையே துணையாக்கி-வரலாற்று ஏடுகளைச் சான்றுகாட்டி-வங்காள வரலாற் றில் சுராஜ் உட்டௌலா ஆட்சிக் காலத் தில், வெள்ளையர்களுக்கு அந்த ஆட்சியைக் காட்டிக்கொடுத்த கெடுமதியாளன் ஓமிர்ச் சந்து என்னும் இந்துவே யன்றி, மீர்சாபர் அல்ல என்று விவரித்துப் பேசினார். அன்று அங்கு கூடியிருந்த மாணவர்கள் யாவருமே- தேசிய மாணவர்கள் உட்பட வியப்புற்று நின்றனர். அந்தப் பேச்சின் ஆற்றலையும் என்னால் மறக்க முடியவில்லை.

அடுத்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தில் அறிஞர் அண்ணா சொற்பொழிவாற்ற வேண்டும் என விரும்பி-நான் இலக்கிய மன்றச் செயலாளனாக இருந்த நிலையில் அவர்களை அழைப்பதற்குத் தீர்மானித் தோம். தமிழ்ப் பேராசிரியராக விளங்கிய கா. சு. பிள்ளை அவர்கள் உடன்பட்டார். ஆயினும் எதிர்ப்புகள் பல கிளம்பின. துணை வேந்தர் வரையில் சென்று தடுகக் முயற்சித் தனர். அப்பொழுது அங்கு துணைவேந்தராக அமர்ந்திருந்த பேராசிரியர் ரத்தினசாமி அவர்கள் தடைகள் பல எழுந்தாலும் என் னுடைய உறுதிமொழிகளை ஏற்றுக்கொண்டு இசைந்தார்.

அண்ணா அவர்களைக் கண்டு இசைவுபெற முற்பட்டேன். நான் வேண்டுகோளைத் தெரி

வித்து-நிலையையும் கூறினேன். தனக்குப் பெருமை தர வேண்டும் என்பதற்காகத் தான் நானும் எனது தோழர்களும் எதிர்ப் புக்கிடையில் அவரை அழைத்திருப்பதாக எண்ணி, எளிதில் இசையவில்லை. ''மாண வர்கள் தங்கள் பேச்சைக் கேட்கப் பேரவா கொண்டுள்ளனர்''-என்றேன். அப்படியிருப் பின் தில்லையிலோ—வேறு இடத்திலோ பேசும்போது வந்து கேட்டுக்கொள்ளலாமே என்றார். நமது கருத்தைப் பரப்புவதற்கு அது வாயிலாகும் என்றேன். அதற்குப் பல் கலைக்கழக மேடையைப் பயன்படுத்தித் தானா ஆகவேண்டும், என்றார். கடைசியாக தங்களைப் பல்கலைக் கழக மேடையில் பேசச் செய்து, கேட்டும் கண்டும் மகிழ்வதற்குப் பலரும் விரும்புகின்றனர், அதற்காகவாவது இசைய வேண்டும் என்றேன். ஒருவாறு உடன்பட்டார்கள்.

பல்கலைக் கழகத்திலோ-பண்டிதர்கள் சில ரது எதிர்ப்பு; மாணவர்களிடையே மாறு பாடு; துணைவேந்தருக்கோ கவலை; எனக்கும் என் நண்பராக இருந்த சிலருக்குமோ, எப் படியும் நடத்திக் காட்டவேண்டும் எனும் பேரவா; அண்ணா அவர்கட்கோ—தம்மைச் சார்ந்து நிற்கும் மாணவருக்கு ஏதேனும் தொல்லை விளையுமோ என்னும் எண்ணத் தால் பிறந்த தயக்கம்.

கடைசியாக அண்ணா அவர்களும் இசைந்து வந்தார்கள். பல்கலைப் புலவர் கா.சு. பிள்ளை தலைமையேற்று அண்ணாவை வரவேற்றுப் பேசினார். பட்டமளிப்பு விழாவன்று மட் டுமே பொங்கி வழியும் சீனிவாச சாத்திரி மண்டபம் அன்று நிறைந்து விளங்கிற்று. அண்ணா பேசத் தொடங்கினார். உலகிலே நாகரிகம் பிறந்து-வளர்ந்த நதிக்கரைகளிலே எல்லாம் உலவினார். அருவியின் வீழ்ச்சியோ, ஆற்றொழுக்குத் தானோ, தேன் மழையோ, தென்றல்தான் சுழன்று வீசுகிறதோ என எண்ணுமாறு முழங்கினார். நைல் நதியும், யூப்ரடீஸ், டைக்ரீஸ் ஆறுகளும், தேம்சும், வால்காவும் வடிவுகொண்டு ஓடின. சிந்து நதியின் கரையில் வளர்ந்த வரலாறும்-கங்கைக்கரை நாகரிகமும் விளக்கியுரைக்கப் பட்டன. அதனை அடுத்து வளங்கொழிக்கும் காவிரியும், வைகையும் அதன் மருங்கிலே வளர்ந்த பண்பாடும் நாகரிகமும், அதன் தொன்மையும் தனித் தன்மையும், அவை தமிழர்க்கேயுரிய தனிப் பெருமைகளாக இலங்குவதையும், அந்த நாகரிகத்தில் அதன் உச்சியில் பிறந்த முத்தமிழ்க் காவிய மாம் சிலப்பதிகாரம் காட்டும் தமிழகத்தை யும், அந்தத் தமிழகத்தின் மாவீரன் சேரன் செங்குட்டுவன் பெற்ற வடதிசை வெற்றி யையும் விவரித்துக்கொண்டே சென்றார். உரையின் போக்கிலே உள்ளத்தைப் பறி கொடுத்து நின்றது மண்டபம். உரையை முடித்தார். நன்றி கூறும் வாய்ப்பு எனக்கு. எவ்வளவு இனிய கடமை! அன்று அண்ணா மலைப் பல்கலைக் கழக மாணவரிடையே ஏற் பட்ட எழுச்சி, அண்ணாவின் பேச்சு விளை வித்த பேரார்வம் இன்னும் என்னால் மறக்க முடியாததாகவே உள்ளது.

மறுநாள்—அதே மண்டபத்தில் உலகம் பழையதும்—புதியதும் என்னும் தலைப்பில் அவர் நிகழ்த்திய ஆங்கில உரை-தமிழர் அல்லாத பிற ஆசிரியர்களையும், மாணவர் களையும் ஈர்த்தது. அண்ணா அவர்களது உரையால், அவரிடம் பிறந்த மதிப்பு-பின் னர் பெரியார் அவர்களை அழைக்கவும் ஏது வாயிற்று. அண்ணா அவர்கள் 'கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்'-என்னும் குறளுக்கே உரையாக நின்றார்கள் என்றால் மிகை யாகாது.

சிதம்பரத்தில் அண்ணா அவர்களும், அவ ரது அருமை நண்பர் பலருமாக 'சந்திரோ தயம்' என்னும் சமூக சீர்திருத்த நாட கத்தை நடத்தினர். அந்நாடகத்தில் அவர் ஒரு வஞ்சக மடாதிபதியைத் தந்திரமாக விரட்டி, அவருடைய பொன்னையும், பொரு ளையும் பொது நலத்திற்குப் பயன்படுத்த விரும்பி, அதைச் செயல்படுத்துவதற்குத் துணையாக ஒரு ஜமீன்தாராக வேடமிட்டு வருவார். அவ்வாறு அவர் ஜமீன்தாராக வேடமிட்டுள்ள நிலையில் தான் செய்த குற் றத்திற்காக தன்னைக் காவலர் கைது செய் யும் நிலை ஏற்படும் முன்னரே தற்கொலை செய்துகொள்ளத் தீர்மானித்து நஞ்சு அருந் திட முனைகிறார். அந்தக் காட்சியைக் கண்டு கொண்டிருந்தார் திருவொற்றியூர் டி. சண் முகம் அவர்கள். அதைப் பார்த்துக்கொண் டிருக்கவே முடியவில்லை அவரால். அண்ணா துரை எம். ஏ. பட்டம் பெற்றவர். ஜமீன் தாராக இருப்பது பொருத்தமாகவே இருக் கிறது. அவர் செய்ததில் என்ன தவறு? மடாதிபதியைக் கொள்ளை அடித்தது குற் றமா? எனவே அவர் தற்கொலை செய்து கொள்ளக்கூடாது; வேண்டாம் தற்கொலை! நிறுத்துங்கள் என்று உரக்கச் சொல்லி விட்டுக் கண்ணீருடன் அமர்ந்தார்.

அண்ணா அவர்கள் நடித்தபோது அது நாடகம் என்பதையே மறந்திட வைக்கு மாறு இயற்கையாக அமைந்துவிட்டது அவரது நடிப்பு. அனைவரையும் கண்ணீர் சிந்த வைத்தது என்றால்—உண்மை என்றே நம்பிக் கலங்க வைத்தது என்றால் அந்த நிகழ்ச்சியைக் கண்ட யாரால்தான் அதை மறக்க முடியும்?

# அண்ணாவும் நானும்

சிலம்புச் செல்வர் ம. பொ. சி., எம்.எல்.ஏ.

என் பெருமதிப்புக்குரிய அண்ணா அவர்கள், முப்பது ஆண்டுகளுக்கு முன்பே எனக்கு அறிமுகமானவர். எனது மணி விழாக் கூட்டத்தில், அவரே மிகுந்த அன்போடும் பரிவோடும் அறிவித்தது போன்று, நம்பிக்கைக்குரிய நண்பர்களின் பட்டியலிலே அவருக்கு முதலிடம் தந்திருக்கிறேன்.

ஒரு தலைமுறைக்கு முன்பு தமிழகத்தில் தோன்றிய சமுதாய சீர்திருத்த கிளர்ச்சியிலே அண்ணா அவர்கள் முன்னணித் தலைவராகத் திகழ்ந்தார். சீர்திருத்தத்திலே அவர் அளவுக்கு நான் தீவிரவாதி அல்லேன். ஆயினும், அத்துறையிலும் நாங்கள் சேர்ந்து பணியாற்றக் கூடிய பல அம்சங்கள் உண்டு.

தமிழ் மொழியின் வாழ்விலே—வளர்ச்சியிலே, நாங்கள் இருவரும் ஒரே மாதிரியான கொள்கைகளையும், கோரிக்கைகளையும் ஆதரித்து வருகிறோம்.

எளிய குடியில் பிறந்து, உயர்தரக் கல்வி கற்று அரசியல் துறையிலே முன்னணியில் இடம்பெறுவதென்பது இந்த நாட்டில் அவ்வளவு எளிதில் நிகழ்ந்துவிடக் கூடியதன்று. எல்லையற்ற பொறுமையும், நீடித்த உழைப்பும், தளராத நம்பிக்கையும் அறிஞர் அண்ணா அவர்களுக்கு தமிழ் நாட்டின் முதலமைச்சர் பதவியைத் தந்துள்ளன.

இராஜ தந்திரத்திலே அவர் வேறு யாருக்கும் இளைத்தவரோ, சளைத்தவரோ அல்ல. தமிழகத்தின் பாரம்பரியமான அறிவுக்கும், செயல் திறமைக்கும் அவர் ஒரு எடுத்துக் காட்டாக விளங்குகின்றார்.

அவரோடு சேர்ந்து செயலாற்ற வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் சிறிதும் தயங்காமல் மிகுந்த நம்பிக்கையோடும் மகிழ்ச்சியோடும் அந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி வந்திருக்கிறேன். தட்சிணப் பிரதேசத் திட்டத்தை எதிர்க்கவும், தேவிகுளம்—பீர்மேடு பகுதிகளை மீட்கவும் 1956-ல் தமிழரசுக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் சேர்ந்து செயல்பட்டன. அது ஒரு சரித்திர நிகழ்ச்சியாகும். அந்தக் காலத்தில் அடிக்கடி எங்களிடையே நடந்த சந்திப்புகளும், பரஸ்பர உரையாடல்களும் நாங்கள் ஒருவரை யொருவர் நன்கு புரிந்து கொள்ளப் பெரிதும் பயன்பட்டன.

தமிழ்நாட்டின் அரசியலிலே எல்லாக் கட்சிகளாலும் எதிர்க்கப்பட்டு அத்தனை எதிர்ப்புகளுக்கும் ஈடு கொடுத்து வளர்ந்த பெருமை ஒருவருக்கு உண்டென்றால் அவர் அறிஞர் அண்ணாவாகத்தான் இருக்க முடியும்.

தாம் பொது வாழ்வில் ஈடுபட்ட நாள் தொட்டு இடையிலுள்ள முப்பதாண்டுக்கு மேற்பட்ட காலத்தில் — அவருக்குள்ள பெருமையும் திறமையும் சிறிது கூடக் குன்றியதே இல்லை.

எதிர் காலத்தில் தலைவர்களாக வரக் கூடிய எண்ணற்ற இளங்காளையர்களின் பெருந் தலைவராக, அவர்களுக்கெல்லாம் வழி காட்டும் ஒளி விளக்காக விளங்குகின்றார் அறிஞர் அண்ணா. அவர் இன்னும் பல்லாண்டுகள் ஆரோக்கியத்துடன் இருந்து, பாரத நாட்டின் சரித்திரத்தில் நிலையானதொரு இடத்தைப்பெற்று வாழ வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

தமிழ்மொழி பாமரர்களுக்கு எட்டாக் கனியாக இருந்த ஒரு காலத்தில் அண்ணு தமது பேச்சாலும் எழுத்தாலும், பண்டிதத் தமிழுக்கும் பாமரர் தமிழுக்கு மிடையே ஒரு உறவை ஏற்படுத்தினுர்.

மக்களுக்கும் இலக்கியத்திற்கு மிடையே நிலவிய இடைவெளியைக் குறைத்தார். அதன் விளைவாகப் புதிய புதிய எழுத்தாளர்களை, பேச்சாளர்களைத் தோற்று வித்த பெருமைக்கு உரியவரானுர். தமிழ் மொழியின் வளர்ச்சியில் நாட்டமுடைய எவரும் இதனை மறுக்கமாட்டார். இது சாதாரண பணியன்று. தமிழ் மொழியில் அவர் ஏற்படுத்திய மகத்தான மறு மலர்ச்சியாகும். அதற்காகவும் அவருடைய பிறந்த நாளைக் கொண்டாடி அவருக்கு வாழ்த்துக் கூற தமிழர் அனைவருமே கடமைப்பட்டிருக்கின்றனர்.

## தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வாழ்வளிப்பதே தி. மு. க. முதல் வேலை.

O வெட்கப்படாமல், கூச்சப்படாமல் நாமிருப்பது ஒரு நாடுதானு? என்று ஆராயவேண்டும். தைரியமாகச் சிந்தித்தால் தெளிவு ஏற்படும். நம் நாடு பல் வேறு பகுதிகளை இணைத்து ஒரு நாடு ஆக்கப்பட்டுள்ளது. நாம் ஒரு நாட்டு உணர்ச்சிக்கு நம்மைப் பக்குவப்படுத்திக்கொண்டு வருகிருேம். அந்த உணர்ச்சியை நாம் இன்னமும் பெற வில்லை—இவைகளை மறப்பது ஒருமைப் பாட்டுக்கு நல்லதல்ல.

O ''வடக்கே உள்ள பெரும் தலைவர்களின் பெயரால் தமிழ்நாடு முழுவதும் பூங்காக்களும், சதுக்கங்களும் மன்றங்களும் இருப்பதைப் பார்க்கிருேம். ஆனுல் தென்னுட்டு மேதைகளின் பெயரால் வடக்கே எந்தச் சின்னமும் இல்லை ஆகவே ஒருமைப் பாடு என்பது இரண்டு பக்கத்திலும் நடக்கவேண்டுமே தவிர ஒரு பக்கத்திலேயே எல்லாத் தியாகங்களும் இருக்கும், மற்ற பக்கத்தில் தியாகமே இருக்காது என்பது சரியல்ல.

O ''ஒரு விஷயத்தை உறுதியாகக் கூறுகிறேன், பொறுப்பான இடத்தில் இருந்துகொண்டு, மக்களுக்கு நன்மை செய்ய முடியாமல் போகுமென்று தெரிந்தால் — மறுகணமே ஆட்சிப் பொறுப்பில் இருக்கமாட்டேன்.''

O நான் ஒவ்வொரு நாளும் சட்டமன்றத்தில் பேசும் போது, இதுதான் நமது கடைசிப் பேச்சாக இருக்கும் என்ற எண்ணத்தோடுதான் பேசுகிறேன். இதுவல்லாமல் ஏதோ இந்தப் பதவியில் இருப்பதனுல் குச்சி அடித்து வைத்த மாதிரி சாசுவதமாக அமர்ந்திருக்க வேண்டுமென நான் நினைக்க வில்லை.

O ஒவ்வொரு கட்டத்திலும் தாழ்த்தப்பட்ட சமுதாயம் அழுத்தி வைக்கப் பட்டுள்ளது. சமுதாயத்தின் எல்லாப் பிரிவுகளினுலும், பொருளாதாரத்தினுலும், மதத்தினுலும்...வருணுசிரமக் கொடுமையினுலும் பிற்பட்ட பகுதி மக்கள்...தாழ்த்தப்பட்ட மக்கள் அழுத்தப்பட்டு வந்துள்ளார்கள்.

ஆகவே எல்லாத் துறைகளிலிருந்தும் தாழ்த்தப்பட்ட மக்களை உயர்த்தி விட உதவி செய்தாக வேண்டும்.

இந்த உதவியைச் செய்யும்போது 'இதைச் செய்கிறேன்; என்ன தருகின்ருய்?' என்று பேரம் செய்யாமல் உதவி செய்யவேண்டும்.

பிற்பட்ட சமுதாயத்தை நாம் எல்லோரும் சேர்ந்து தூக்கிவிட்டாலன்றி, அழுத்தி வைக்கப்பட்ட நிலையிலிருந்து அதனை உயர்த்த முடியாது.

--அறிஞர் அண்ணு

# பாரிசில் ஒரு தமிழர்

## யுனெஸ்கோ உதவி டைரக்டர் ஜெனரல் ஆதிசேஷய்யா

"எனது பயணத்துக்குரிய பொருட்களை எல்லாம் ஒழுங்கு படுத்துவதற்காக நான் அதிகாலையில் எழுந்திருக்க வேண்டியிருக்கிறது. விமான நிலையத்திற்குச் செல்வதற்கு முன்பு, நான், லோவர் பகுதிக்கு அவசியம் செல்ல வேண்டும். பாரிஸ் நகரத்தின் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கண்காட்சிச் சாலையைப் பார்க்காமல்—அங்கே சிறிது நேரம் செலவு செய்யாமல் பாரிஸ் நகரத்தைப் பிரிந்து செல்ல என்னால் முடியாது" திரு அண்ணாதுரை அவர்கள் பாரிஸில் தங்கியிருந்த சமயத்தின் கடைசி இரண்டு மணி நேரங்களை எவ்வாறு செலவிட்டார் என்பதை இந்த வாசகங்கள் தெரிவிக்கின்றன. பாரிஸ் நகரக் கண்காட்சியில் உள்ள சித்திர வேலைப்பாடுகள்—சிற்பங்கள், மனித நாகரிகத்தின் பாரம்பரிய விளக்கங்கள் அனைத்தையும் லோவர் பகுதியில் அவர் கண்டு களித்தார் என்பதை இந்த வாசகங்கள் தெளிவாக்குகின்றன. உலகக் கலையையும் அதன் உன்னதத்தையும் கண்டு—அவற்றின் மூலம் கலாச்சாரத் தொடர்ச்சியையும் உலக மனிதத்துவத்தையும் காணுகின்ற ஒரு தமிழர் பாரிஸ் நகரில் வலம் வந்தார். இதை எண்ணும்போது, "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று அண்ணா அடிக்கடி நினைவுபடுத்தி வரும் ஒரு மூதுரைக்கு, கண்கண்ட வடிவமாக அவர் திகழ்கிறார் என்றே தோன்றுகிறது.

"சுழலும் மேடை, அரங்கங்கள், விளக்கமைப்புக்கள் அனைத்திலும் சிறந்து விளங்கும் இந்த சேட்லட் கலை அரங்கம்போல சென்னைக்கும் ஒன்று தேவைப்படுகிறது. இதுபோன்ற மாற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் நமது தமிழகத்தின் கலைப்பெருமையை விளக்குவதற்கும், சென்னையில் உள்ள மியூசியம் தியேட்டர் தகுந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன்"—சேட்லட் தியேட்டரில் நடைபெற்ற இரண்டரை மணி நேர இசை நாடகம் ஒன்றினைப் பார்த்து விட்டு, தியேட்டரை விட்டு வெளியே வரும்போது அண்ணா சொல்லிய வாசகங்கள் இவை.

அண்ணா பார்த்த நாடகம்—மேட்ரிட் இளவரசர் என்பதாகும். உள்ளத்தைத் தொடுகின்ற விதத்தில், வீர தீர நிகழ்ச்சிகள் அடங்கிய வரலாற்று நாடகம் அது. முழுக்க முழுக்க பிரெஞ்சு மொழியில் எழுதப்பட்டது அது. என்னைச் சுற்றிலும் அமர்ந்திருந்த தமிழர்களுக்கு பிரெஞ்சு மொழி அவ்வளவாகத் தெரியாது. அதன் காரணமாக, அந்த நாடகத்தின் உரையாடலை, தமிழிலும் ஆங்கிலத்திலும் அடிக்கடி மொழி பெயர்த்துச் சொல்லிக் கொண்டிருந்தேன், என்னைச் சுற்றி இருந்த தமிழர்களுக்கு. ஆனால், பிரெஞ்சு மொழியறியாத அண்ணாவுக்கு நான் அவ்வாறு சொல்லவில்லை. ஏனென்றால் நடிப்பு, பாட்டு, காட்சி மாற்றம், அரங்கத்தின் சுழற்சி, விளக்கமைப்புக்கள் அந்தத் தயாரிப்பின் கலை நுணுக்கங்கள் அனைத்தையும் ரசித்து 2-30 மணி நேரமும் அதிலே மூழ்கிக் கொண்டிருந்தார் அண்ணா. நாடகத்தால் அவர் முழுக்க முழுக்கக் கவர்ந்து இழுக்கப்பட்டுவிட்டார். விளக்கு அமைப்புக்களில் வியந்து அவரது வதனம் ஒளி வீசிக் கொண்டிருந்தது. அவரது மனம், நடைபெறுகின்ற ஒவ்வொரு காட்சியையும் ஆழ்ந்து கவனித்துக் கொண்டிருந்தது. தனது தாயகத்தில் இவற்றை எந்த அளவுக்குப் பயன்படுத்துவது எப்படிப் பயன்படுத்துவது என்று திட்டமிட்டுக்கொண்டிருந்தது.

எண்ணிய எண்ணியாங்
கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்

என்ற பேருண்மையுடன் பாரிஸில் உலவினார் அந்தத் தமிழர்.

திரு அண்ணாத்துரை வெர்செய்ல்ஸில் உள்ள சேட்யூ என்னும் பகுதிக்கும் அங்குள்ள புகழ் பெற்ற பூங்காவிற்கும் வருகை தந்தார்.

''வெர்ஸெய்ல்ஸ் எனக்குப் பெரிய அனுபவத்தைத் தந்தது. அங்கே நான் நடந்து சென்றபோது 14-ம் லூயி கொலு வீற்றிருக்கும் காட்சியை என்னால் நினைவுபடுத்திப் பார்க்க முடிந்தது. சேட்யூவைச் சுற்றிலும் உள்ள அழகும் செறிவும் நிறைந்த பூங்காவின் வழியாக நான் சென்றபோது — பிரிட்டிஷ் காலனிகள் செய்த கலகத்தில் பிரான்சும் கலந்துகொள்வது பற்றி மேரி அன்ட்டாய்னட்டி, லபயேத்துடன் சதி செய்துகொண்டிருந்த காட்சியை நான் திரைப்படமாக்கிப் பார்த்தேன். அந்த மாளிகையின் மிகப் பெரிய— உறுதியான இரும்புக் கதவுகளை என் கை விரல்களால் தொட்டுப் பார்த்தபோது, பழைய வரலாறு என் மனதுக்குள் உதிக்கத் தொடங்கியது. பசித்த வயிறுடனும் பஞ்சைத் தோற்றத்துடனும் கொடிய குளிரில் நின்று தவிக்கிறார்கள் ஏழை மக்கள். அசைக்க முடியாத பெருங் கதவின் இரும்புக் கம்பிகளை அசைத்துப் பார்க்கத் துடிக்கிறார்கள் அவர்கள். காரணம் உண்பதற்கு ரொட்டியில்லை அவர்களுக்கு. அப்போது அவர்களுக்குக் கிடைத்த பதில்—''ரொட்டி இல்லை என்றால் என்ன? கேக் தின்னலாமே'' வரலாறு மீண்டும் வடிவெடுத்து வந்தது போல் தெரிந்தது எனக்கு. — வெர்ஸெய்ல்ஸுக்கு அண்ணாதுரை வந்தபோது அவரது இதயம் இப்படித்தான் எண்ணியிருக்கும் என்று நான் யூகிக்கிறேன்.

கடந்த இரண்டாண்டுக்காலமாக அவரது தாயகத்தில் இருந்த பஞ்சம்-நகரங்களிலும் கிராமங்களிலும் மக்கள் உணவுக்காக அலைந்தது; ஆலாய்ப் பறந்தது—வெர்ஸெய்ல்ஸுக்கு வந்தபோது—அவரது நினைவுக்கு வந்திருக்கவேண்டும். ஒரு ரூபாய்க்கு மூன்றுபடி அரிசி என்னும் அவரது தலையாய குறிக்கோள், அவர் கற்ற பாடத்தின் எதிரொலியாகத்தானே தோன்றுகிறது! வரலாற்றில் இருந்து கற்றுக்கொண்டாரா? வரலாறு தானாகத் திரும்புகிறதா, அல்லது பிறரால் திருப்பப் படுகிறதா ?

''நவீன மனிதனுக்கு 13 விதிகள்'' என்ற பட்டியலை குன்னர் மைட்ரல் என்பவர், தனது ஆசிய நாடகத்தின் 61ம் பக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார். இந்தியர்களாகிய நாம், அந்த விதிகளை கடைப்பிடிப்பதில்லை; நம்மை—நமது மனப்பான்மையை நாமே மாற்றிக்கொள்ள வேண்டும் என்றெல்லாம் மைட்ரல் கூறுவது முற்றிலும் உண்மையான ஒன்று. மைட்ரலின் பட்டியலைப்போல ஒரு பட்டியலை இருபதாண்டுக்கு முன்பு, தமிழகத்து மக்களின் கவனத்துக்கு நான் கொண்டுவந்தேன். அவர்களுக்கு எது தேவைப்படுகிறது. அவர்கள் எந்த விஷயத்தில் குறைபாடுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதையெல்லாம் நினைவு படுத்தத் தொடங்கினேன்'' — மைட்ரலின் மூன்று பெரும் புத்தகங்கள் நாடுகளின் வறுமைபற்றித் தெரிவிக்கும் கருத்துக்களை பற்றி நானும் திரு அண்ணாத்துரை அவர்களும் யுனெஸ்கோ அலுவலகத்தில் உரையாடிக்கொண்டிருந்தபோது அண்ணாத்துரை தெரிவித்த கருத்துத்தான் மேலே காணப்படுவது. நாங்கள் இவ்வாறு விமர்சித்துக் கொண்டிருந்தபோது. அண்ணாவிடம் கோபமோ, அச்சமோ, போலித்தனமான வெட்கமோ காணப்படவில்லை. அதுமட்டுமல்ல; நம்முடைய நாடு என்பதற்காக நமது மக்கள் என்பதற்காக நாம் அடைந்திருக்கின்ற தோல்விகளைத் தட்டிக் கழிக்கின்ற தன்மை அவரிடம் காணப்படவில்லை. நமது தோல்வியை விவேகமுள்ள செயல் என்று வர்ணிக்கக் கூடிய செய்கை அவரிடம் இல்லை. மாறாக, நமது மனப்பான்மை மாற வேண்டும், நமது மதிப்பு உயரவேண்டும் என்பதன் அவசியத்தை அவர் உணர்ந்திருந்தார்.

தமிழன் தனது கடந்த காலத்தை எண்ணி, நிச்சயம் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். அதிலும் நீதியில் சிறந்த செங்குட்டுவன் விட்டுச் சென்றிருக்கும் பாரம்பரியத்தை எண்ணி நிச்சயம் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். இந்தத் தமிழர் பாரிஸிற்கு வருகை புரிந்தது அறிவுக்கு வாழ்க்கை அமைத்துக்கொடுப்பதுபோல் இருந்தது. பிறப்புக்கும் இனத்திற்கும் மேற்பட்டது அறிவு.

''ரினால்ட் தொழிற்சாலை கண்ணைத் திறக்கும் சாதனம். பிரான்ஸ் அரசாங்கம் மிக உன்னதமான முறையிலே அமைத்து, இயக்கிவரும் இந்தத் தொழிற்சாலையில் மாதத்திற்கு 4000 கார்கள் எளிதாக, திறம்படத் தயாராகின்றன. தொழிலாளர்களுக்காக நடத்தப்படும் கான்ட்டீன், துணிமணிகளின் விலை—அவர்களது வீடுகள் யாவும் தமிழ் நாட்டவர்கள் பின்பற்றத் தக்க வகையில் உள்ளன.''—பிலின்ஸ் பகுதியில் உள்ள ரினால்ட் ஆட்டோமோபைல்ஸ் தொழிற் சாலையில் அரை நாளைச் செலவு

செய்தபோது அண்ணா அவர்கள் தெரிவித்த வாசகம் இது. இதன் மூலம், தமிழர்களைப் பற்றிய ஒரு உண்மையை அவர் தெரிவித்தார். பாரிஸ் நகரத்தின் வீதிகளில்—கலாச்சாரமும் ஆத்மீகமும் நிறைந்த நகரத்தில் அவர் நடந்து சென்றிருக்கலாம். ஆனால், அதே நேரத்தில், நகர்ப்புறத்தில் உள்ள தொழில் பகுதிகளில்—புகையும் கரியும் படிந்த பகுதிகளில் — அவரது பாதங்கள் நடைபோட மறக்கவில்லை. அவர் அடிக்கடி, தனக்குத்தானே ஏதோ சொல்லி வந்தார். அந்த வார்த்தைகள் இவை தான்:

அறன்ஈனும் இன்பமும் ஈனும்
திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.

''நான் எனக்காகவோ—என் மனைவிக்காகவோ, எந்தப் பொருளையும் இந்தப் பாரிஸ் நகரத்தில் வாங்க விரும்பவில்லை. சிபான் என்னும் பிரெஞ்சு நாட்டுச் சேலை பற்றி நான கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் காஞ்சிபுரம் சேலைதான், கண்யமாகவும் அமைதியாகவும் இருக்கும் என்று கருதுகிறேன். என் மனைவியும் இவ்வாறேதான் கருதி வருகிறாள். நீங்கள் என்னம்மா கருதுகிறீர்கள்?'' ஒரு நாள் மாலை நாங்கள் உணவு அருந்தும்போது, திரு அண்ணாதுரை அவர்கள் எனது துணைவியாரிடம் இவ்வாறு கேட்டார்.

திரு அண்ணாதுரைக்கு, பாரிஸிலிருந்து என்ன அனுப்பலாம் என்று என் மனைவி விசாரணை செய்துகொண்டிருந்தாள். உண்மையில், தனிப்பட்ட முறையில் அண்ணா அவர்கள் கூச்ச சுபாவம் உள்ளவராக இருப்பதை நான் கவனித்தேன். ஆனால், குடும்ப சம்பந்தமான விஷயங்களைப் பொறுத்த வரையில் அவர், கூச்சமின்றி, உரிமையுடனும், பெருமையுடனும் பேசி வருவதைக் கண்டேன். சில விஷயங்களில் தனக்கும் சரி, தனது நாட்டுக்கும் சரி, போதும் என்ற மனப்பான்மை அவரிடம் இருந்து வருகிறது. என்றாலும் நமது தேவைகளை எல்லாம் பூர்த்தி செய்கின்ற அளவுக்கு, தமிழ் நாட்டில் பல விஷயங்களில் செறிவு இருக்கிறது. அதிலும் பெண் இனத்தின் அழகை—அமைதியைப் பெருமைப்படுத்துகின்ற விஷயத்தில் தமிழகத்துக்கு வேறு எந்த நாடும் கற்றுக் கொடுக்க வேண்டிய அவசியம் கிடையாது.

நன்னீரை வாழி அனிச்சமே
நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள்.

யுனெஸ்கோ கட்டிடத்தின் ஐந்தாவது மாடியில் சாப்பாட்டு அறையில் அமர்ந்தபடி, புகழ்பெற்ற எய்ஃபெல் கோபுரத்தை நாங்கள் பார்த்துக்கொண்டிருந்தோம். அப்போது பல விஷயங்களைப்பற்றி நாங்கள் விவாதித்தோம். அதில் ஒன்று நமது இளம் சந்ததியினருக்கும் வயது வந்தவர்களுக்கும் இடையேயுள்ள இடைவெளிபற்றியதாகும். உலகத்தில் உள்ள எல்லா நாடுகளிலும் இளைஞர்களும் மாணவர்களும் அதிகாரத்தையும் சமூகத்தையும் எதிர்த்துப்போராட்டங்கள் செய்து வருகிறார்கள். தேர்வுகளையும் பாடங்களையும் எதிர்த்துக் குழப்பம் புரிந்து வருகிறார்கள்—வேலையில்லாத் திண்டாட்டத்தினால் விளைகின்ற விளைவுகளைக் கடிந்து வருகின்றார்கள். நமது காலத்தில் தோன்றுகின்ற சிறிய யுத்தங்களையும் பெரும் யுத்தங்களையும் ஏற்க மறுக்கிறார்கள்.

பஸ் டிரைவர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையில் ஒரு மோதுதலை தனது நகரத்தில் சந்தித்த திரு அண்ணாத்துரை அவர்கள், அதுபற்றி யுனெஸ்கோவின் டைரக்டர் ஜெனரலான திருமாகூவிடம் தெரிவித்தார். எதிரொலிக்கும் விதத்தில் திடமான குரலில் தெரிவிததார்.

''பிரச்சனை — உண்மையிலேயே இது பிரச்சனை என்றால்—அது இளைஞர்களைப் பொறுத்ததல்ல! நம்மைப்போன்ற வயது வந்தவர்களைச் சேர்ந்தது. இளைஞர் பிரச்சனையைப்பற்றி நாம் பேசிக்கொண்டிருப்பதைவிட, வயது வந்தவர்களின் பிரச்சினை பற்றி நாம் பரிசோதித்துப் பார்க்க வேண்டும். ஏனென்றால், இளைஞர்கள், சமுதாயத்தை எதிர்த்துக் கலகம் செய்கின்ற அளவுக்கு, சமுதாயத்தை உருவாக்கியிருப்பது நம்மைப் போன்ற வயது வந்தவர்களின் செய்கைதான்! ஒரு விஷயம் தெளிவாகியிருக்கிறது. உண்மையாக இருக்கிறது. நஷ்டம் அடைவது, நஷ்டம் அடைந்ததாகக் கருதப்படுவது எல்லாம் நமது சந்ததியினர் தான். அவர்கள் பலாத்காரமான முறையிலே நடைபோடத் தொடங்கினால், அவர்களைச் சமாளிப்பதற்காக நாம் போலீஸ்காரர்களை அனுப்புவதைவிட, நமது குடும்பத்தில் ஏற்படுகின்ற தொல்லைகளைச் சமாளிப்பதற்காக போலீஸ்காரர்களை அனுப்பலாம். இந்தப் பிரச்சனை நிச்சயமாக சமூகத்தைப் பொறுத்தது. பொருளாதாரத்தைப் பொறுத்தது. அனைத்துக்கும் மேலாக அது இளைஞர்களின் மனத்தில் ஒழுக்கத்தை உருவாக்கும் ஓர் ஒழுக்க நெறிப் பிரச்சனையாகும்''—முன்பு பாரிஸ் நகரத்தில் நடைபெற்ற மறக்க முடியாத விவாதத்தில் அண்ணா சொல்லிய இந்த

வார்த்தைகளின் உண்மையை நாங்கள் உணருகிறோம். பழம்பெரும் நூலான தொல்காப்பியம் பொருள் இயல், மெய்ப் பாட்டு இயல் வரைந்து காட்டும் தெளிவுரையினால் தமிழர்கள் பெற்றிருக்கின்ற அறிவு மனத்தின் எதிரொலிதான் இந்த வார்த்தைகள்.

ஆகவே, பாரிஸிற்கு வந்திருந்த அந்தத் தமிழரின் 60 வது பிறந்த நாளுக்கு எனது கருத்துரையைக் கூறுகிறேன்.

அண்ணாத்துரை அவர்கள் வரலாற்றுப் புகழ் வாய்ந்த யுனெஸ்கோ கட்டிடத்தைச் சுற்றிப் பார்த்தபோது அதன் பிரம்மாண்டமான தோற்றத்தை... நயமான கண்ணாடி வேலைப்பாடுகளை கம்பீரமான கூடங்களை— நவீன கலை நுணுக்கப் பகுதிகளை — ஜப்பானிய தோட்டங்களை... அங்கே நம்ப முடியாதபடி கட்டப்பட்டுக்கொண்டிருக்கும் பாதாள அறைகளை எல்லாம் அண்ணா அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தபோது அமைச்சர் பெர்னாண்ட் லாரண்ட் அவர்கள், பிரான்ஸின் பிரதிநிதியாக அவருடன் இருந்தார்.

'போய் வருகிறேன்' என்று அண்ணாத்துரை அவர்கள் எங்களிடம் சொல்லியபடி விடைபெற்றுச் சென்ற பின்னர், திரு பெர்னாண்ட் லாரண்ட் என் பக்கம் திரும்பிச் சில வார்த்தைகள் கூறினார்.

''அடடா! எவ்வளவு அறிவு! எவ்வளவு அடக்கம்! எவ்வளவு மனிதத் தன்மை இவரிடம் காணப்படுகிறது. இதுதான் இந்தியா—இதுதான் தமிழகம்''—பெர்னாண்ட் லாரண்ட் அவர்கள் சொல்லிய வார்த்தைகள் இவைதான்!

தமிழகத்திலிருந்து வந்திருந்த அந்தத் தமிழரின் மனிதத் தன்மைக்கு யுனெஸ்கோவின் வணக்கத்தைத் தெரிவிக்கிறேன். அவர், மிக உயர்ந்த தமிழர் என்பதற்காக அல்ல. அவர் மிகவும் சக்தி வாய்ந்த தமிழர் என்பதற்காகவும் அல்ல—நட்பின் வழியாகவும் மனிதத் தன்மையின் வழியாகவும் எங்களை எல்லாம் பாரிஸ் நகரத்தில் தம்மோடு இணைத்துக் கொண்ட அவருக்கு, ஒவ்வொரு தமிழருக்காகவும், எல்லாத் தமிழருக்காகவும் யுனெஸ்கோவின் சார்பாக வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவருக்கு— தமிழ் நாட்டின் அந்த உன்னத மனிதருக்கு அவரது 60 வது பிறந்த நாளின்போது எனது நல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

---

## காங்கிரஸ் சோஷலிசம்

O ஒரு ஓவியன் வெள்ளைத் திரையைக் காட்டி இதில் பசுவும் புல்தரையும் வரைந்திருக்கிறேன். எப்படி இருக்கிறது பாருங்கள் என்றான். திரையில் பசுவும் இல்லை; புல்லும் இல்லை. ''புல் எங்கே?'' என்று கேட்டதற்கு பசு தின்றுவிட்டது என்றானாம். ''பசு எங்கே?'' என்று கேட்டதற்குப் புல்லைத் தின்றதால் விரட்டி விட்டேன் என்றானாம். காங்கிரசார் பேசும் சோஷலிசமும் இந்த ஓவியன் பேச்சைப் போல்தான் இருக்கிறது.

## வெறுப்புணர்ச்சியின் விளைவு

O தேக்கி வைக்கப்பட்ட வெள்ளம், கரையிலே சிறு விரிசல் ஏற்பட்ட உடனே, அந்த வழியாகப் புகுந்து. விரிசலை உடைப்பு ஆக்கி, கரையைப் பெயர்த்துக்கொண்டு வெளியே பாய்ந்து, சுற்றுப்புறம் முழுவதையும் வெள்ளக் காடாக்கி மாடுமனை அழித்து, மக்கள் கூட்டத்தைப் பாழ்படுத்தி, வயல்களை நாசமாக்கி, வாழ்வைக் குலைப்பது போன்றதுதான் வெறுப்புணர்ச்சி.

## வாரியார் கேள்வி மக்கள் பதில்

O திருமுருக கிருபானந்தவாரியார் பம்பாயில் ஒரு சமயம் சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கும்போது தம் முன்னே உள்ள மக்களை நோக்கி ஒரு புதிர் போட்டாராம்.

சில பெரியவர்களுடைய ஊர்களைச் சொன்னாலே அவர்கள் பெயர்கள் என்ன என்பது தெரிந்துவிடும். உதாரணமாக, 'அரியக்குடி' என்றால் யாரைக் குறிக்கும் தெரியுமா?...... என்று கேட்டு நிறுத்தினாராம் வாரியார்.

''இராமானுச ஐயங்கார்!'' என்றனராம் கூட்டத்தினர். இவ்வாறு இன்னும் பல ஊர்களைக் கூறி அவற்றுக்குரிய பெரு மனிதர்களின் பெயர்களைக் கேட்டு வந்தவர் இறுதியாக,

''காஞ்சி?'' என்று கேட்டாராம். உடனே குழுமியிருந்த மக்கள்.

''அண்ணாத்துரை! அண்ணாத்துரை!'' என்று ஆவலோடு ஆர்ப்பரித்தனராம். இதைக் கேட்டதும் அயர்ந்து போனாராம் வாரியார்.

அறிவு நூலகம்

# அண்ணாவின் நாடகங்கள்!



''பாமரர்களின் அறிவீனத்திற்குஎதிராக, பதவி பவிசுகளுக்கு எதிராக, கொதிக்கும் உள்ளத்தோடு ரோச உணர்ச்சியோடு வாழ வேண்டிய நிலை. ஆத்திரம் கொள்ளாமல் தினசரி பத்திரிகைகளை புரட்டிப்பார்க்க முடியாத சந்தர்ப்பங்கள். கருத்துத் தெளிவும் அதனை வெளியிடும் வேகமும் உள்ளத்திலே கும்மாளியிடும்போது, குறிப்பாக அதனை அறிவிக்கப் புயல போன்ற ஆவேசம் பெருக்கெடுக்கும்போது, அந்த பிரத்யட்சமான உண்மைகள் நிலை பெறுவதற்காக வாழ்வின் இன்பங்களை எல்லாம் தூசாக நினைத்து விட்டெறிய வேண்டிய நிலை ஏற்படுவது, ஆகா, இது அல்லவா வாழ்க்கை!

பத்தொன்பதாம் நூற்றாண்டைய பிரான்ஸிலேஇப்படி' மகிழ்ந்துபோனஒருவன்வாழ்ந்திருந்தான், புயல்போல் தோன்றிய அவன், தன் முன்னால் அடிபட்டு குற்றுயிராய் கிடந்திருந்த தர்மதேவதையை உலக மனசாட்சியின் முன்னால் கூட்டி வந்து நிறுத்தினான். அரிதாரம் பூசிக்கொண்டு போலித்தனமாக காட்சியளித்த சமுதாய இயல்புகளை, மனித ஆசாபாசங்களை, புரையோடிப் போயிருந்த புன்மை வாழ்வை நெடுங்கதைகளாக, நாடகங்களாக விமர்சனங்களாக அவன் எழுதிக் காட்டியபோது பாரீஸ் அவன் மேல் எரிந்து விழுந்தது. பாவ புண்ணியங்களின் பட்டியல் வைத்திருப்போர் அவனைப் பழித்துக் காட்டினர். பிரான்ஸ் முழுதும் அவன் பேர் அருவருப்போடு உச்சரிக்கப்பட்டது.

''எமிலி சோலா!''

நாட்டு மக்களின் கசந்த உணர்ச்சிகள் டிரைபஸ் என்பவன்மீது திரும்பியிருந்த நேரம். 'டிரைபஸ் குற்றவாளி. ஏனென்றால் அவன் ஒரு யூதன்' எனும் அளவுக்குச்

**இரா. இளஞ்சேரன்**

சிந்தனைப் போக்கு சென்றிருந்தது. பொதுமக்களின் தீர்மானமாகிப்போன நம்பிக்கைகளுக்கு எதிராக, வலிமையான பிரச்சார சூறைக்காற்றுக்கு எதிராக, பாரீஸின் பிரபு குலத் தோன்றல்களுக்கு எதிராக சோலா குரல் எழுப்பினான்.

"டிரைபஸ் குற்றமற்றவன். அவன் நிரபராதி!"

சத்தியத்தின் ஒளி நிரம்பிய சந்நிதானத்திலே அமர்ந்துகொண்டு வரலாற்றுப் புகழ் படைத்த தன் அறிக்கையை அவன் எழுதினான். அறம் அங்கே நிழலாயிற்று. அவன் கால்பட்ட இடத்திலே தர்மம் தழைத்தது. சோலாவின் கருத்தினை ஊர் ஒப்புக்கொள்ளவில்லை. உலகம் ஒப்புக் கொள்ளவில்லை. அவன் அலட்சியப் புன்னகையோடு சொன்னான்:

"உலகம்! என்னைப் பொறுத்தவரை இந்த உலகம் என் வீட்டு வாயிற்படியிலே முடிகிறது!"

தமிழகத்திலே தன்மான இயக்கம் எனும் பெரும்புயல் சுழன்றடித்தபோது 'பாமரர்களின் அறியாமைக்கு எதிராக, பதவி பவிசுகளுக்கு எதிராக கொதிக்கும் உள்ளத்தோடு ரோச உணர்ச்சியோடு இயக்கத்தினர் செயலாற்றியது இந்த நாட்டின் மிகச்சிறந்த காலக்கட்டத்தைக் குறிப்பதாக இருந்தது.

சாதிமுறைகள், அதனை வகுத்த சாஸ்திரங்கள். சாஸ்திரங்களுக்குக் கலை மெருகளிக்கும் பக்திபுராணங்கள், புராணங்களின் புண்ணியாத்மாக்கள், அவர்களுக்கு அருள் பாலித்த சிறு தெய்வக் கும்பல். அந்தத் தெய்வங்களின் தொண்டரடியார்கள்; துதிப்பாடகர்கள் இவர்கள் எல்லோரும்—இவர்களுடைய எல்லா பாரம்பரிய பவிசுகளும் சுயமரியாதைக்காரனின் கேள்விக் குறியின் முன்னால் கதியற்று நிற்க வேண்டி வந்தது.

பெரியாரின் பேராற்றல்தான் எத்தனை அற்புதங்களைச் சாதித்துவிட்டது? எத்தனை கிம்சாவளி நம்பிக்கைகள் கதிர் கனத்த பயிர்போல தலை சாய்ந்தன? எத்தனைப் வண்ணியாத்மாககள் அல்லாடிப் போனார்கள்? எத்தனை தெய்வங்கள் புகலிடம் தேடி புடைத்த சந்து பொந்துகளில் ஓடி ஒளிந்தன? கொச்சை மொழியில் எளிய நடையில் அறிவின் முதிர்ந்த கருத்துக்களை எத்தனை அற்புதமாக பெரியார்வெளியிட்டார்? எந்தச் சமூக சீர்திருத்தக்காரனின் சிந்தனைப்போக்கும் இத்தனை ஆழமாகச் சென்றதில்லை. எந்தச் சிந்தனையாளனும் இதுபோன்ற வலிமைப் பெரு இருளை எதிர்த்து நின்றதில்லை. எந்த சீர்திருத்தவாதியும் இத்தகு வியக்கத்தக்க வெற்றியைப் பெற்றதுமில்லை.



### அண்ணாவின் மன உறுதி

அண்ணா அவர்கள் எண்ணித் துணிக கருமம் என்ற குறளைக் கடைப் பிடித்து—எப்போதும் நிதானமாக நடந்து வருகிறார்.

லார்ட் ரெங்கின் என்பவர் சென் கவர்னராகப் பதவியேற்றிருந்தார் அவர் ஆளும் திறனை அற்றவர் என்பதை அண்ணா அறிந்து கொண்டார். அந்தக் கவர்னரின் திறமைக் குறைவை விடுதலை ஏட்டில் விளக்கமாக—தலையங்கம் எழுதி விட்டார் அண்ணா. அது அனைவரையும் திடுக்கிட வைத்தது.

அப்போது நீதிக்கட்சியின் அங்கம் வகித்த பன்னீர்ச் செல்வம் அவர்களின் கண்ணிலும் அந்தத் தலையங்கம் பட்டு விட்டது. அண்ணா அவ்வாறு எழுதி விட்டாரே என்று வருத்தமும் கோபமும் பன்னீர் செல்வத்துக்கு ஏற்பட்டது. உடனே ஈரோடு சென்று அண்ணாவைச் சந்தித்து அந்தத் தலையங்கத்தை மாற்றி எழுத வேண்டும் என்று கேட்டார். அண்ணா அவர்கள் "எழுதியது எழுதியதுதான். என் கையால் வருத்தம் தெரிவித்து எழுத முடியாது" என்று உறுதியுடன் கூறி மறுத்துவிட்டார். அப்போது பன்னீர் செல்வத்திற்கு வருத்மாக இருந்தாலும் சில மாதங்கள் கழித்து அவரே அண்ணாவைப் பாராட்டினார். அண்ணா கவர்னரைப்பற்றி எழுதியது சரியானது தான் என்று ஒப்புக்கொண்டார்.

அறிவு நூலகம்

நெருப்புப் போன்ற பெரியாரின் இலட்சியங்களுக்கு அண்ணாவின் இலக்கியப் பேராற்றல் கலை மெருகிட்டது. பேச்சு, மேடை, நாடக அரங்கம், கதை, இலக்கியம், விவாத அரங்கு இப்படி பல முறைகளில் அண்ணாவின் பிரச்சாரம் ஒருமுனைப்படுத்தப் பட்டதால் பழமைக் கருத்துக்கள் தாக்குப் பிடிக்க முடியாமல் தத்தளித்தன.

அண்ணாவின் தனித்தன்மை பெற்ற இலக்கிய முயற்சிகளில் அவர் எழுதிய நாடகங்கள் நேரடியான பயன் விளைத்து அந்தத் துறையில் புதியதோர் விழிப்புணர்ச்சி அரும்பிடவும் வகை செய்தன.

சென்ற தலைமுறையில் மிகச்சிறந்த நாடகங்களை எழுதிய சங்கரதாஸ் சுவாமிகளும் சம்பந்தனாரும் விளைத்த ஆர்வமும் வேகமும் எதிர்காலத்தில் மறுமலர்ச்சி நாடகங்கள் உருப்பெறக் காரணமாயிருந்தன. தேவையற்ற நாடக மரபுகளும் சமுதாயத்தின் பொதுவான ரசனைத் தன்மையும் நல்ல நாடகங்கள் பிறப்பதை ஓரளவு தாமதப்படுத்தினாலும் பின்னாட்களில் சில சிறந்த நாடக முயற்சிகள் அற்புதமான சக்தியோடு வெளிப்பட்டன என்றுதான் சொல்ல வேண்டும். அண்ணாவின் நாடகங்கள் இத்தகைய புதிய எழுச்சிக்கும் விழிப்புணர்ச்சிக்கும் 'தோற்றுவாயாக' அமைந்தன.

இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் தென்னிந்தியாவில் அலையிட்டு எழுந்த அரசியல் சமுதாய மறுமலர்ச்சி தத்துவ நோக்குகளும் அவற்றால் விளைந்த பயன்களும் அண்ணாவின் ஆற்றல் மிகுந்த எழுத்துக்களுக்கு பின்னணியாயின. தனக்கு முன் எழுந்த தத்துவ நோக்குகளின் ஈடு இணையற்ற பிரச்சாரகராகவும் அதே போது அவற்றின் புதிய போதகாசிரியராகவும் அவர் உருப்பெற்றதால்தான் இந்த நாட்டின் மனச்சாட்சியை அண்ணாவினால் துல்லியமாகத் தெரிந்து கொள்ள முடிந்தது. 1935—1955 இந்தக் காலக்குறியீடுகளின் இடைப்பட்ட இருபது ஆண்டுகள் தமிழகத்தைப் பொறுத்தவரை கலாச்சார புத்துணர்ச்சியையும் கலை இலக்கியத்துறைகளில் புதிய ஒளியையும் இங்கே அலையிட வைத்த காலகட்டமாகும். முன் தலைமுறையைச் சேர்ந்த தலைவர்கள் தங்களிடம் அர்ப்பித்துப்போன அதே ஆவேசத்தோடும் இதயத்தெளிவோடும் சமூக நீதிக்காகப் போராடிக் கொண்டிருந்தவர்கள் அரசியல் துறையில் தங்களது தனித்தன்மையை பதித்துத் தீர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது இந்த காலகட்டத்தின் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாயிருந்தது.



அண்ணாவின் புத்தகப் படிப்பு!

அண்ணா சிறையிருந்த நாட்களிலும் அவருக்கு உறுதுணையாக இருந்து வந்தது புத்தகங்கள்தாம். சிறைச்சாலையில் உள்ள நூலகங்களைக் கூட விடுவதில்லை அண்ணா ஒரு முறை வழக்கு ஒன்றில் தாமே வாதாடுவதற்கு முயன்றபோது சிறைச்சாலையின் நூலகத்திலுள்ள கிரிமினல் சட்டப் புத்தகங்களை நன்கு படித்து, நீதிபதியே வியக்கும் வண்ணம் மேற்கோள் காட்டினார்.

அண்ணா அவர்கள் மாநிலங்கள் அவையில் உறுப்பினராக இருந்த சமயம்—வட இந்தியப் பத்திரிகை நிருபர் ஒருவர் அண்ணாவைத் தாம் கண்ட காட்சியைப் பற்றி குறிப்பிட்டிருக்கும் செய்தி கூர்ந்து கவனிக்கத் தக்கது.

''அண்ணா அவர்களைச் சாதாரணமாக எங்கேயும் பார்த்துவிட முடியாது! வராண்டக்களில் நின்று கொண்டோ, வேறு எங்கோ அமர்ந்து பொழுதை வீணாகப் போக்கிக் கொண்டோ இருக்க மாட்டார். நூலகங்களில்தான் அவரைப் பார்க்கலாம்—அல்லாவிடில் நண்பர்களின் மத்தியில் பார்க்கலாம்''—நிருபரின் இந்த வார்த்தைகள் அண்ணாவின் புத்தகப் படிப்பின் ஆர்வத்தை நமக்குத் தெரிவிக்கின்றன.

மக்களின் மனப்பான்மையில் புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்த புதுமைவாதிகள் கலை இலக்கியத் துறைகளை உயிர்த்துடிப்போடு கையாண்டார்கள். அண்ணாவையும் அவரைப் பின்பற்றி எழுதிய சீடப்பரம்பரையையும் துவக்ககாலத்தில் செல்வாக்கு மிகுந்த பத்திரிகைகளும் இயக்கங்களும் கட்டுப்பாடாக புறக்கணித்து வந்தன. எனினும் அவர்கள் சோர்ந்துவிடவில்லை. புதிய வடிவங்களில், புதிய உத்திகளில் தங்கள் எண்ணங்களுக்கு கலைமெருகிட்டார்கள். அவர்களுடைய இலட்சியங்கள் போலவே அவர்களுடைய சிருஷ்டிகளும் தெளிவாக இருந்தன. எனவே வெற்றி அவர்களுக்கு எளிதாயிற்று.

திராவிடர் இயக்கத்தின் கலை இலக்கியப் பணிகளில் அண்ணாவின் நாடகங்களுக்கு மிகுந்த சிறப்பிடமுண்டு. உயர்ந்த நிலையிலிருந்து எழுதப்பட்ட அவரது நாடகங்கள் ஒவ்வொன்றும் தனித்தனி தன்மைகள் வாய்ந்தவைகளாகவும் சமுதாய எதிர்ப்பு உணர்ச்சியின் வீறுமிக்க வெளியீடுகளாகவுமிருந்தன. எல்லாவற்றையும் விட சமுதாய நடப்புகளையும் சம்பிரதாயங்களையும் அண்ணா அணுகிய முறையும் காட்சிகளாக்கிய விதமும் அதிர்ச்சியளித்து, நின்று, நிதானிக்கச் செய்தன. அவர் காலத்தில் வாழும் வாய்ப்பு பெற்றவர்கள் அண்ணாவின் அற்புதமான மேதைத் தன்மையை இனம் கண்டு கொண்டார்கள்.

புகழ்பெற்ற இதழாசிரியரும் இணையற்ற நாவலாசிரியருமான கல்கி.கிருஷ்ணமூர்த்தி அண்ணாவின் நாடகம்பற்றி குறிப்பிடுவது இது.

‘‘ஆங்கிலம் படித்த மேதாவிகள் நாடகங்களைப் பற்றிப் பேசும் போதெல்லாம், பெர்னாட்ஷாவையும், இப்சனையும் நினைத்து ஒரு குரல் அழுவது வழக்கம். தமிழ்நாட்டில் பெர்னாட்ஷாவும், இப்சனும் இல்லையே என்பார்கள். அந்தக் குறையை திரு. அண்ணாதுரை தீர்த்து வைத்துவிட்டார் என்றே கூறலாம்.

‘‘ஓர் இரவு என்னும் இந்த நாடகத்தைப் பார்த்தேன். பார்த்ததின் பயனாக இதோ ஒரு பெர்னாட்ஷா இருக்கிறார்! இப்சனும் இருக்கிறார்! இன்னும் கால்ஸ்வொர்த்தியும் இருக்கிறார் என்று துணிந்து கூற முடியும்.

‘‘தலைமையுரையின் போது அண்ணாதுரையின் நாடகத்தைப்பற்றி என்ன பேசுவது என்றே எனக்குத் தெரிய



# ஏழைகளின்

‘‘பணக்காரனாக இருப்பதைவிட ஏழையாக இருப்பதே பாக்கியம் என்பதை நான் உணருகிறேன். செல்வத்தைவிட வறுமையின் பயன்கள் உண்மையானவை’’ என்று காந்தியார் கூறினார். தாம் ஏழையின் பிரதிநிதி என்பதை நிரூபித்து வந்தார். அண்ணா அவர்களும் காந்தியாரின் தத்துவத்துக்கு வடிவமாகவே திகழ்கிறார்.

‘‘ஏழையின் கண்ணீர் கூரிய வாளை ஒக்கும் என்று கூறியிருக்கும் அண்ணா ஏழைகளின் பிரதிநிதி என்பது சொல்லாமலே விளங்கும் அவர் நினைத்திருந்தால் பணக்காரர்களின் மத்தியிலே செல்லப்பிள்ளையாக விளங்கியிருக்கலாம். அவர் எண்ணியிருந்தால் மாளிகை வாசிகளின் அரவணைப்பில தவழ்ந்திருக்கலாம். ஆனால், அதையெல்லாம் செய்யவில்லை அவர். ஏழை மக்களின் வாழ்வு மேன்மையடையப் பாடுபட்டார். அண்ணாவின் அரசியல் போராட்டங்களில் பல, ஏழைகளை முன்னேற்றும் கருத்துக்கொண்டதேயாகும். காங்கிரஸ் ஆட்சி மாறவேண்டும் என்று அவர் விருமபியதற்குக் காரணம் தமது கட்சி அரசாளவேண்டும் என்ற எண்ணத்தினால் அல்ல, காங்கிரஸ் ஆட்சியினால் ஏழை மக்கள் அடைந்திருக்கும் இன்னல்கள் நீக்கப்படவேண்டும் என்ற நல்ல நினைப்பினால்.

அண்ணாவின் படி அரிசித் திட்டம் இன்று வசதியுள்ளவர்களுக்கும் பயன்படுகிறது; என்றாலும் ஏழைகளின் நல்வாழ்வுக்காகவே எழுந்த திட்டம் அது.



# பிரதிநிதி

''நாலாயிரம் மருத்துவ மனைகள் கட்டினேன். முந்நூறு பாலங்களைக் கட்டினேன். நூறு ரேஷன் கடைகளைத் திறந்து வைத்தேன் என்று கூறிக்கொள்வதில் நான் அதிகம் பெருமையடையவில்லை. என்றைய தினம் சமூகத்தின் அடித்தளத்தில் உள்ளவன் சம நிலைக்குக் கொண்டுவரப் படுகிறானோ, அன்றுதான் சமூகநீதி ஏற்படும். அந்தச் சமூகநீதி இந்த அரசாங்கத்தில் நிலைநாட்டப்படுவதைத் தான் நான் விரும்புகிறேன். ஒருவரையொருவர் கெடுக்காமல் வாழ முடியும் என்ற நிலையும் ஒருவரையொருவர் பகைக்காமல் வளர முடியும் என்பதும் நிலை நாட்டப்படுவதைத்தான் விரும்புகின்றேன்.

''ஏழை மக்களிடம்தான் பெரும்பான்மையான வியாபாரங்கள் நடக்கிறது. அப்படி வியாபாரம் நடக்க வேண்டுமானால் அவர்கள் கைக்கு எட்டுகின்ற விதத்தில் விலை இருக்கவேண்டும். அவர்களது கைக்கு எட்டுகின்ற விலை என்பது என்ன? அவர்களுடைய வருமானத்திற்கேற்ற முறையில் விலைகள் இருக்கவேண்டும்''—ஏழை மக்களுக்காக அண்ணாவின் இதயம் எவ்வளவு தூரம் வாதாடுகிறது என்பதைத்தான் இந்த வரிகள் தெரிவிக்கின்றன.

''ஏழைகள் தவறு செய்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் அவர்களது ஏழ்மை. ஆகவே தண்டிக்கப்பட வேண்டியவர்கள் ஏழைகளல்ல-பொருளாதார பேத முறை''—ஏழை மக்களின் பிரதிநிதியாக நின்று அவர்களுக்காக வாதாடும் அண்ணாவின் வாசகங்கள் இவை.

*இல்லை. நன்றாய் இருக்கிறது! மிக நன்றாய் இருக்கிறது அதி நன்றாய் இருக்கிறது! என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது!''* [1]

கடுமையான அரசியல் கருத்து வேறுபாடுகளையும் மறந்து தலைசிறந்த கலை விமர்சகராயிருந்த கல்கி, அண்ணாவுக்கு சூட்டிய புகழாரம் மறுமலர்ச்சி இயக்கத்துக்கு கிடைத்த நற்சான்றிதழாகவே கொள்ள வேண்டும்.

நல்லவர் இவர். தீயவர் இவர் எனப்பாகுபாடு செய்து குறிப்பிடத்தக்க பண்புகளை அவர்கள் மேல் ஏற்றி வைத்து நல்லவர்களுக்கு வாழ்வும் தீயவர்க்கு கொடுமை நிறைந்த முடிவும் கொடுத்து; தர்மம் வெல்லும் பாங்கினை வலிந்து காட்டிடும் பழைய போக்கு கொண்ட தமிழ் நாடகமேடைக்கு அண்ணாவின் நாடக மாந்தர் புதிய அறிமுகங்களாயிருந்தார்கள். அத்தகு கதை உறுப்பினர்களும் அவர்களுடைய இயல்புகளும் மக்களைப் பெரிதும் கவாந்தன. எத்தகைய கதாபாத்திரங்களை அரங்கிலே மக்கள் சந்திக்க விரும்புகிறார்கள் என்பதனை அண்ணா தமது உரையொன்றில் தெளிவு படுத்தியிருக்கிறார்.

''நாடக மேடையிலே மனிதனைக் காண விரும்புகிறாகள். மகேசனை, மகரிஷி, மன்னன், மந்திரவாதி அவதாரங்கள், அடியார்கள் இவர்களைக் கண்டு கண்களுக்கும் கருத்துக்கும் சலிப்பு மிகுந்துவிட்டது. அந்தக் கதைகளிலே உள்ள கருத்துக்கள் சிலபுளித்து விட்டன; சில பொய்த்துப்போய்விட்டன. வேறு சில, உலக மன்றத்திலே கேலிக்குரியனவாக்கப்பட்டு விட்டன; பெரும்பாலானவை நடை முறைக்கு ஏற்றனவாக இல்லை. வாழ்க்கைப் பிரச்னைக்கு விளக்கம் தருவதாகவோ, வாழ்க்கைச் சிக்கல்களைப் போக்கக் கூடியதாகவோ இல்லை. இப்போது தன்னைப்போன்ற மனிதன் எந்தெந்தச் சூழ் நிலையில் எப்படி எப்படி ஆகிறான்; என்னென்ன செய்கிறான், எதை எதை எண்ணுகிறான் என்று காண விரும்புகிறார்கள்.

எலும்பைப் பெண்ணுருவாகக்கண்ட கண்கள் இப்போது பெண் எலும்புருவாகும் அளவுக்குக் குடும்பத்திலே ஏற்படும் கொடுமைகளைக் காண விரும்புகின்றனர்! கண் இழந்தவனைக் காண விரும்புகிறார்கள்; நண்பனுககாக, குடும்பத்துக்காக, நாட்டுக்காக வறுமையால், கொடியவர் செயலால், இப்படி ஏதேனும் ஒன்றினால் கண்ணிழந்தவன் இருக்கிறானே அவனுடைய கதையைக் காண விரும்புகிறார்கள். உழைத்து உருக்குலைபவன் உழைக்காமல், வாழும்

1. அறிஞர் அண்ணாதுரை—தொகுப்பு நூல்

வழி கற்றவன் மேட்டுக்குடி வாழ்வு, காட்டு ராஜா முறை. வேட்டையாடப்படும் மனிதன், விருப்பம் வெம்பியதால் நொந்து போனவன், வாழ்க்கை வெற்றிக்காக எதையும் செய்பவன், இப்படிப் பலரைக் காண விரும்புகிருர்கள் தந்தை மகன் உறவு, அண்ணன் தம்பி உறவு, இந்த உறவுக்கு வரும் ஊறுகள், அதற்கான காரணங்கள் இவைகளைக் காண விரும்புகிருர்கள். ஒருவன் ஏன் நல்லவனுக இருந்தவன் கெட்டவனுகி விடுகிருன் என்ற சூழ்நிலை விளக்கத்தைக் காண விரும்புகிருர்கள்.'' 2

அண்ணுவின் துவக்க கால எழுத்துக்கள் சீமான்களையும் ஜமீந்தார்களையும் கேலியும் கிண்டலும் நிழலிட சித்தரித்தன. பொருளாசையும் வரட்டு கௌரவமும் நிறைந்த பெரிய மனிதர்களின் போலித்தனமான வாழ்க்கையை திரை நீக்கி காட்டின.

'வேலைக்காரி'யில் வரும் 'வேதாசல முதலியார் இந்த வகையில் அமைந்த ஒரு அற்புதமான கதாபாத்திரம். இதற்குப் பின்னர் மேடையேறிய பெரும்பான்மையான நாடகங்களில் இதே பண்புள்ள கதாபாத்திரம் தோன்றுவது மரபாகும் அளவுக்கு வேதாசல முதலியாரின் குணச் சித்திர விளக்கம் உயிர்ப்பு மிக்கதாயிருந்தது. இதில் வரும் அமிர்தம், 'ஏழைபங்காளன்' மணி. மூர்த்தி, சுந்தரகோஷ், குருதேவர், ஆனந்தன் போன்ற கதை உறுப்பினர்கள் அனைவரும் சமுதாயத்தின் தெளிவான குணச் சித்திர எதிரொலிகளே.

நாடகத்தில் இரண்டொரு காட்சிகளில் வந்து போகும் நடிகர்கள்கூட சிரஞ்சீவித் தன்மை பெற்றிடும் தன்மையில் அமைந்த இயல்பான, ஆழமான உரையாடல்கள் அண்ணுவுக்கே உரியவை.

சமுதாயத்தின் இருளடர்ந்த அடித்தட்டில் அஞ்சி வாழ்கின்ற குற்றவாளிகூட சந்தர்ப்பம் கிடைத்தால் உயர்ந்த மனிதனுகி விடுகிருன் என்பதற்கு 'ஓர் இரவிலே' வரும் திருடன் ரத்தினம் சிறந்த எடுத்துக் காட்டு. இதன் உரையாடல்களும் காட்சியமைப்பும் இதயம் கவரும் முறையிலே அமைந்திருந்தன. ஜமீன்தாரின் மகளான சுசீலா திருடன் ரத்தினத்தை சந்திக்கும் நள்ளிரவுக் காட்சியும், ஜமீன்தார் தம்முடைய பழைய காதலியான சொர்ணத்தை சந்திக்கும் காட்சியும் மிக உயர்ந்த தன்மையிலே எழுதப்பட்டுள்ளன.

சொர்ணம் தன்னைக் காதலித்து கைவிட்ட கருணுகரத் தேவரைப் பார்த்து கேட்கிருள்:

> ''மாளிகைவாசம் இருந்தால் என்ன, மனம் அங்கே மட்டும் இரும்பா?... ஏழை என்றும் பணக்காரரென்றும் இரண்டு ஜாதி இல்லாமல் ஒரே ஜாதியாக இருந்தால் எனக்கும் இந்த



HIRALAL & Co.
41, Narayana Mudali Street, MADRAS—1.

திருமணம், மற்றும்
விழாக்கள் நடத்த
வசதிகள் நிறைந்தது

பாலாஜி
கல்யாண மண்டபம்

- திருமண மண்டபம்
- சாப்பாட்டுக் கூடம்
- தண்ணீர், மற்றும் சுகாதார வசதி

அனைத்தும் உண்டு

விவரங்களுக்கு :

1. சுந்தரமய்யர் தெரு
தியாகராய நகர்,
சென்னை-17.

எண்ணம் உண்டாகாதல்லவா? ...கண்ணுடி என்னை ஓர் அழகி என்று காட்டுகிறது. உலகமோ அபாய அறிவிப்பு என்று சொல்லுகிறது''

அண்ணுவின் ஆரம்பகால மொழி நடையில் பிராசங்களும் அடுக்கு மொழிகளும் அதிகமாக இடம் பெற்றிருந்தாலும் பின்னர் பக்குவமாகி பொருட் செறிவும் தெளிவும் மிகுந்த நடையாக பரிணமித்தது. ரத்தினம் டாக்டர் சேகரிடம் தான் வாழும் சூழல் பற்றித் தெரிவிப்பது இது :

''எங்க உலகமிருக்கே, அதுக்கு இரவு மணி பத்தாணுத்தான் பொழுது விடியுதுன்னு அர்த்தம். தெருக்கோடிச் சண்டை, வீட்டுமேலே கல் வீசுவது, கலகம், கத்திக் குத்து, எல்லாம் அப்போதுதான் ஆரம்பமாகும். நீங்களெல்லாம் காலையிலே காப்பி சாபபிட்டதும் சுறுசுறுப்பா வேலை செய்வீங்க. எங்க உலகத்திலே சுறுசுறுப்பு ராத்திரி பத்து அடிச்சதும் கள்லோ சாராயமோ போட்டுகிட்டாத் தீர்ந்தது, கோட்டை எல்லாம் தூளாகும்.

''இரண்டு உலகம் இருக்கு டாக்டர், இரண்டு இருக்கு. ஒண்ணை ஒண்ணு கேலி செய்துகிட்டு, விரோதிச்சிகிட்டு. காமம், குடி, களவு, கொலை, கலகம் யாவும் இரண்டு உலகிலேயும் உண்டு. உங்க உலகத்து சமாசாரம் வெளியே சுலபத்திலே வராது. எங்க விஷயம் ஊர் பூராவும் பரவிவிடும்.

''நாங்க மொந்தையிலே இருக்கிற கள்ளுமாதிரி, பொங்கி வழியறது. உங்க உலகத்துக் கெட்ட நடவடிக்கை கார்க் போட்ட சீசாவிலே ஊத்தி அனுப்புற ஓசத்தி சரக்கு மாதிரி''

சரித்திர நாடகமான 'சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்' காசிவாழ் அந்தணனுன காகப்பட்டருக்கு மாராட்டிய மாவீரன் எப்படி அடிபணிய நேர்ந்தது என்பதையும், அர்த்தமற்ற சம்பிரதாயங்களுக்காக அவன் திரண்ட செல்வம் எப்படிப் பறிபோயிற்று என்பதையும் விளக்கிடும் அற்புதமான நாடக வடிவம்.

பிரசாரத்திற்கு ஏற்ற திடமான ஒரு கருப்பொருளை அண்ணு தேர்ந்தெடுத்துக் கொண்டதால் மற்ற நாடகங்களைவிட இது வேகம் பொருந்தியதாக அமைந்தது. இதில் வரும் சந்திரமோகன் தவிர பிற நாடக உறுப்பினர்கள் அனைவரும் சரித்திரச் சார்புடையவர்கள்.

சிவாஜியின் வீழ்ச்சியை வேண்டும் என்றே பெரிதுபடுத்தி சித்தரித்திருப்பதாக சில விமர்சகர்கள் கடுமையான குற்றச்சாட்டை சுமத்தியதும், அவர்களுடைய ஐயத்தை தெளிவுபடுத்த மா. இளஞ்செழியன் 'சரிந்த சாம்ராஜ்யம்' என்ற தலைப்பில் ஒரு வரலாற்று விளக்க நூலை எழுதியதும் இதன் தொடர்பான நிகழ்ச்சிகள்.

பிரசார நாடகம் இப்படி, இப்படி இருக்க வேண்டும் என்று அதன் இயல்புகளை விவரிப்பதைவிட அது 'நீதிதேவன் மயக்கம்' போல இருக்கவேண்டும் என்று ஒரே வரியில் சொல்லிவிடலாம். அந்த அளவுக்கு புகழ் பெற்ற இந்த நாடகம் அண்ணுவின் நூற் பயிற்சிக்கும் விவாத அறிவுத் திறனுக்கும் தலை சிறந்த எடுத்துக்காட்டாக நிற்கிறது. அற்புதமான இந்த நாடகம் தன்மான இயக்கத்தாரின் இராமாயண எதிர்ப்புக்கு வலிமையான கருவியாயிற்று. பேராசிரியர் சேதுப்பிள்ளையோடும் பசுமலை பாரதியாரோடும் அண்ணு நடத்திய சொற்போரின் தொடர்பாகவே அங்கு எழுந்த கருத்தலைகளின் கலை உருவாகவே நீதிதேவன் மயக்கம் எழுதப்பட்டது. ராவணன், கௌதமன், அகலிகை, இந்திரன், இராமன் போன்ருேரின் நெறி முறைகள் நீதிதேவன் சந்நிதானத்திலே விசாரணை செய்யப்படுகின்றன இரக்கமெனும் பொருளில்லா அரக்கன் என்று கம்ப நாடன் இராவணனைக் குறிப்பிட்டது முறையா என்பன போன்ற விவாதங்கள் புராணீகர்களுக்கு எதிரான புதிய உண்மைகள் பலவற்றை தெளிவு படுத்துகின்றன.

இந்த நாடகம் விளைத்த கருத்துப் புரட்சியை தாங்கமாட்டாத பழமை வாதிகள் தாங்கள் அமர்ந்திருந்த 'தந்த' கோபுரங்களிலிருந்து கீழிறங்கி வந்தார்கள். 'கடவுட் காதை என்ற நிலையில் அல்ல, கலைக்காக, கற்பனை நயத்திற்காக கம்பனைப் படியுங்கள்!' என்று தங்கள் நிலையை தெளிவு படுத்தினர்கள். புதிய இராமாயண தொகுப்பாசிரியர்கள்கூட இதனையே வலியுறுத்தினர்கள். காலமெல்லாம் கம்பராமாயண ஆராய்ச்சியில் கழித்த பேராசிரியர் வையாபுரிப்பிள்ளைகூட 'மதநோக்கம் மேற்பட்டால் கலையுணர்ச்சியும் கவிதை யுணர்ச்சியும் முற்றும் மறைந்துவிடும்'' என்று குறிப்பிட்டதோடு இந்தப் பிரச்னையில் சுயமரியாதைக் காரனின் வெற்றி பரிபூரணமாயிற்று.

இடை நாட்களில் ஒரே மாதிரியான சமூகக் கதைகள் தந்த சலிப்புணர்ச்சிக்கு மாற்ருக அரங்கமேறிய புராணம் தழுவிய நாடகங்களில்கூட 'நீதிதேவன் மயக்கத்தின்' நிழல் படிந்திருந்தது.

உயர் வகுப்பினரின் ஜாதி வெறி—சொல் வேறு செயல் வேருக வாழ்கின்ற அவர்களுடைய போலித்தன்மை. பெண்களை

அடிமைப்படுத்தும் பழைய சம்பிரதாயங்களின் பலவீனம், காதலியல்பு, எளிய மக்களின் மனப் பண்புகள் இவற்றைப் பல நிலைகளில் நின்று விளக்கிடும் நாடகம் 'காதல் ஜோதி' இதில் வரும் ரௌடி பொன்னன் மறக்க முடியாத படைப்பு.

1958-ல் கே. ஆர். ராமசாமியின் குழுவினர் இந்த நாடகத்தை மேடையேற்றிய பின்னர் குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு அண்ணா எந்த நாடகங்களையும் எழுதவில்லை நாட்டு நடப்புகளும், அவற்றின் விளைவான அரசியல் சூழலும் அண்ணாவையும், அவரைப் பின்பற்றுவோரையும் முழுக்க முழுக்க சுவீகரித்துக் கொண்டதால் கலை இலக்கியத் துறை ஈடுபாடுகள் இயல்பாகவே குறைந்தன.

சில ஓரங்க நாடகங்களும் 'பாவையின் பயணமும்' மேடையேறாத அண்ணாவின் நாடகங்களில் குறிப்பிடத்தக்கன. பெண் இனத்தின் துயரங்களை பல கோணங்களிலிருந்து சித்தரிப்பது 'பாவையின் பயணம்'

அண்ணாவின் நாடகங்களில் பொதுவாக கடைசி கட்டங்கள் அளவுக்குமீறிய செயற்கைத் தன்மையோடு சித்தரிக்கப்படுகின்றன வென்றும், நாடக வேகத்திற்காக உருவாக்கப்படும் உச்சகட்ட சம்பவங்கள் நம்பக் கூடியனவாக இல்லை என்றும் விமர்சன கண்ணோட்டத்தில் சில குறைபாடுகள் சுட்டிக் காட்டப்படுகின்றன.

ஒரு சமுதாயத்தின் மிகப் பெரிய எழுத்தாளர்களும், சிந்தனையாளர்கள் என்று சொல்லக் கூடியவர்களும் பொழுதுபோக்கு கதைகள் எழுதியும், தளிரிட்டுவந்த புதுமையை எதிர்த்தும் பாமரனின் சிந்தனையை பதனப்படுத்தி வைத்திருந்த நாட்களிலே திருடர்களையும், விலைமாதர்களையும் அடிமைத்தனத்தில் அபிமானம் கொண்டிடும் எளியவனையும், நெறிகெட்ட ஜமீந்தார்களையும் கதாபாத்திரங்களாக்கி அண்ணா நாடகங்களை எழுதினார். பழைய நாடக மரபுகளுக்கு வலிமைமிக்க அறை கூவலாகவும், புதியன படைப்போருக்கு வழி காட்டியாகவும் அண்ணாவின் நாடகங்கள் அமைந்தன. பண்டை நாள் பெருமையிலே மூழ்கியிருந்த ஒரு ஜன சமுகத்தையும் அவர்களுடைய மனநிலையையும் துயில் கலைத்து மறுமலர்ச்சி காலகட்டத்திற்கு காட்டிவந்ததில் அண்ணாவின் நாடகங்களுக்கு பெரும் பங்குண்டு.

அவருடைய நாடகங்களையும் அவற்றால் விளைந்த பயன்களையும் தனித்து எடுத்து வைத்துவிட்டு இன்றைய நாடகத் துறை இயல்புகளை கவனித்தால் பழைய வடிவிலிருந்து அவை அதிகமொன்றும் மாறிவிடவில்லை என்பது தெளிவாகத் தெரியும்.

## 'கலை'யைப் பற்றி அண்ணா

கலையை அழிக்கின்றனர்—கம்பன் புகழை மறைக்கின்றனர் என்று கூறப்படும் பழிச் சொல்லை அறிவோடு கலையிலே தேர்ந்து அதிலே ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு கம்பனின் இராமாயணமும், சேக்கிழாரின் பெரிய புராணமும் கலை என்று கருதும் அன்பர்கள்—ஒரு பெரியாரின் பெயரால், ஒரு அண்ணாத்துரையின் அனலால் அக் கலை அழிந்து படும் என்று கருதுவரேல் அவ்வளவு சாமான்யமானது நிச்சயம் கலையாகாது!

அத்தகைய கலை இருத்தலுமாகாது!

* * *

கலை, ஓர் இளமக்களின் பண்பு. இவ்வின மக்களிடையே தோன்றும் தெளிவு, வீரம், ஆகியவற்றின் எடுத்துக்காட்டு.

எனவே, கலை இனவளர்ச்சிக்கு ஏற்றபடி, மாறியும் விரிந்தும் விடுமென்பதே நுண்ணறிவின் துணிபு.

கலை உலகில் அவ்வப்போது மாறுதல் உண்டாகும்.

தட்ப வெப்பம் ஆகியவற்றுக்கு ஏற்ற முறையிலும் கலை உண்டாகும்— வளரும்— மாறும்!

* * *

அரபு நாட்டுக் கலையிலே தென்றலைப்பற்றிய கவிதைகள் அதிகமிருக்க முடியாது.

எஸ்கிமோ நாட்டுக் கலையிலே கதிரோனின் ஒளிபற்றிய கவிதைகள் அதிகமிராது.

ஆப்பிரிக்கா நாட்டு ஜுலு வகுப்பினரின் கலையிலே அவர்களின் நாட்டியம் கவியிலே இருக்கும்.

அதுபோலவே ஆரியக் கலையிலே கங்கையின் கவர்ச்சியும் கரையோரக் காட்சியும், சோலை மாட்சியும் என்பன போன்றவைகள் கவிதைகளாக இலக்கியமாக இருக்கும்!

# தமிழுக்கு வாழ்வு தந்தவர்

கே. சொக்கலிங்கம், I. A S.

தமிழுக்குத் தனிச் செல்வாக்கு இருந்த காலம் எப்படியோ வலிவிழந்து, இடைக் காலத்தில் வந்து புகுந்த மொழிகள் எல்லாம் வாழ்வும், வளமையும், இவற்றாலே கிடைத்த ஆதிக்கத்தையும் அடைந்து, நீண்ட நெடும் இடைவேளைக்குப் பின்னல் தமிழ் தனக்கு இயல்பாக உள்ள செல்வாக்கைப் புதுப்பித்துக் கொண்டு வருகிறது. அன்றாட வாழ்வில் அடுத்துள்ளோரோடு உரையாடவும், அங்காடிகளில் பண்டங்களை விலை பேசும்போது பயன்படுத்தவும், ஓழிந்த நேரங்களில் ஊர்ப் பேச்சுகளைத் தங்குதடையின்றி நடத்தவுமே தாய் மொழியாம் தமிழ்மொழி பயன்பட்டு வருகிறது என்ற நிலைமையை மாற்றி அமைத்த பேரறிவாளர்கட்குத் தமிழகம் என்றும் கடமைப்பட்டிருக்கிறது. வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் தேவையான வற்றாத ஊற்றாகத் தமிழை, மக்கள் மதிக்கத் தொடங்கியிருக்கின்றனர். யாரோ சிலர், எப்போதோ சில நேரங்களில் என்றிருந்த இலக்கிய ஈடுபாடும், அறிவு நூல் வேட்கையும் இருக்கின்ற மனிதர்கள் எல்லோரிடத்திலும், கிடைக்கின்ற நேரம் முழுதிலும் தம்மைப் படியவும், பதியவும் வைத்துக் கொள்கின்றனர். ''தமிழில் என்ன இருக்கிறது'' என்று அலுத்துக் கொண்ட நிலை தமிழரைவிட்டு அற்றுப்போய், இப்போது ''ஏன் தமிழில் அவை எல்லாம் இல்லை?'' என்ற ஏக்கமும், அந்த ஏக்கத்தின் விளைவான முயற்சியும் பெருகி வருகின்றன.

தற்போதைய தமிழ் வளர்ச்சியில் சிறப்பான இடம் பெற்றிருக்கும் இருவகைகள் தாம். ஏட்டுத் தமிழும், மேடைத்தமிழும். இவ்விரண்டிற்கும் உள்ள இலக்கண அமைப்புக்கள் ஒத்திருந்தாலும் பெரும்பாலும் மாறுபட்டவை. ஏட்டுத் தமிழ் நிலைத்து நிற்கக்கூடியது. மேடைத் தமிழ், ஒலிப் பதிவு செய்து வைத்திருந்தால் தவிர, அந்த மேடையோடு முடிவடைவது. ஏட்டுத் தமிழில், படிப்பவர் மனதில் பதிய வைக்க, அந்தக் குறிப்பிட்ட நூலின் இறுதிவரை வாய்ப்பிருக்கிறது. மேடைத் தமிழில் பேசி வரும்போதே பதிய வைத்துக் கொண்டே வர வேண்டும்.

இருபது அல்லது முப்பது ஆண்டுகளுக்கு முன்னல் மேடைத் தமிழ் நடை இரு பிரிவுகளாக இருந்து வந்தது. ஆங்கிலம், வடமொழி, தமிழ் ஆகியவற்றைக் கலந்து பேசும் பேச்சாளர்கள் ஒரு புறமும், தூய தமிழிலே பேசும் பேச்சாளர்கள் மறுபுறமும் ஒருவரோடொருவர் போட்டி போட்டுக் கொண்டு தம் பேச்சுக்களைப் பேசிவந்தனர்; இப்போதும் பேசி வருகின்றனர்.

மணிப் பிரவாள நடையில் பேசி வந்தவர்களில் குறிப்பிடத்தகுந்தவர் காலஞ் சென்ற திரு சத்திய மூர்த்தியாவார். அவர் காலத்தில் மக்களிடம் பெருக்கெடுத்தோடிய நாட்டுப்பற்று அவர் பேச்சுக்குப் பின்னணியாக இருந்து பெரும் அளவுக்கு உதவி புரிந்தது. அதனல் கேட்போரை விரைவிலும் எளிதிலும் அவர்பால் ஈர்த்துக் கொள்ள அவரால் முடிந்தது. அவரும் பெரும் பேச்சாளராக படித்தவர்களிடையிலேயும், பாமரர்களிடையிலேயும் திகழ முடிந்தது.

தூய தமிழில் பேசி வந்தவர்களில் குறிப்பிடத் தகுந்தவர்களில் காலஞ் சென்ற தமிழவேள் உமா மகேஸ்வரம் பிள்ளை அவர்களும், திரு. வி. கல்யாண சுந்தர முதலியார் அவர்களும் ஆவர் திரு. உமாமகேஸ்வரம் பிள்ளை பேசிய தமிழ் எளிய முறையில் தரப்படாததால் அதனை ஏற்றவர்கள் எண்ணிக்கை மிகக் குறைவானது. அன்றாட வாழ்வில் பாட்டாளிகளையும், பாமரர்களை களையும் தொடர்ந்து சந்தித்த காலம்சென்ற திரு. வி. க. தமிழை எளிமையானதாகவும். இனிமை நிறைந்ததாகவும் ஆக்கித் தந்து பலருடைய ஆதரவைத் தனித் தமிழ் நடைக்குப் பெற்றுத் தந்தார்.

இன்றைய தமிழ் நாட்டில் மேடைப் பேச்சு என்றாலே நமக்கு உடன் நினைவுக்கு வருவது நம் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு பேரறிஞர் திரு. அண்ணாதான். அவர்கள் பேச்சுக்கு வயப்படாதவர்கள் யாருமே இருக்க மாட்டார்கள். கருத்தைப் பொருத்த வரை அதனை எதிர்த்துப் போராட வேண்டும் என்ற நிலையில் உள்ளவர்கள் கூட அவர்

பேச்சின்முறையில் தங்களை இழந்து விடுகின் றனர். ஆகையால் அவரையே ஆராய்ந்து மேடைப் பேச்சிற்குத் தேவையானவை எவை என்பதை முடிவு கட்டலாம்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தம்பேச்சை மேடையிலேயே துவக்குவது இல்லை. மேடைக்குவருவதற்கு முன்னமேயே துவக்கி விடுகிறார். நீண்ட நெடுங்காலமாக அவர் இதைத் தன்பழக்கமாக்கிக் கொண்டதால அவருக்கு இது மிக எளிதாகவும், விரைவில் செய்து முடிக்கக் கூடியதாகவும் இருக்கிறது. அவருடைய நிறைந்த அனுபவமும், ஆழ்ந்த அறிவும் அவருக்குத் துணையாக இருந்து சிககல் எதையும் உண்டாக்காமல் அதில் வெற்றியடையச் செய்கின்றன.

முதலில் எது தான் தேர்ந்தெடுக்க வேண் டிய பொருள் என்பதைப் பற்றி முடிவு செய்கிறார். நாட்டில் உள்ளோர் வாழ் வுக்கு வகையும், வளமை சேர்க்கும்பொருள் எதுவோ அதுவே அவர் கையாளும் பொரு ளாக ஆகி விடுகிறது. அதனால்தான் அவர் கூறும் கருத்துக்கள் பொழுதுபோக்குவதற் காகப் பயன்படுவதைவிட, வாழ்வில் ஏற்று நடத்தத் தேவையானவையாக இருக் கின்றன.

தம் பேச்சுக்கு எது பொருள் என்ற முடிவு ஏற்பட்டதும் அதனை அப்படியே கேட்போ ரிடம் அவர் ஒப்படைத்து விடுவதில்லை. அந்தப் பொருள் பற்றிய பேச்சைக் கேட்க இருப்பவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்ப தில் கவனம் செலுத்துகிறார். எதை, எப் படி, எப்போது சொன்னால் அஃது எளிதில் கேட்போர் அறிவில் பதியும் என்று சிந்திக் கிறார்.

பேசத் தொடங்கிய சில நிமிடங்களில் கேட்போரைத் தம் வயப்படுத்தி விடுகிறார் பேரறிஞர் அண்ணா முதல் ஐந்து நிமிடங்கள் கேட்பவர்கள் முற்றிலும் கேட்டுவிட்டுப் போக வேண்டும் என்ற முடிவுக்கு வந்து விடுகின்றனர்.

அடுத்து, பேசப்பட வேண்டிய பொருள் தொடங்குகிறது. இசைவாணர்கள் தாம் பாடும் பாடலை தாளத்துக்கு ஏற்ப வெளிப்படுத்துவதைப்போல, பேரறிஞர் அண்ணா பேசும்போது அமைக்கும் வாக்கி யங்கள் நீளமானவையாக சில தொடர் வதும், இடையில் ஒரு சிறு வாக்கியம் அமை வதும் அவர் பேச்சு முழுவதும் கேட்பவர் களை இழுத்து நிறுத்துவதும், பிறகு நிறுத்தி இழுப்பதுமாக தொடர்ந்து இயங்கச் செய் கின்றன. ஒவ்வொரு சொல்லுக்கும் தேவையான வேகமும், விறுவிறுப்பும், கருத்துக்குப் பொருத்தமான சொற்களை எளிதாகப் பயன்படுத்தும் முறையும், இணைத்து கருத்தோடு மொழியையும், மொழியோடு ஒலியையும், ஒலியோடு உள் ளத்துக்கும் அறிவுக்கும் உணர்வேற்படுத் தும் நிலையையும், ஒருசேர உண்டாக்குகின் றன. இசைவாணர்கள், பிரகாசக்கள், கற் பனைகள் என்ற சொற்களைப் பயன்படுத்து வதைப் போல நகைச்சுவையும், வர்ணனைகளும் பேச்சின் இடையிடையே வந்து விழுகின்றன. இது பேசுகிற முறை யைப் பற்றியது.

முதலில் பொருளைத் தருகிறார்; பிறகு அதற்கான வாதத்தைத் தொடங்குகிறார்; தொடர்ந்து அதற்கான காரணங்கள் கூறு கிறார்; அதைத் தொடர்ந்து அதற்கு சூழ் நிலைகளைச் சுட்டிக் காட்டுகிறார். இவை இரண்டையும் கூறியவுடன் இவற்றைப் பற்றிய ஐயப்பாடுகளையும் மறுப்புரைகளை யும் எடுத்துச் சொல்லி அவை எந்த அளவில் பயனற்றவை என்பதை நிரூபிக்கிறார். இவற் றின் இடையே கேட்போர் இதயங்களை சில பல தடவைகள் சுண்டி இழுக்கிறார். ஒன்றை முழுமையாக முடித்துவிட்டு, அடுத்த வாதத்திற்குப் போகிறார்.

இது பேரறிஞர் அண்ணாவின் பேச்சை என்னுடைய அறிவால் எடைபோட்டு எடுககப்பட்ட முடிவு. குரலொலியும், பொருள் சிறப்பும், வாதம் செய்யும் முறை யும் இவை மூன்றுக்கும் மெருகேற்றும் வர்ணனைகளும், நகைச்சுவைகளும் இணைந்து காணப்படும்படி பேச்சை அமைக்கும் திறம் படைத்த பேச்சாளராக பேரறிஞர் அண்ணா திகழ்வதற்குக் காரணமே இந்தப் பெருஞ் சிறப்புக்கள் அவர் பேச்சில் திகழ்வதால் தான்.

இலக்கியங்கள் இலக்கணத்திற்குஉட்பட்ட வையா அல்லது அப்பாற்பட்டவையா என் பதை இதுவரை முடிவு செய்ய முடியாமல் பேரறிஞர்கள் திண்டாடுகின்றனர் ஆனால் ஒன்று மட்டும் உறுதியாகச் சொல்லலாம். முதலில் சில பல இலககியங்கள் தோன்றிய பிறகு தான் இலக்கணங்கள் வகுக்கப்பட் டிருக்க வேண்டும். தொடர்ந்து அந்த இலக்கண வரன்முறைக்கு உட்பட்ட இலக் கியங்களை உருவாக்க இலக்கிய கர்த்தாக்கள் முனைந்திருக்க வேண்டும். இது தான் எல்லா மொழிகளிலும் ஏற்பட்டிருக்கிற முறை.

எனவே மேடைத் தமிழுக்கு இலக்கணம் வகுக்கும்போது, அதை மிகச் சிறப்பான தாக அமைத்துக் காட்டியிருக்கும் பேரறிஞர் அண்ணாவின் படைப்புக்களை முதல் இலக்கி யங்களாக ஏற்றுக்கொண்டு அதன் அடிப் படையில் மேடைத் தமிழுக்கு இலக்கணம் வகுப்பதுதான் சாலச் சிறந்ததாகும்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்ப்பற்று!!

# காக்கும் கரமுடையாள்

இருவண்ணக் கொடியுடையாள்
எழில்மிகு நடையுடையாள்
கருஞ்சிவப்பு நிறமுடையாள்
காக்கின்ற கரமுடையாள்

கதிரவன்ஒளி பரப்புகின்றாள்
காரிருள் அகற்றிக் காக்கின்றாள்
புதிர்க்கு விடையாள் வந்துவிட்டாள்
பொன்னுக்கு நிகராகிவிட்டாள்

தெருவெல்லாம் தமிழ் முழங்குகிறாள்
தித்திக்கும்கனி வழங்குகின்றாள்
ஆறுதல்பல கூறுகின்றாள்
அள்ளிச்சில தருகின்றாள்

ஒரு படி அரிசி அளக்கின்றாள்
உள்ளமெல்லாம் உறைகின்றாள்
மறு படி அரிசி அளந்திடுவாள்
மாநிலம் காத்து மகிழ்திடுவாள்

தமிழில் ஆட்சி நடத்துகின்றாள்
தன்கர முயர்த்திக் காட்டுகின்றாள்
தில்லிச் சபையிலும் இருக்கின்றாள்
திட்டங்கள் பல கொடுக்கின்றாள்

மங்கலகீதம் ஒலிக்கின்றாள்
மாவிலைதோரணம் காண்கின்றாள்
பொங்கும் மகிழ்ச்சி அடைகின்றாள்
போற்றிப்புகழ ஆள்கின்றாள்

உண்மை யென்னும் பெயருடையாள்
உலகம் போற்றும் உயர்வுடையாள்
அண்ணன் உருவில் ஆள்கின்றாள்
அமைச்சர் வடிவில் சிறக்கின்றாள் !

— ராம்நாத்

# வாழ்விக்கவந்த வள்ளல்

கற்றவர் போற்றும் கல்விச்
கடல்மடைப் பெருக்கம் ! எல்லாம்
உற்றவர் இங்கென் றெண்ணும்
உயர்நெறி விளக்கம் ! கொள்கைப்
பற்றலர்; பகைவரேனும்
பரிந்தழைத் தணைக்கும் தண்மை !
பெற்றவர் ஒருவரென்றால்
பெருந்தகை நீதான் அண்ணா !

கருணையங் கதிரே ! துன்பக்
காரிருள் துடைக்க நாட்டில்
விரைந்தெழும் சுடரே ! இன்பம்
விளைத்திடும் விளைவே ! எம்முள்
சுரந்தெழும் பாசத்தேனில்
சுவைத்தமிழ் அமுதஞ் சேர்த்தே
"பறந்து நீ வருக ! பார்வைப்
படையலைத் தருக !" வென்போம்!

நூறுநா றாண்டுக் காலம்
நோற்ற நற் றவத்தால் எங்கள்
பேறெனவந்தவன் நீ
பேதவீண் பிணக்கையெல்லாம்
வேரறுத் தொருமை காணும்
வித்தகன் நீயே ! வையப்
பேரருட் பிழம்பே அண்ணா
பெருநலம் பெற்றுய் வா ! வா !

— மணிமொழி




இல்லற வாழ்வு இனிக்க எல்லோரும் உணவு உடை உறையுள் கல்வி வசதிகள் பெற்றுச் சிறக்க ஒவ்வொருவர் குடும்பமும் அளவாக இருத்தலே நல்லது. இன்ப வாழ்வுக்கு ஓர் இரு குழந்தைகள் இருந்தாலே போதும்.

*வெளியீடு:* **மாநில குடும்ப நலதிட்ட அமைப்பு**
சுகாதார, குடும்ப நலதிட்ட இயக்குநர் அலுவலகம்
**சென்னை-6.**

## குடும்பக் கட்டுப்பாடு செய்திடுவீர்

# கிளிக்குப் பச்சை பூசுவதா?



## அறிஞர் அண்ணா

**தம்பி,**

'எங்கிருந்து வருகிறீர்? என்று கேட்டேன், நமது அமைப்புச் செயலாளர் நடராசன் அவர்களை.

சூலூரிலிருந்து வருகிறேன் என்றார் அவர்.

நான் வேடிக்கையாக அவரைக் கேட்டேன்; ''அதென்னய்யா அப்படிச் சொல்கிறீர்? நீர் மட்டுந்தானா, சூலூரிலிருந்து வருகிறீர்—நாமெல்லோருமே சூலூரிலிருந்து தானே வந்திருக்கிறோம்'' என்றேன்—கருவில் உருவாகி வந்த காதையல்லவா, அதனால் அவரும் உடனிருந்தோரும் சிரித்தனர்.

அது சரி, சூலூரிலிருந்து கிளம்புகிறோம், பிறகு நாம் செல்லுமிடம் எது? கூறும் என்றேன், குறும்புக்காக. அன்று என்னவோ ஒருவிதமான மகிழ்ச்சி. மாநில மாநாட்டுக்காக நல்லதோர் திடல் கிடைக்க இருக்கிறது, அதற்கான உத்தரவு பெற, மாவட்டக் கலெக்டரைத் துறையூர் சென்று காணப் புறப்படுகிறேன் என்று நண்பர் அன்பில் தர்மலிங்கம், அப்போதுதான் கூறி விட்டுச் சென்றார், அதனால் ஏற்பட்ட குதூகலம் என்று எண்ணுகிறேன்.

நண்பர் நடராசன் பதில் ஏதும் கூறவில்லை. வழக்கமாக அவரிடம் வெளிப்படுமே ஒருவிதமான வெறிச்சென்ற பார்வை, அதனைச் செலுத்தினார், நான் விடவில்லை.

''சொல்லுமையா, சூலூரிலிருந்து புறப்பட்டு வருகிறோம், பிறகு...'' என்றேன்.

அவர் பதில் அளிக்காதது மட்டுமல்ல, என்னிடமிருந்தே அதற்கான பதிலை எதிர்பார்த்தார்.

சூலூரிலிருந்து (கருவிலிருந்து) புறப்பட்டு, பாலூர் (அன்னையின்) அன்புப் பாலூட்டப் பெறுகிறோம். செல்லுகிறோம் — பிறகு முறைப்படி வளர்ந்து வளர்ந்து வேலையூர் [தொழில் செய்தல்] செல்கிறோம்; அங்குப் பக்குவம் பெற்ற பிறகு சேலையூர் [திருமணம்] சென்று இன்புறுகிறோம். பிறகு வசதியூர் தேடுவதிலே ஈடுபட்டுக் கடைசியில் சுடலையூர் சென்று அமைதி பெறுகிறோம்—என்று நான் கூறினேன்.

''என்ன அண்ணா! பெரிய தத்துவம் பேச ஆரம்பித்து விட்டீர்கள்—வேதாந்தம் பேசுகிறீர்—என்று நடராசன் கேட்டார். கருவிலிருந்து கிளம்பிக் கல்லறைவரை நடத்தும் பயணத்தையும் அந்தப் பயணத்தில் பொதிந்துள்ள தத்துவத்தையும் விளக்கவே, நான் சூலூரிலிருந்து நாமனைவரும் புறப்பட்டுச் சுடலையூர் பயணமாகிறோம் என்று சொன்னதாக அவர் எண்ணிக்கொண்டார். ஆனால் தம்பி, நான் வேதாந்த விசாரத்தில் அப்போது மூழ்கியுமில்லை; நான் பேசினதும் தத்துவம் அல்ல; இலக்கணத்தில் மனம் செலுத்திக்கொண்டிருந்தேன்.

சூலூர்
பாலூர்
வேலையூர்
சேலையூர்
வசதியூர்
சுடலையூர்

இப்படி 'ஓசை' நயத்தைக் கற்பனை செய்து

கொண்டிருந்தேன். காரணம், நமது கழகவளர்ச்சி கண்டு அகத்தில் குடைச்சலும் முகத்தில் கடுகடுப்பும் கொண்ட யாரோ ஒருவர் தமிழில் அடுக்கு மொழி பேசிப் பேசி மக்களை மயக்கி விடுகிறீர்கள். அப்பாவி மக்களும் ஓசை நயத்தில் மயங்கி உள்ளத்தைப் பறிகொடுத்து விடுகிறார்கள். அதனாலேயே உங்களால் கூட்டம் சேர்த்திட முடிகிறது என்று ஏளனம் பேசினாராம். அதைக் கேட்டு, கடும் கோபம் கொண்ட தம்பி ஒருவர், 'அண்ணா' இவ்விதம் எல்லாம் பேசுகிறார்கள் என்று கூறி குறைப்பட்டுக் கொண்டார். அதனால் என் மனம், அடுக்கு மொழி, இரட்டைக் கிளவி, எதுகை மோனை ஆகியவற்றின் எழில், பயன்மீது சென்றது. அதே நேரத்தில் சூலூர் எனும் இடத்திலிருந்து வருகிறேன் என்று நணபர் நடராசன் கூறினார். உடனே,

சூலூர்

பாலூர்

வேலையூர்

சேலையூர்

வசதியூர்

சுடலையூர்

என்றெல்லாம் பேசினேன்.

ஓசை நயம் தேடுவதும் தருவதும் குற்றமல்ல. இசைக் கலையே ஓசை நயத்தை தரப்படுத்தித் தரப்படுவது தானே. ஆனால் சிலர் ஓசை நயம் என்பது ஏதோ ஓர் இழுக்கான செயல்போலவும் அதன் பயனாக மாபெரும கேடு மனித இனத்திற்கு ஏற்படுவது போலவும் பேசுவா. ஆராய்ந்து பார்த்தால் அவர் தம் போக்குக்கு காரணம் கோபம் என்பதும், அந்த, கோபத்திற்குக் காரணம் கவலை என்பதும், கவலைக்குக் காரணம் அவர்கள் ஓசை நயம் காட்ட முயன்று ஏற்பட்ட தோல்வி என்பதும் விளங்கி விடும்.

வீட்டிலே சின்னத் தம்பி இருந்தால் அவன் எதிரில் குழல் கொண்டு இசை எழுப்பிப்பார். சிறுவன் சிரித்து மகிழ்வான். சிட்டுப் போலப் பறப்பான். எனக்கு எனக்கு என்று கொஞ்சுவான். கொடுத்தால் ஊதிப் பார்ப்பான் ஓசை நயம் கிடைக்காது. ஒவ்வொரு முயற்சியும் ஒவ்வொரு ஓசைக் கொலையாகும். தோல்வி கண்டு துயர் உற்று, கோபமுற்று, ஊது குழலை ஓங்கிப் பூமியில் அறைவான்.

மொழியில் ஓசை நயம் பெறவும் காட்டவும் முயன்று, முடியாததால் கவலை கொள்பவர்கள், கோபம் கொண்டு தமக்கு துணை வர மறுக்கும் ஓசை நயம் பிறரிடம் பேரன்பு காட்டுவது கண்டு பெருங் கோபம் கொண்டு ஓசை நயம் என்பதே தவறானது, தீதானது என்று தூற்றத் தொடங்குவர்.

காதல் கைகூடாவிடத்துத் தென்றல் தேள்கடியாகும், நிலவு தீயாகச் சுடும், மலரே முள் போல் தைக்கும என்கிறார்களல்லவா! காதல் மட்டுமல்ல, எதுகை கூடாவிட்டாலும் கடுப்பு ஏற்படுவதும் அந்தக் கடுப்புக்குக் காரணமாகக் கடுங் கோபம் மூள்வதும், அதன் விளைவாகக் கடுஞ்சொற்கள் கிளம்புவதும் நிரம்பக் காண்கிறோம். அந்த முறையிலதான் தமிழின் இனிமையை ஓசை நயத்தின் வழியாகக் காட்ட முயன்று, தோற்பவர்கள், அந்த முறையில் வெற்றி கண்டோரைக் காணும்போது கொதிப்புற்றுச் சுடுசொல் வீசுகின்றனர்.

ஓசை நயம் குறித்து நம்மீது குறை கூறுவோர், நம்மைக் குறை கூற இதுவரையில் ஓராயிரம் காரணங்களைச் சிரமப்பட்டுத் தேடித் தேடி அலுத்தவர்கள்—ஒவ்வொன்றும் கிளம்பும் வேகத்தைவிட அதிக வேகமாக மடிந்தொழியக் கண்டு மனவேதனையுற்றவர்கள். எனவே அவர்கள், மொழியை நாம் கையாளும் வகை பற்றிக் குறை கூறிப் பேசுவது குறித்து நாம் கவலை கொள்வதற்கில்லை. குழலும் யாழும் குழந்தையின் மழலையின் இனிமைக்கு ஈடாகா என்று கூறினவர் வள்ளுவர். அடா! அடா! காது குடைகிறது, ஏன் தான், இதுகள் கழுதை போலக் கத்துகின்றன. கோட்டான் போலக் கூவுகின்றன என்று குழந்தைகளைப் பேணி வளர்ப்பதில் பொறுமையும் திறமையும் அறியாதவர்கள் அலறக் கேட்கிறோம்; கவலையா கொள்கிறோம்; இல்லை, இல்லை, கை கொட்டிச் சிரிக்கிறோம்.

முரசொலி, வீரர்க்கு மகிழ்ச்சி அளிக்கிறது, வீணல் உண்டு கொழுத்து இருப்போருக்கோ! ஐயோ! முரசு அறைகிறார்களே, போரல்லவா மூளும் போலிருக்கிறது, என்று திகில் பிறக்கிறது. எனவே, அவர்கள் முரசு முழங்கும்போது அதிலே ஓசை நயம் காண்பதில்லை

சதங்கைச் சத்தம் கேட்டதும், சாலைக்கும் சோலைக்கும் அதற்குள் பலநூறு தடவை நடந்து நடந்து அலுத்துப்போய்ச் சலித்துக் கொண்டுள்ள காதலன், புன்னகை கொள்கிறான், காதலி வருகிறாள், ஓசை நயம் அதனைத்தான் அறிவிக்கிறது என்று. காதலிக்குப் பதிலாக வேறோர் காரிகை அங்கு வந்து, தந்தை தடுத்துவிட்டார், தத்தை இன்று வரமாட்டாள்—என்ற செய்தியை அளித்தால், ஓசை நயத்தின் விருந்துண்டவனே வேம்பு தின்றவனாகிறானல்லவா!

ஆலய மணியோசை, ஆலைச் சங்கொலி, சோலைக் குயிலின் கூவல், காலையில் காகம் கரைதல், கன்று தாயை அழைத்தல்—ஓசை நயம் ஒவ்வொன்றில் ஒவ்வொருவருக்கு, அவரவர் இயல்புக்குத் தக்கபடி கிடைக்கத் தான் செய்கிறது. எனவே 'ஓசை நயம்' என்பது வெறுத்து ஒதுக்கப்பட வேண்டிய ஒன்றல்ல. ஆனால் அதேபோது......

அதோ பார் குகை; அங்குமுடிப்பேன் என் பகை; அறிவாயோ, என்னிடம் தோற்றவர் தொகை; ஆயிரம் உண்டு போர் வகை! குகை—பகை—தொகை—வகை!!

மேலும் கூடக் கூட்டிக் கொள்ளலாம், சிகை, நகை, என்றெல்லாம்.

ஓசை நயம் தமிழில் நிரம்பக் கிடைக்கும். ஆனால் அதைமட்டுமே நம்பி, 'நடை' காட்டினால், சிறிது நாட்களில், தமிழின் இனிமை பற்றி அனைவரும் இன்று ஏற்றுக் கொண்டிருக்கிறார்களே, அதற்கே கூட ஊனம் வந்து விடும்.

ஓசை நயம்—அடுக்குத் தொடர்—இரட்டைக் கிளவி—போன்றவைகள், பூங்காவிலுள்ள கவின் மலர்கள் போன்றவை!

தாமாக மலர வேண்டும்—மணமுள்ளவைகளைப் பதமாகப் பறித்துப் பக்குவமாக மாலை தொடுக்க வேண்டும்—அப்போது தான் கவர்ச்சி கிடைக்கும்.

ஓசை நயத்தை எப்படியும் பெற்றுத் தீர வேண்டும் என்று முயற்சித்தாலோ, காது குடைச்சல் ஏற்படுவது மட்டுமல்ல, மொழிக்கு ஏற்பட்டுள்ள பெருமதிப்பும் குன்றும், குறையும்.

கழுதூர்

பழுதூர்

தொழுதூர்

வழுதூர்

தம்பி, இந்தப் பெயர் பட்டியலைப் பார்த்தாயா? ஓசை நயத்துக்காகவே வேண்டுமென்றே இட்டுக் கட்டியது போலல்லவா தோன்றுகிறது?

குகை

பகை

தொகை

வகை

என்று தேடிப் பிடித்திழுத்து; கூட்டிக் கலக்கித் தருவது போலவே வழுதூர், தொழுதூர், கழுதூர், பழுதூர், கற்பனைக் கலவை என்றுதான் எண்ணிக் கொள்வாய்; ஆனால், உண்மையிலேயே இந்தப் பெயர்கள் கொண்ட ஊர்கள் தமிழ் நாட்டில் உள்ளன. அனைத்தையும் ஒரு சேரக் கூறும் போது, குகை, பகை, தொகை, வகை போல, வேண்டுமென்றே ஓசை நயத்துக்காகவே கூறப்படுபவை போலத் தோன்றும்

ஓசை நயத்தில் இயல்பாகவே அமைந்து, பொருள் செறிந்து, பொழிவு தருபவையே தேவை; பொருளற்று, பொலிவற்று வலிந்துகொண்டு வருவது மொழிக்கு நாமே நம்மையும் அறியாமல் செய்துவரும் தீங்காகும்.

ஓசைநயம் உயர்தரமாகவும் இயற்கைக்கு முற்றிலும் பொருந்திய தன்மையிலும் அமைந்துள்ள காப்பியங்களும், பாக்களும், தமிழ் மொழியில் உள்ள அளவு பிற மொழிகளிலே உண்டா என்பது சந்தேகமே.

மொழி வளமுள்ளதாகவும் நெடுங்காலமாகப் புலவர் பெருமக்களால் வளர்க்கப்பட்டதாகவும் இருந்தால் மட்டுமே, சுவையும் பொருளும் ஒரு சேரத்தரவல்ல ஓசை நயம்—அடுக்குத் தொடர் ஆகியவை கிடைக்கும். தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டுள்ள நமக்கு அந்தச் செல்வம் நிரம்ப இருக்கிறது. கண்டறிவதும் கொள்வதும் எளிது! கொண்டதைப் பொருள் உணர்ந்து தருவது கடினம்; எனினும் இயலாததன்று. எப்படியும் 'ஓசை நயம்' தந்தாகவேண்டும் என்ற 'மன அரிப்பை'ச் சிறிதளவு அடக்கிக் கொண்டால் போதும், உயர்தரமான, 'ஓசை நயம்' கிடைக்கும்.

என்ன அண்ணா! தமிழாசிரியர் 'வேலை'யைத் துவக்கிவிட்டாயே, என்று கேட்கிறாயா' தம்பி!

அடுக்கு மொழியாலும் ஓசை நயம் காட்டியும் மக்களை மயக்கி அவர்களை ஆகாத வழியெல்லாம் அழைத்துச் சென்று ஆன்றோரும் சான்றோரும் அமைத்தளித்த அற நெறியை, அருள் நெறியைக் கெடுத்தொழிக்கிறோம் என்றார். பழி படர்ந்திருக்கிறதல்லவா, நம்மீது; அதுபற்றிய 'விளக்கம்' விரும்பினார் ஒரு தம்பி! அவருக்குக் கூறுவதை உனக்கும் காட்டுவோமே என்ற எண்ணத்தில் இதை எழுதினேன்.

கலை

சிலை



**ஒப்புக்கொள்ள மாட்டேன்!**

''பச்சையப்பன் கல்லூரியிலே படித்துக்கொண்டிருந்த காலத்தில் சரியாக மூன்றே மூன்று முறைதான் கல்லூரி முதல்வரைச் சந்தித்திருக்கிறேன் நான்; அந்த மூன்று முறையும் கூட எனது பேராசிரியர்கள் — அவர் ஒன்றும் செய்துவிடமாட்டார் போ' என்று தைரியம் சொன்ன பிறகுதான் போனேன்.

'அப்போதெல்லாம் கல்லூரி முதல்வரைப் பார்த்துப் பேசுவதென்றாலே பெரும் பாக்கியம் செய்ததைப்போலக் கருதுவோம். ஆனால் இப்போதோ, கல்லூரி முதல்வர் மாணவர்களைத் தேடி வகுப்பறைக்குப் போகவேண்டியிருக்கிறது. அந்த அளவுக்குக் காலம் மாறிவிட்டது. இந்த மாற்றத்தை அருமை பெருமை மிக்கதென்று யாராவது கூறுவார்களானால் அதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்.''

—அண்ணா

வலை
நிலை
உலை
மலை
தலை
இலை

இவைகளை சிறு சிறு மாற்றங்கள் செய்துவிட்டால்,

காலை
மாலை

என்று புதுவடிவம் மட்டுமல்ல, பொருளே மாறி விடுகின்றன!

மிகக் குறைந்த அளவு எழுத்தில் மாற்றங்கள் செய்து, முற்றிலும் வேறான பொருள் பெறத்தக்க வகையில், தமிழ்மொழி, அழகுற அமைந்திருப்பதைக் காணும்போது, நமக்கெல்லாம் பெருமையே பிறக்கிறது.

ஆனால், இவைகளை ஒரே இடத்தில் கூட்டி வைத்துக் காட்டியாக வேண்டுமென்ற மன அரிப்பு ஏற்பட்டுக் கலை வலை என்பார். சிலைக்கும், உலைக்கும், மலைக்கும் தலைக்கும், இலைக்கும், ஓலைக்கும் வித்தியாசம் தெரியாத நிலையில் உள்ளவர்கள் என்று ஒரு தொடர் சுட்டிக்காட்டி இதிலே கலை, சிலை, வலை, நிலை, உலை, மலை, தலை, இலை, ஓலை, அத்தனையும் அடைத்துக் காட்டி இருக்கிறேன்? எப்படி என்திறம்? என்று கேட்பது மொழிக்குத்தான்பெருமை தருகிறதா? அதைக் கையாள்வோருக்குத்தான் பெருமை தருமா?

நாம், ஓசைநயம் காட்டி, அடுக்குமொழி பேசி, மயக்கி விடுகிறோம்; என்று குறை கூறுவோரில் பலர், ஓசை நயமும் அடுக்கு மொழியும் இவர்களுக்குத்தானா, எமக்கும் எளிதுதான் என்று கூறி, வேட்டையாடி, நான் இப்போது காட்டிய தொடர்போன்றவைகளைக் கட்டிக் காட்டுகிறார்கள்; விலை போகாதது கண்டு கோபமும் கொள்ளுகிறார்கள்.

துடுக்குத்தனமாக
அடுக்குமொழி பேசுவோரை
மடக்குவதற்கு
வெடுக்கு மொழி பேசி
மிடுக்குடன் நான் வந்தால்
தடுக்கும் பேர்வழி யார்?

நமது 'அடுக்கு மொழி'யைக் கண்டிக்கத் துடிக்கும் அடுக்கும, மடக்கும், மிடுக்கும் தடுக்கும் சரமாரியாகக் கிளம்புகின்றன. எல்லாம் குறிதவறி விடுகின்றன; கூரும் மழுங்கிப் போகின்றன.

'அடுக்கு மொழி' ஆகாது என்பதாலோ, அது தவறு என்பதாலோ அல்ல, பிறர் அது குறித்து, நம்மைக் கண்டித்துப் பேசுவது. அடுக்கு மொழி பேச வேண்டும் என்பது தான் அவர்கட்கும் உள்ள ஆவல்; ஆனால் அது சுவை படவும் பொருள்தரவுமான முறையில் நம்மிடம் இருப்பது கண்டு, இது இவர்களிடம் இருக்கிறதே என்ற எரிச்சலில் பழம் புளிக்கிறது என்கிறார்கள்! வேறொன்றுமில்லை.

அவர்கள் சொல்லுகிறார்கள் என்பதற்காகவும், நாம் மொழியின் அழகு விளங்கிடும் வகையான அடுக்கு மொழியின் ஓசை நயத்தினை விட்டுவிடவும் தேவையில்லை;

அறிவு நூலகம்

ஓசை நயமும் அடுக்கு மொழியும் இருந்தால் மொழி அழகுபெறும் என்பதற்காகவே, தேடித் திரிந்து கூட்டில் அடைத்து வைத்து அழகு பார்க்கவும் தேவையில்லை.

இருளைக் கிழித்துக்கொண்டு செல்லும் போது தான், மின் மினியே அழகளிக்கிறது: மின் மினி ஒளி தருவது கண்டு, அதனைக் கண்ணு டிப்பெட்டிக்குள் அடைத்து வைத்து, அழகு காண முயற்சித்தல் சரியல்ல.

ஓசை நயம் தமிழ் மொழிக்கு மட்டுமே நிரம்பவும் நேர்த்தியுடனும் இருக்கிறது என்பதற்காகவே, அம்மொழி வேறெல்லா மொழிகளையும்விட உயர்ந்தது என்று மார் தட்டத் தேவையுமில்லை; அது அழகு மாகாது. இருபத்து ஆறு எழுத்துக்களை மட்டுமே கொண்ட ஆங்கில மொழி இன்று, உலக அரங்கம் எங்கணும் உயர்வு பெற்றுத் திகழ்கிறது; மறப்பது கூடாது.

கா
மா
வா
தா
போ
பா
பூ
தை
வை
கை
தீ
ஈ
நீ
சீ
தூ

இப்படி ஒரே எழுத்துக்கூடத் தமிழ் மொழியில் பொருளளிக்கும் திறம் பெற்றுத் திகழக் காண்கிறோம்; எனினும் இதனை வேண்டுமென்றே ஒரு கூட்டுக்குள் பிடித் திழுத்துப் போட்டுக் காட்ட 'நடை' தேடு வது நல்லதல்ல; அதாவது அளவும் முறை யும், தேவையும் அறிந்து பயன்படுத்தினால் எழிலும் சுவையும் நிரம்பக் கிடைக்கும்; தவறினால் எரிச்சல் கிளம்பும். ஏளனம் பிறக்கும்.

முறையுடன் தந்திடின் எத்துணை எழில் கிடைக்கிறது என்பதைத் தம்பி, இதோ இந்தப் பள்ளு எடுத்துக்காட்டுகிறது பார்.

வானக் குரிசில் வள்ளலாய்—வரைக்
கோனைப் பரிசு கொள்ளலாய்
வழங்குமாறும் புறப்பட்டே—புனல்
முழங்குமாறும் தலைப்பட்டே
தானக் களிறு படிந்திடக்—கொலை
ஏனக் களிறு மடிந்திடத்
தழையின் ஆரம் உந்தியும்—பசும்
கரையின் ஆரம் சிந்தியும்
கானக் குளவி அலையவே—மது
பானக் குளவி கலையவே—

முக்கூடற்பள்ளு தரும் ஓசை நயம் இங்ஙனம் அமைந்திருக்கிறது. எனவே ஓசை நயம் எற்றுக்கு என்று கேட்போர் பற்றி நாம் கவலைப்படுவதற்கில்லை. ஆனால் முறையற்ற ஓசை நயம் கூடாது என்ற எண்ணம் நமக்கு எப்போதும் துணை நிற்க வேண்டும், இல்லை என்றால்,

பள்ளாம் பள்ளு
தள்ளு தூரத் தள்ளு



## இந்தி-புட்டிப்பால் !

''தாய்மொழியாக இந்தியைக்கற்றுக் கொண்டவனிடம் பள்ளியில் மட்டும் படிக்கும் நாம் போட்டி போட முடி யாது! தாய்ப்பாலைக் குடித்த குழந் தைக்கும் —புட்டிப்பால் குடித்த குழந் தைக்கும் உள்ள வேற்றுமைதான் இந்திக்காரனுக்கும் நமக்குமுள்ள வேற்றுமை.

''குழந்தை எலும்பும் தோலுமாய் மாறத் தொடங்கினால் என்ன புட்டிப் பாலா என்று கேட்கிறோம்.

''ஊருக்கு வந்தவன் இளைத்திருந் தால் 'என்ன ஓட்டல் சாப்பாடா?' என்கிறோம்.

''அதுபோல்—பள்ளியில்இந்திமொழி படிப்பவன்—போட்டியில் இளைத்தே காணப்படுவான்! இதை உணர்ந்து கொள்ளாமல் இந்திக்கு ஆதரவு தந்தால் கண்ணிருந்தும் குருடர்க ளாய்—வாயிருந்தும் ஊமைகளாய்ப் போய் விடுவோம்!''

— அண்ணா



என்று 'விளையாடத்'தோன்றும்—துவக்கத்தில் அது விலை போகவும் செய்யும், பிறகோ மொழிக்கு நாமே ஊறு செய்கிறோம் என்ற உணர்வு வந்து தாக்கும்.

'கூட்டுப் புருவம்' சில குமரிகளுக்கு இருந்திடக் கண்டிருப்பாய்—புருவமே இப்போது அருமையாக மட்டுமே காணக் கிடைக்கும் காட்சியாக இருக்கிறது—எனவே 'கூட்டுப் புருவம்' நிரம்பக் கிடைத்திடாது; ஆனால் அது இயற்கையாக அமைந்தாலோ அந்த அணங்குக்கு அது தனியானதோர் அணியாகவே விளங்கிடும். ஆனால் அதனைக் கண்டு, சரி, சரி, கூட்டுப் புருவம் அழகளிக்கிறது, எனவே இரு புருவங்களையும் மை கொண்டு இணைத்து, கூட்டுப் புருவம் ஆக்கிக் காட்டுவோம், என்று செய்தால் தூரத்துப் பார்வைக்கு அழகளிக்கக் கூடச் செய்யும், அருகே செல்லச் செல்ல, 'மை வண்ணம்' காண்போம், கண்டு, இவ்வளவுதான்! என்போம்; ஏளனம்கூடச் செய்யத் தோன்றும், நமக்கு ஏற்படுவதைவிட அதிகச் சங்கடம் கூட்டுப் புருவம் தீட்டிக்கொண்ட குமரிக்கு ஏற்படும், வண்ணம் எப்போது கை பட்டுக் கலைந்து விடுகிறதோ என்ற அச்சம் குடையும்

மொழியின் ஓசைநயம் குறித்தும், இதே கதிதான். தம்பி! சினிமாக்களில் ஒரு முறையைக் கையாளுகிறார்கள்.

அங்குக் கதைகட்கு ஏற்றவகையில் புருவங்கள் தேவைப்படுகின்றன! குறித்த புருவம், கூட்டுப்புருவம், நெறித்த புருவம், படர்ந்த புருவம், வில்லுப் புருவம்—இப்படிப் பலப்பல!

நல்ல பெண்மணியின் புருவம் வில்போல் வளைந்து இருக்கும்—இருக்க வேண்டும். காதகிக்குப் புருவம், அரவம்போல அச்சமூட்டுவதாக அமைதல் வேண்டும். அப்படி அங்கு ஒரு முறை!!

எந்த ஏந்திழையிடம் இத்தனை புருவங்கள் கிடைக்க முடியும். எனவே அங்கு முதலில், ஏந்திழையின் இயற்கைப் புருவத்தை எடுத்து விடுகிறார்கள்—வழித்தெடுத்து விடுகிறார்கள். இயற்கை பறிக்கப்பட்டான பிறகு, எழில் காட்டும் கலைஞன் தன் இச்சைக்கு ஏற்ப, புருவங்கள் அமைக்கிறான்—காதளவு வளர்ந்த கண்ணினை என்னென்பேன், காமன் தன் கரும்பு வில் போன்ற புருவத்தைக் கண்டேன், அதன் அழகை எவ்வாறு கூறுவேன் என்றெல்லாம் பிறகு திரைக்காதலன் பாடம் படிக்கிறான். கொட்டகைக் கோமான்கள் குதூகலமடைகிறார்கள். ஆனால் உண்மையில இயற்கையாக இருந்த புருவம்' பறிபோய்விட்டது, இரவல் புருவம் பிறர் காணும்போது எழில் காட்டும வகையில், அமைக்கப்படுகிறது.

தமிழ் மொழியிலும், தம்பி, அதற்கென்று இயற்கையாக அமைந்துள்ள, எழில் முறைகளைக் களைந்தெறிந்து விட்டு, பிறமொழிச் சொற்களையும் முறைகளையும் கலந்து புதிய எழில் காட்டுகிறோம் என்று கூறுவாருளர்.

சினிமாக்களுக்குச் சிதைத்தலும், சேர்த்தலும், கூட்டலும் குறைத்தலும், மறைத்தலும், மிகுத்தளித்தலும் தேவைப்படுகிறது. அந்த உலகத்து இலக்கணம் அது. குறை கூறுவதற்கில்லை; ஆனால் மொழித் துறையில் இந்த முறையைப் புகுத்தி, உள்ள எழிலை உருக்குலையச் செய்து, பாழ் படுத்துவது அடாத செயலாகும். ஆனால், 'மேதைகள்' பலர், பிறமொழிச் சேர்க்கையும் பிறமுறைகளின் சேர்க்கையும் தமிழ் மொழியை வளமாக்கும் என்று காரணம் காட்டி இந்தத் தீய செயலைச் செய்து வருகின்றனர்.

இதனை அறிந்து தடுத்திட வேண்டும் என்ற எண்ணம்கொண்டு பணியாற்றும் நம்மாலேயேகூட (சற்று அதிகமாகவே என்னால்!) பிறமொழிச் சேர்க்கையும், பிறமுறைகளின் சேர்க்கையும் நீக்கிப் பேசவும் எழுதவும முடியாமலாகி விட்டிருக்கிறது. ஏனெனில், நாம், தூய தனித் தமிழ் சித்திரவதை செய்யப்பட்டுப் பிறமொழியும், பிறமுறையும் கலந்து பேசும் எழுத்தும் 'மணிப் பிரவாளம்' என்ற வடிவு கொண்டு, தமிழும் வடமொழியும் கலந்து இழைந்து வழங்கப்பட்ட நாட்களில் பயின்றவர்கள்—எனினும், புலவர் பெருமக்களின் அறிவுரை கேட்டதால் இந்தக் கலவை தீது பயப்பது என்று தெரிந்து, தமிழ்மொழிக்கு மீண்டும் தனியானதோர் ஏற்றம் தேவை என்ற தூய நோக்குடன் பணியாற்றி வருகிறோம். எனவே, நம்மாலே முற்றிலும் 'தனித் தமிழ்' எழிலைக் காட்ட முடியவில்லை.

நானே, பல தடவைகளில் பேசியான பிறகும், எழுதியான பிறகும், இன்னின்ன சொற்களுக்கு இன்னின்ன தமிழ்ச் சொற்களை கையாண்டிருக்கலாமே — தவறிவிட்டோமே என்று எண்ணி வருத்த முறுவதுண்டு. எனினும், தம்பி, எங்கள்மூலம் நீ இவ்வளவுதான் பெறலாம் — அதிகம் எதிர்பார்க்காதே—ஆனல், உன்னலே முடியும் இந்தக் குறைகளேயும் களேய—நாடு உன்னிடம் நிச்சயமாக அதிகம் எதிர்பார்க்கிறது.

ஆரிய மதக் கற்பனேகளுக்கு நிரம்ப இடமளித்து விட்டதால், தமிழ்மொழிக்குரிய இயல்பு எத்துணே கெட்டொழிந்தது என்பதனே அறிய, வேறெந்தத் துறையினேயும்விட 'உவமை' கூறுகிறேமே, அந்தத் துறையினேப் பார்த்தால் மிகமிக விளக்கமாகத் தெரிந்துவிடும்.

சனியனே! உயிரை வாங்காதே
எமன்போல வந்து தொலேத்தான்
பெரிய அரிச்சந்திரன்தான், வாயை
[மூடுடா!
துர்வாசர் போலச் சீறுகிருன்
போதும், போய்ப் படுத்துத் தூங்
[கடா, அனுமாரே!
துரோபதை போலக் கதறுகிருள்
கலியுக பீமசேனன் என்று அவனுக்
குப் பெயர்
ஆமாம், அர்ஜுனன்தான்!
அவள், ரம்பையே தான்
அமிர்தம்போல இனிப்பான பானம்
குபேரபட்டினம் போலக் காட்சி
[அளித்தது.

நிரம்பப் பேசுகிறேம், அதுபோல மேடைகளிலும், வீடுகளிலும் பழமை விரும்பிகள் மட்டுமல்ல, நாம் கூட,

கொல்லிமலேப்பாவை! என்று கூற நமக்கும் தோன்றுவதில்லே; கூறிடின், புரிந்து கொள்வோரும் புலவர் அவையிலே மட்டும் கிடைப்பர்: மக்கள் மன்றம் மறந்தே விட்டது.

கொல்லிமலேயில் ஓர் சித்திரப்பாவை செதுக்கப்பட்டிருந்ததாம்.

அத்துணே எழிலாம், அப்பாவைக்கு.

தொலேவிலிருந்து காண்போர் அழகால் ஈர்க்கப்பட்டு அருகே செல்வராம், காண்பராம், உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டு நிற்பராம, நிற்பராம், அந்த அழகு அவர் தம் உயிர் குடித்திடும் வரையில் நிற்பராம்,

மயக்கி மாய்த்திடும் பொலிவு, கொல்லி மலேப் பாவைக்கு! ஆனல், நாம் இதனே



'உவமைக்கு'க் கையாண்டதுண்டோ" இல்லே, ஏன்? நமது எண்ணத்திலேயே பிற மொழிக் கருத்துக் கலக்கப்பட்டு விட்டதால், அழகு பற்றியோ, அதனுல் வந்துறும் அவதி பற்றியோ எடுத்துரைக்க நினேக்கும் போதெல்லாம் மேனகை, ரம்பை, ஊர்வசை, திலோத்தமை, இவர்களே நமது நாவில் நின்று விடுகிறர்கள். தமிழ்மொழியில் காணக் கிடக்கும் கொல்லிமலேப் பாவையை மறந்தே விட்டோம். இயற்கைப் புருவத்தை எடுத்தான பிறகு, கூட்டுப் புருவம், மிரட்டுப் புருவம், எல்லாம் அமைத்துக் கொள்கிறேம.

எனவேதான், தம்பி! தமிழ் மொழியில் காணக் கிடைக்கும் 'ஓசைநயம்' போன்ற எந்த எழிலேயும் இழந்துவிடக்கூடாது என்று கூறி வருகின்றேம். அதே போது, அந்த எழில் வேண்டும் என்பதற்காகவே, 'இட்டுக் கட்டியும்' 'இழுத்துக் குழைத்தும்' தரக்குறைவு ஏற்பட்டு விடும்படியும் செய்துவிடக் கூடாது என்கிறேம். தமிழ், எழிலும் பயனும் அளித்திடும இன்மொழியாகத் திகழ்வதன் பொருட்டு முந்தைநாளில் புலவர் பெருமக்கள் எடுத்துக் கொண்ட சீரிய முயற்சிகள் பலப்பல.

செதுமொழி சீத்த செவி செசவாக
முதுமொழி நீராப்புலவன் நா உழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசை சூழ்
புனலும்
செவியில் பொல்லாத சொற்களே
புகுவதில்லை
செவிகளின் வழிபாய்வது சான்றோர்
செய்யுட்களாம்;

நாவினையே ஏராசக் கொண்டு புலவர்கள் உழுதுண்டனர்.

அவர்தம் மொழிகள் பழங்கதைகளாக இல்லை; புது மொழிகள் தந்தனர்:—அவை தமை மக்கள்கொள்ளைகொண்டு உண்டனர்.

இத்தனைச் சிறப்புடன் புலவரும் அவர்தம் உழவின் பலனை உண்டு களித்த மக்களும்—வாழ்ந்திருந்ததனால் நாம் இன்று ஓர் உயர் தனிச்செம்மொழிக்கு உரிமையாளரானோம். உலகிலே எத்தனையோ தேயங்கள், இத்தகு மொழி பெற்றோமில்லையே என்று வாடிக் கிடந்திடுவதனையும், பிறமொழித் துணையினைத் தேடி அலைவதனையும் காண்கிறோம்.

கள்ளக் கடத்தலைக் குறித்திட 'இந்தி'யில் சொல்லொன்று கிடைக்காது திகைத்தனர் ஆட்சியாளர் என்றோர் செய்தி, கண்டோமல்லவா சின்னாட்களுக்கு முன்பு.

இயலாமையை இந்த அளவுக்குப் பெற்றுக் கிடக்கும் 'இந்தி' மொழிக்கு ஏற்றம் கிடைக்கிறது; தமிழ் இனத்துதித்தோரில் சிலர் அம்மொழி எம்மொழி என்றும் பேசிடக் கேட்கிறோம். கருத்தினை விளக்கிட எழுத்து ஒன்று போதும், ஈரெழுத்து மட்டும் போதும் பொருளளிக்க, சிறு சிறு எழுத்து மாற்றங்கள் மூலமே, பொருள் மாற்றம் பெரிதும் காட்டிட இயலும். அதனையும் அழகுபட, ஓசை நயத்துடன் எடுத்துக்கூற முடியும் என்ற இத்துணைச் சிறப்புடன் தமிழ்மொழி இருந்திடக் காண்கிறோம். எனினும் அதற்கென்று ஓர் தனி இடம், உயரிய இடம், பெற்றளிக்கும் திறமற்றுக் கிடக்கிறோம்.

இந்தத் 'தமிழ்' இனிமை பெற, 'இரவல்' எற்றுக்குப் பெற வேண்டும்? புள்ளிக் கலாபம் படைத்த மயிலுக்கு, வான்கோழிச் சிறகாலான தோகை தர வேண்டுமா! கிளி அழகு பெற, அதற்குப் பச்சை வண்ணம் பூச வேண்டுமா? கேட்க வேண்டாம் தம்பி! கோபிப்பர்! எண்ணிப்பார், அது போதும்!!

★

## ஆசிரியர் - மாணவர் - அண்ணா



ஒரு சமயம் அறிஞர் அண்ணா அவர்கள் கரூருக்கு வந்தபோது ஆசிரியாகளும், கைத்தறித தொழிலாளர்களும் வரவேற்பு அளித்தார்கள். அப்பொழுது அறிஞர் அண்ணா வரவேற்புக்குப் பதில் அளிக்கையில் ''ஆசிரியர்களும் நூல் சம்பந்தபட்டவர்கள்; கைத்தறித் தொழிலாளர்களும் நூல் சம்பந்தபட்டவர்கள்; இவர்கள் தங்களுடைய குறைகளை, நூலில் உள்ள சிக்கலைப்போன்று என்னிடம் கூறியுள்ளார்கள்; அந்தச் சிக்கலை நான் எடுக்க முயல்கிறேன்'' என்றார்.

★

விழுப்புரம் கல்லூரி திறப்பு விழாவில், ஒவ்வொரு மாணவரும் 400 மார்க்குகள் வாங்குவதற்கான வழியொன்றை முதலமைச்சர் அண்ணா அவர்கள் சொன்னார்—

''நானூறு மார்க்குகள் வாங்கும் மாணவர்களைக் காண்பதே இந்தக் காலத்தில் மிகவும் அரிதாகிவிட்டது; நானூறு மார்க்குகள் வாங்குவதென்பது அப்படியொன்றும் அரிய பெரிய காரியமல்ல; வருடக் கடைசியில் பத்துநாட்கள் படிப்பது என்ற நிலையை மாற்றி, வருஷ முதல் வாரத்திலிருந்தே படிக்க ஆரம்பித்துவிட்டால் ஒவ்வொரு மாணவருமே நானூறு மார்க்குகளை மிகச் சுலபமாக எடுக்கலாம்!''

ALL DOUBLING YARNS USED IN OUR TOWELS ARE DYED IN OUR OWN DYEING FACTORY

**Our Towels are all guaranteed first colours, and latest designs manufactured in our own handlooms**

## Sri Ganesh Textile,

High class Towels, Dhothies Manufacturers

*33 G, Muniappan Kovil Street,*
*Sait Colony, ERODE-1.*

அரசர்கள் அனைவரும் பதவி துறந்தபின்
இந்தியாவெங்கும் ஆட்சி செலுத்துபவை

## "யுவ்ராஜ்"

**பனியன்களே !**

நவநாகரிகமான பனியன்கள்
மற்றும் அதன் ரகங்களில்
சிறந்தவை எங்கள்
தயாரிப்புகளே!

Yuvraj Knittings,
TIRUPUR-4.



Phone: 409 Telegram: NATIONAL

**ராஜராஜேஸ்வரி டெக்ஸ்டைல்ஸ்**

தபால் பெட்டி எண். 258

**திருப்பூர்-2.**

டீலர்ஸ் :

**சிவகாமி மில்ஸ் லிட்.,**

**தேனூர்.**

பனியன் கம்பெனிகளுக்கு
வேண்டிய 18s, 20s, 30s
கோண் நூல்கள் சப்ளை
செய்கிறோம்.

*With the best compliments from:*

**C. NAVANEETHAN**

GENERAL MERCHANT,

**6, Venkatachalam Chettiar Street,**

*ERODE - I*

Phone: 1114 Post Box No. 72

Telegraph: "CEYESTY" Phone: 6

**Coimbatore - Salem Transport (Private) Limited.,**

226, CAUVERY ROAD, ERODE.

*Southern Railway Contractors at:*

GOBICHETTYPALAYAM &
SATHYAMANGALAM

IT WILL BE A PLEASURE TO TRAVEL IN OUR UPTODATE LEYLAND BUSES.

SPECIAL BUSES CAN BE ARRANGED FOR TOURISTS, PICNIC PARTIES AND MARRIAGES ON APPOINTMENT.

With the best compliments:

**A. Ramasamy Jayalakshmi Oil Mill**

Post Box No. 154

**88-A, Sathy Road, ERODE.**

Phone: 264 Tel: JAYAM

*Best compliments from:*

# KANDASAMY WEAVING FACTORY & CO.,

**WASTE COTTON UNIT,**

SALEM ROAD, KOMARAPALAYAM P. O.

(Salem District.)

SPINNERS OF: $10^s$ - $2/10^s$ - 2/17 & 4 / $20^s$

**QUALITY YARN**

Phone: 208 'BHAVANI' Tel: 'BUNGALOW'

உயர்ந்த ரக மல், லாங்லாத்,

காடா, வேஷ்டிகளுக்கு

## கோகி கிளாத்

விற்பனையாளர்:

K. M. S. L. சுந்தரராமன் & சன்

28, தங்கசாலைத் தெருவு,

சென்னை-3.

# VIJAYA TEXTILES

Manufacturers of:

HIGHCLASS BEDSHEETS

Post Box No. 45

**CHENNIMALAI.**

(Madras State)

partners:

T. KAMATCHIAPPAN

T. CHANDRA MOHAN



# What makes Parryware distinctive?

Everyone—leading architects, experienced construction engineers and regular users—speaks well of Parryware and its functional efficiency which makes it a distinctive and integral part of every home.
Only Parryware Vitreous combines luxurious elegance with strength and durability.

Available in pearl white and unique pastel shades: primrose, turquoise, sky blue, beige and mellow green.
● *Vitreous* ● *Completely hygienic* ● *Non-porous* ● *Craze-resistant*
Parryware Vitreous completes the modern home.

**Parryware VITREOUS**

(Approved suppliers to the D.G.S. & D.)
Manufactured from non-craze vitreous china with technical advice from
Doulton & Co. Ltd., England,
**by E.I.D.-PARRY LIMITED** (Incorporated in England. Liability of members is limited.)
Dare House, Madras-1.

FDS PW 833 B

With the best compliments of :

# BHARATH Refineries
# AND
# OIL MILLS

Manufacturers of :

"COMMANDER" BRAND REFINED OIL

**46. PARK ROAD, ERODE-1.**

PHONE : Office : 838
Resi : 1155

With the best compliments of :

## Erode Engineering Agency,

Sub Stockists :

"GODREJ" STEEL FURNITURE

Authorised Dealers :

"DUNLOPILLO" MATTRESSES, CUSHONS, DUNLOP BELTINGS & HOSES

14-B, Sivashanmugam Pillai Street,
ERODE,
(Coimbatore Dist.)

*Our Heartiest Greetings*

For the
60th Birthday of our
HONOURABLE CHIEF MINISTER
wishing for a long and prosperous life

From

## Thiru Murugan Lorry Transports

92, BHAVANI ROAD,
PERUNDURAI (H. O.)

Branch :
68, Village Road,
Nungambakkam, MADRAS-34.

**(T. M. L. T. Parcel Service)**

Branches all over in Tamilnad and Kerala States.

# AMBADI ENTERPRISES PRIVATE LTD

11-12, North Beach Road

MADRAS-1.

★

Distributors for :

HERCULES, PHILLIPS, B. S. A. & B. S. A. ARISTOCRAT SPORTS MODEL CYCLES AND COMPONENTS, BRAMPTON FITTINGS, BROOKS, HECTOR AND WRIGHT OLYMPIC SADDLES, T. I. CYCLE CHAINS AND MILLER DYNAMO LIGHTING SETS.

USE ALWAYS "CTM" FABRICS

## The Coimbatore Textile Mills (Depot)

POST Box No. 123

ERODE-1

எங்கள் நல்வாழ்த்துகள்

★

## முருகன் சைக்கிள் டிரேடர்ஸ்

P. B. 53.

பவானி

Tel : "KULLAPPA"
Post Box No. 51

PHONE : Office : 294
Resi : 308

# KULLAPPA TEXTILES

HANDLOOM CLOTH MANUFACTURERS

KOMARAPALAYAM P. O. (via) ERODE. S. RY.

Manufacturers of : DIAMON DHOTHIES, LINON DHOTHIES, LINON SAREES AND ART SILK BHAVANI RIBBONS ETC.

Use Always : "RAJA" RIBBONS & "APPLE BRAND" DHOTHIES AND SAREES.

எங்களிடம் தயாராகும் "ஆப்பிள் பிராண்டு" டைமன் வேஷ்டிகள்,
லினன் வேஷ்டிகள், லினன் சேலைகள் மற்றும் "ராஜா"
பவானி ஆர்ட் சில்க் ரிப்பன்களையே வாங்கி
உபயோகியுங்கள் !

Phone: 246

## R. K. SUNDARAM,

*Cycle Dealer*

29. Muthuranga Mudaliar Street,
ERODE.

Branch :
**DHARAPURAM**

Dealer in all brand cycles, cycle tyres, tubes and accessories, Motor cycle tyre & tube and children Tricycles.

Phone : P.P. 122
Post Box No. 79

## SIM

for
Quality and Durability

O

## The South Indian Mills (Depot)

CLOTH DEALERS,
ERODE-1.

S. M. I. டிரேட் மார்க்

# சன் மெட்டல் இண்டஸ்ட்ரீஸ்

11. தி. ராம. தி. வீதி,

தேவகோட்டை.

எவர்சில்வர் சாமான், உற்பத்தி & விற்பனையாளர்

## வேலவன் ஸ்டோர்ஸ்

107, பட்டமங்கலத் தெரு

மாயூரம்

சைக்கிள், சைக்கிள் சாமான்கள் விற்பனையாளர்கள்.

எங்களிடம் தவணை முறையில் சைக்கிள், மின்விசிறி, ரேடியோ கிடைக்கும்.

கிளை : வேலவன் ஸ்டோர்ஸ்,

டி. மு. கோர்ட் தெரு,

திருத்துரை பூண்டி.

## S. 875 அயோத்தியா பட்டணம் கம்பனி நூல் ஜமக்காள நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம் லிமிடெட்.

அயோத்தியா பட்டணம் P. o.

சேலம் Dt.

எங்களது சொந்த தொழிற் கூடத்தில் சொந்த சாயச்சாலையில் தயாராகும் உயர்ந்த ரக ஜமக்காளம், பெண்னி டைப் பெட்ஷீட், ஈசிச்சேர் கேன்வாஸுகள் முதலியன குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

இப்படிக்கு

K. கருப்பண்ணன்

தலைவர்

